# அமிர்த கங்கை

விலை ரூபா. 5/-

புரட்டாசி 1986



அமிர்த

# கங்கை

அமிர்தம்: 1 கங்கை: 9

தொலைபேசி: 22437

●

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி: | ரூ. | 5-00 |
| வருட சந்தா: | ரூ. | 60-00 |

●

விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| முன்பக்க பின் அட்டை | ரூ. | 1000-00 |
| பின்பக்க உள் அட்டை | ரூ. | 750-00 |
| சாதாரண முழுப்பக்கம் | ரூ. | 500-00 |
| அரைப்பக்கம் | ரூ. | 300-00 |
| கால் பக்கம் | ரூ. | 150-00 |

●

குறுநாவல்,
சிறுகதை,
கட்டுரை (அறிவியல், மருத்துவம்,
இலக்கியம், தத்துவம், கல்வி,
சமயம், வரலாறு) அனுப்ப

●

எல்லாத் தொடர்புகளுக்கும்

**அமிர்த கங்கை**

140, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
இலங்கை.

●

கௌரவ நிர்வாக ஆசிரியர்:
மயில். அமிர்தலிங்கம்

●

கௌரவ ஆசிரியர்
செம்பியன் செல்வன்

●

அச்சும், பிரசுரமும்:
சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ்,
140, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


# தொல் சீரிலக்கியமும், பாதுகாப்பு முறைகளும்

1981-ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி நள்ளிரவு
மின்னல் மின்னியது; நெருப்புப் பற்றியது.
நூலகம் எரியுண்டது; நூல்கள் சாம்பராகின.
இன்றோ—

இடி இடிக்கிறது; கட்டிடங்கள் தரை மட்டமாகின்றன. உயிர்கள் அநாதையாகின்றன.

தமிழ்ப்பகுதிகளின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வருகின்றது. எந்த விநாடி எந்த இடத்தில் உயிர் போகுமென்று உத்தரவாதமில்லாத நிலை. கணந்தோறும் விழிப்போடு நடமாட வேண்டிய சூழல்.

துப்பாக்கி வேட்டுக்களும், 'ஷெல்' தாக்குதல்களின் பாதுகாப்பு வலய எல்லைகளும் கேட்பார் எவருமின்றி விரிவடைந்து செல்கின்றன. சடலங்கள் சந்தையில், விலை கேட்பார் எவருமின்றிக் குவிந்து கிடக்கின்றன. மேன் மேலும் சடலங்கள் வந்து வந்து குவிகின்றன.

சர்வதேச சங்கங்கள் அரசாங்கங்கள் இது பற்றிப் பலமாக விவாதிக்கின்றன.

எரிப்பதா? புதைப்பதா?

முடிவுகள் தெரியும் வரை சடலங்கள் காத்திருக்கட்டும் ஆனால்—

உயிரைவிட மேலான... கிடைத்தற்கரிய நூல்கள்... தொல்சீரிலக்கியங்கள் சாம்பராகிக் காற்றிலே கரைகின்றனவே... இந்த இழப்புக்களை எப்படி மீட்டுக் கொள்வது? வருங்கால சந்ததியினருக்காக இவற்றை எப்படிப் பாதுகாத்துச் செல்வது?— இவை உயிரை விட உயர்வான கேள்விகள்.

மனித நாகரிகத்தின் மோசமான நடத்தை நூலகங்களை எரிப்பது. ஒரு இனத்தை உயிரோடு எரிப்பதை விட அந்த இனத்தின் இலக்கியங்களை சுட்டுப் பொசுக்குவதை எந்தவொரு மானிடமும் மன்னிக்கமாட்டாது. நாஸிஸ வெறியனை அடோல்ப் ஹிட்லரை இன்று வரை உலகம் மன்னிக்காதிருப்பதற்குக் காரணம் அவனது யூதமக்கள் கொலை மட்டுமல்ல காரணம் அவனும் அவனது பிரச்சாரப் பீரங்கியாக விளங்கிய கோயபல்ஸும் கொளுத்திய நூல்கள், நூலகங்களும் காரணம் தான் இதனால் பல அற்புதமான அரிய நூல்கள் இன்று கிடைத்தில. அதே போன்ற நிலைமையில் தான் தமிழீழ மக்கள் வாழ்கின்றனர்.

தென்கிழாசியாவிலேயே சிறந்ததொரு நூலகமாக, தமிழரின் அரும் பெரும்செல்வமான தொல்சீரிலக்கியங்கள் (Classics Literatrure) வரலாறுகள், சட்டம், வைத்தியம், சோதிடம் போன்ற அரிய நூல்களைக் கொண்டிருந்த யாழ்ப்பாண மாநகரசபை நூலகம் எரியுண்டதால் தமிழ்மக்கள் பலத்த இழப்புகளுக்கு ஆளாகியுள்ளனர்.

இதுமட்டுமன்றி, இந்த எரியூட்டலுக்குத் தப்பி தனியார் வீடுகளில் தஞ்சம் கொண்டிருந்த தொல்நூல்கள் - 'ஷெல்' தாக்குதல்களினால் பலத்த ஆபத்துக்களை எதிர்நோக்கியுள்ளன. எனவே.

இந்நூல்களை புதிய புதிய முறைகளிலே பல பிரதிகளை எடுத்தும், பாதுகாப்பு முறைகளை மேலும் உறுதிப்படுத்தியும் —பரவலாக பல்லிடங்களில் நூல்களை இடம்பெறச் செய்தும், வருங்காலச் சந்ததிகளுக்குக் கிடைக்க வழிகோலலாம்.

இதற்கு ஓரளவு செலவு ஏற்படுமாதலால், தனியாரோ, தனியார் நிறுவனங்களோ ஈடுபடுவதைவிட, யாழ் செயலகத்தில் இயங்கும் கலாச்சாரக் குழுபோன்ற அமைப்புக்கள் கவனம் செலுத்துவது சாத்தியக்கூறு நிரம்பியது.

தொல்சீரிலக்கியங்களை மறுபதிப்புச் செய்வது அதிக செலவையும், பாதுகாப்பில் சிரமத்தையும் ஏற்படுத்தும். எல்லாருக்கும் எல்லா இலக்கியங்களிலும் ஈடுபாடு ஏற்படாது. எனவே அச்சிட்ட பிரதிகள் விநியோகமாகாது ஓரிடத்திலேயே தேங்கிவிடும். அதுசெல்லரித்துப் போகவும் வாய்ப்புண்டு. ஆகவே,

தேவையான அளவுப் பிரதிகளை மட்டும் அச்சிட்டு' சிறந்த முறையில் பாதுகாக்க பலபுதிய சாத்தியக்கூறுகள் யாழ்ப்பாணத்திலேயே எழுந்துள்ளன.

தேவையான நூல்களுக்கு 'போட்டோ -ஸ்ரட்' (photo -Stat) 'மைக்ரோ பிலிம்' (Micro -Film), 'புளொக்' தயாரித்தல் மூலம் குறைந்த செலவில் பிரதிகளை எடுக்கமுடியும். எனினும் 'மைக்ரோ பிலிம்' வசதி குறைவாக இருப்பதால் (இது படம்பிடிக்க மட்டுமல்லாது, அதனைப் பயன்படுத்தவும் மேலதிக வசதிகள் தேவை) முதலிரு முறைகளில் அதிக கவனம் செலுத்தி பிரதிகளைத் தயாரித்தலவசியம். மிகவும் துரிதகதியில் செயல்ப செவ யதும் கவனிக்கப்படவேண்டியது.

செம்பியன் செல்வன்

பேட்டியை அளிப்பவர், யாழ். மாவட்டப் பிரபல வர்த்தகப் பிரமுக திரு. எஸ். வி. முருகேசு. புதியதொரு கோணத்தில் யாழ். மாவட்ட வர்த்தகர்களையும், அவர் தம் பணியையும், பிரச்சினைகளையும் இனம் காட்டும் இப் பேட்டி, சிறந்ததொரு 'பொருளியல்' நிபுணரின் கருத்தாகவும் இருக்கிறது. பேட்டி கண்டவரும் ஒரு வர்த்தகத் துறைப் பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்கது.

—செம்பியன் செல்வன்



தொழிலதிபர் பேட்டி:

# மறைகரங்கள்

பேட்டி காண்பவர்: 'செல்வி ராதா'

**கே.** நீங்கள் இன்று யாழ்ப்பாணத்தில்முன்னணியிலுள்ள ஒருவர்த்தகப் பிரமுகர் என்பது பலரது உறுதியான முடிவு. இத்தகைய நிலைக்கு நீங்கள் எவ்வாறு உயர்ந்தீர்கள்?

**ப.** எனது வர்த்தகதுறை அநுபவம் நீண்டது. அது 1932ல் எனது தமையனாரின், கடையில் 15 வயதில் அவரிற்கு உதவியாக சேர்ந்ததும் ஆரம்பமாகிறது. அப்பொழுது அவர் V. K. கந்தையா என்ற பெயரில் பல சரக்கு வியாபாரம் நடத்தி வந்தார். அவரிற்கு உதவியாளனாகச் சேர்ந்த நான் 1942ல் அக்கடையை எனது தமையனார் அரசாங்க கொன்ருக்ற்றுகளை பாரமெடுத்துக் கொண்டுபோக ரூ. 400 மூலதனத்துடன் பெற்றுக் கொண்டேன். அம் மூலதனம் அப்பொழுது ஒரு குறிப்பிடத்தக்க தொகை நான் பாரமேற்றதும் அக்கடைக்கு S. V. முருகேசு என எனது பெயரையே இட்டேன். அப்பொழுது அது ஒரு 2 உதவியாளுடன் இயங்கிய கூப்பன் கடை. இந் நிலையில் 1946ம் ஆண்டு அரசாங்க கொன்ருக்றுகளையும் எடுக்கத் தொடங்கினேன். இவை பெரும்பாலும் ஆஸ்பத்திரிகளிற்கு உணவு வழங்குதலாகவே இருந்தது. இவ்வொப்பந்த உணவு வழங்கல் 1953 வரை செய்து கொண்டிருந்தேன். 1950 ம் ஆண்டளவிலேயே நெல்லியடியில் எனது வியாபாரம் முன்னணி வகிக்கும் ஒன்றாக மாறி விட்டது. மலிவு விலையில் பொருட்களை விற்றதே அதற்குக் காரணம் எனலாம். அடுத்த கட்டமாக 1952 இல் லொறிகளை வாங்கி போக்கு வரத்து சேவையில் ஈடுபட்டேன். கடையும் இப்போக்குவரத்து சேவையிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதே 1955இல்கிளிநொச்சியில் காணி வாங்கி விவசாயமும் செய்ய ஆரம்பித்தேன். 1957 இல் கிளிநொச்சியில் அரிசி ஆலை ஒன்றை அமைத்தேன். அரசாங்க கோட்டா எனக்கு கிடைத்ததால் அரிசி ஆலை ஒரு லாபகரமான தொழிலாக மாறி எனக்கு கை கொடுத்தது.

1963 இற்கு முன்னர் நாலு துறைகளில் ஈடுபட்டிருந்தேன். அவை நெல்லியடியில் கடை அரசாங்க நிறுவனங்களிற்கு உணவு கொன்ருக்ட், லொறி போக்குவரத்துச் சேவை அரிசி ஆலையும் விவசாயமும், ஆனால் பின்னர் லொறி போக்கு வரத்தினால் வருமானவரித் தொல்லை எழவே 1963 இல் அதனை நிறுத்தி அம் மூலதனத்தைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் ஆஸ்பத்திரிவீதியில் M. C கனகரட்ணம் என்பவருக்கு உரித்தாயிருந்த கடையை வாங்கி S. V. முருகேசு எனப் பெயரிட்டு பலசரக்கு வியாபாரத்தில் ஈடுபட்டேன், அக்காலத்தில் அரிசி ஒரு பிரதான தொழிலாக இருந்தது. பின்னர் ஸ்ரீமா அரசாங்க காலத்தில் அரிசி, உழுந்து. மிளகாய் வாங்கி கட்டி வைத்து விற்கும் தொழில் வாய்ப்பாக இருந்தது, இப்படியிருக்கும் போதே ஞான் லீவர் பிறதேர்ஸ், யூனியன் கார்வைட் போன்ற நிறுவனங்களுக்கு விநியோகஸ்தராக மாறினேன். 1980 ஆம் ஆண்டின் பின்னர் குறிப்பாக 1983இன் பின்னர் பல கொழுபுக் கம்பனிகளின் விநியோகஸ்தராகவும் எஜண்டாகவும் மாறினேன். இன்று நான் 50-க்கு மேற்பட்ட ஊழியர்களை வைத்து வியாபாரத்தை இயக்குகின்றேன். எனது வியாபார வளர்ச்சி காலத்திற்கு ஏற்றுப் போல் வியாபாரத்தின் இயக்கங்களிற்கு ஏற்ப நானும் இயங்குவதால் ஏற்பட்ட ஒன்று தான்.

**கே.** நீங்கள் அதிகளவான கொழும்பு சார் விநியோக நிறுவனங்களின் யாழ் மாவட்டத்திற்கான விநியோகஸ்தராக நியமிக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் விநியோகஸ்தராக இருக்கும் முக்கிய நிறுவனங்கள் எவை? அவற்றின் முக்கிய பொருட்கள் யாவை?

**ப.** நான் இலங்கையிலுள்ள மூன்று பிரதான பால்மா விநியோகிக்கும் நிறுவனங்களான நெசல்ஸ்ஸ் கம்பனி, லங்கா மில்க்வூட்ஸ் லிமிடட், ஜென்ஸ் ஓவர்சீலஸ் லிமிட்டம் ஆகியவற்றின் விநியோகஸ்தன். இவை நெஸ்பிறே லக்ரோசன், மில்க்மெயிட், ரின் பால், லக்ஸ்பிறே, அங்கர் போன்ற வியாபார குறிகளுடன் தமது பொருட்களை விற்கின்றன. டாலி பட்டலர் அன் கம்பனி, யூனியன் கார்வைட், லீவர் பிறதேர்ஸ்பசென் சரோலிஸ் கம்பனி, என்,

வற்றிற்கும் விநியோகஸ்தன். டாவி பட்லர் அன் கம்பனி, விவா (VIVA) மொல்டோவா, கல்வ அன் கேற் SUNHILL பொருட்களை விநியோகிக்கும் நிறுவனம் யூனியன் காபைட் எவரெடி பற்றரிகளை விற்கும் நிறுவனம் லீவர் பிறதேர்ஸ், சன்லைட், லக்ஸ், போன்ற சவர்க்காரங்களையும் அஸ்ரா மாஜரின், S. R SIGNAL பற்பசை போன்றவற்றை விற்பனை செய்தது. யானை நெருப்பெட்டி டொன் கரோலிஸ் நிறுவனம் விற்பனை செய்கின்றது. இவற்றை விட வேறு கம்பனிகளிலிருந்தும் நேரடியாக பெரும்பாலும் பொருட்களைப் பெற்றுக் கொள்கிறேன். இவை மக்களிற்குத் தேவையான அத்தியவாசியப் பொருட்களாகும்.

**கே.** இவ்வாறு பல நிறுவனங்களின் விநியோகஸ்தராக மாறியது. யாழ். கூட்டுறவுச் சங்கத்தின் சரிவின் காரணமாகவா? அல்லது ஒரு தொடர்ச்சியான வளர்ச்சியா?

**ப.** யாழ். கூட்டுறவுச் சங்கத்தின் சரிவு காரணமாக என்று கூற முடியாது. ஒரு தொடர்ச்சியான வளர்ச்சி என்றும் கூறமுடியாது. ஆனல் 1983ன் பின் பல நிறுவனங்கள் என்னை நாடி என்னைத்தமது விநியோகஸ்தராக நியமித்துள்ளனர்.

**கே.** நீங்கள் கொழும்பு விநியோக நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளும் பொருட்களின் தொகையும் பெறுமதியும், புறக்கோட்டைச் சந்தையில் பெறும் பொருட்களின் பெறுமதியிலும் தொகையிலும் கூடுதலாகவுள்ளதா?

**ப.** கொழும்பு சார் கம்பனிகளிலிருந்து பெறுகின்ற பொருட்களே கூடுதலாகவுள்ளன. நவதானியங்களே புறக்கோட்டைச் சந்தையிலிருந்து பெறுகிறேன். நான் கொழும்புக் கம்பனிகளின் விநியோகஸ்தனுக இருப்பதால் புறக்கோட்டை சந்தை என்னைப் பாதிப்பதில்லை. சீனியும் மாவும் யாழ்குடா நாட்டிலேயே அரசாங்கத்திடம் பெரும்பாலும் பெற்றுக் கொள்கிறோம். எனவே புறக்கோட்டை சந்தையின் பாதிப்பு எமக்கு அதிகம் இல்லை.

**கே.** புறக்கோட்டைச் சந்தையிலோ அல்லது கொழும்பு சார் விநியோக நிறுவனங்களிலோ நீங்கள் பொருட்களை கொள்வனவு செய்யும் போது உங்களிற்கு எத்தகைய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக 1983ம் ஆண்டின் பின் சிறப்பாக எழுந்துள்ள பிரச்சினைகளைக் கூறமுடியுமா?

முதலாவதாக பொருட்களை கொள்வனவு செய்வதில் தற்பொழுது கொழும்பு கம்பனிகள் காசாகவே செலுத்தப்பட வேண்டும் என்று கட்டளையிடுகின்றன. இதனல் எமக்கு நம்பிக்கைக்குரிய ஒருவர் எப்பொழுதும் கொழும்பில் இருக்க வேண்டியுள்ளது. அவரே காசினை வங்கியிலிருந்து எடுத்துச் சென்று கட்ட வேண்டியுள்ளது. காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. காசினை கொழும்புக்கு அனுப்பவதில் சிரமங்கள் உண்டு. தொலைபேசி இயங்கா விட்டால் வங்கியால் தந்தி மூலம் பணத்தினை கொழும்பு வங்கிக் கிளைக்கு மாற்ற முடியாதுள்ளது (T. T.). தொலைபேசி இயங்காமலிருக்க வங்கியில் கட்டிய காசினை மீண்டும் பெற முடியாதிருப்பதால் வேறு வழி மூலமும் அனுப்ப முடிவதில்லை. காசினை கொழும்பில் ஒருவர் கொண்டு திரியும் போது காடையர் பயம், திருட்டுப்பயம் உள்ளது. எமது லொறிகள் கொழும்பில் 'கம்பனிகளுக்குள் செல்வதற்கு பல சிரமங்கள் உள்ளன. நீண்ட பரிசோதனைகளைத் தாண்டிக் கூட சிலசமயம் உள்ளே செல்ல முடிவதில்லை. கொழும்பில் இன்று யாழ்ப்பாண லொறிகளை பொருட்களுடன் நிறுத்தி வைத்திருப்பதில் பல சிரமங்கள் உள்ளன. யாழ்ப்பாணம் போகக் கூடிய லொறிகளுக்குக் கூட சில சமயங்களில் கொழும்பில் தட்டுப்பாடு ஏற்படுவதால் லொறிக் கூலி 15,000 ரூபாவையும் விட அதிகரிக்கிறது.

**கே.** பொருட்களை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இடநகர்த்துகின்ற போது எத்தகைய பிரச்சினைகள் எழுகின்றன. அவை உங்களால் எவ்வளவு தூரம் கட்டுப்படுத்தப்படக் கூடிய வையாகவுள்ளன?

**ப.** முன்னர் நாம் கொழும்பில் பொருட்கள் லொறியில் ஏற்றப்பட்டுவிட்டது என அறிந்துகொண்டால் அவை எமது களஞ்சியங்களிற்கு வந்துவிட்டது போன்ற உறுதியுடன் செயல்பட்டோம். ஆனல் இன்று எமது களஞ்சியங்களிற்கு அவை பூரணமாக வந்தடையும் மட்டும் எமக்கு எந்த உறுதியும் இருப்பதில்லை. செட்டி கப்பலுக்கு தெய்வம்தான்துணை' என்பதுபோல் எமது நிலை. எதிர்வு கூற முடியாத சூழ்நிலைகள் தான் எப்பொழுதும். வவுனியாவிற்கு அப்பாலும் இப்பாலும் இந்நிலைதான். களவுபோன பொருட்களுக்கோ எரிந்த பொருட்களுக்கோ நட்டஈடும் பெற முடிவதில்லை. பெரும்பாலான வர்த்தகர்கள் இன்று இவைபோன்ற துன்பகரமான அநுபவங்களைச் சந்தித்துள்ளனர்.

**கே.** பொருட்களினதும், வாகனங்களினதும் கொள்ளைகளை எவ்வாறு தடுக்கலாம் எனக் கருதுகிறீர்கள்? எத்தகைய நடவடிக்கைகளை வர்த்தகர்கள் எடுத்துள்ளார்கள் எனவும் விளக்குவீர்களா?

**ப.** பொருட்களினதும் வாகனங்களினதும் கொள்ளைகளை எம்மால் தனிப்பட தடுக்க முடியாது. நாம் முக்கியமாக தனிப்படவும், வர்த்தக சங்கங்கள் மூலமும் இயக்கங்களின் உதவியை நாடியுள்ளோம். அவர்களின் உத்தரவாதமும் ஆதரவும் தான் இதனைத் தடுக்கக் கூடிய முக்கிய வழி. அரசாங்க அதிபர் மூலம் வவுனியாவிற்கு அப்பால் ஏற்படும் கொள்ளைகளை நிறுத்தஉதவி கோரியுள்ளோம். இது இன்னும் ஒரு பயனுள்ளவொன்ருகக் கருதமுடியாது. மிக அண்மையிலும் பால்மா ஏற்றி வந்த லொறி ஒன்று எரிக்கப்பட்டுள்ளது. வர்த்தக சங்கம் மூலம் நாம் கடையடைப்பு, ஹர்த்தால் முதலியவற்றை கொள்ளைகளுக்கு எதிராகச் செய்தோம். மேலும் பொதுமக்களுக்கு பத்திரிகை மூலம் நிலைமைகளை விளக்கியுள்ளோம்.

**கே.** ஒரு வர்த்தகன் என்ற முறையில் நீங்கள் எதிர் நோக்கும் வேறு பிரச்சினைகள் எவை?

**ப.** வங்கிகள் இன்று காசை ஏற்பதில்லை. ஆனல் அவர்கள் கேட்பது போல் நாம் யாழ் கோட்டைக்குள் சென்றும் பணம் கட்ட முடியாத நிலையில் உள்ளோம். வங்கி மேலதிகப்பற்று, கடன்வசதிகள் இப்பொழுது வங்கியினல்வழமுருக மட்டுப்படுத்தப்பட்டுவிட்டன. எனவே திடீர் என பணத்தைத் திரட்டல் மிக கஷ்டமான ஒன்ருகி விட்டது. இன்று எமது பொருள் நட்டங்களுக்கு காப்புறுதி பெரிதும் துணை நிற்பதாகக் கூறமுடியாது. ஷெல் எதுவும் பொருள் நட்டத்தை ஏற்படுத்துமோ என்பதே சதா வியாபாரிகளின் பயம். அண்மையில் புடவை வியாபாரிகள் இதனல் பல லட்சங்கள் நட்டப்பட்டதை நாம் அறிவோம். 1000 மீற்றர் பாதுகாப்பு வலயம் இன்றும் யாழ். வர்த்தகர்களுக்கு மனநிம்மதியற்ற ஒன்று. ஆரம்பத்தில் நான் வர்த்தக சங்கத் தலைவனுக இருக்கையில் சங்கரீதியாக ஊர்வலம், ஹர்த்தால் வைத்து இதனைத் தடுக்க முயற்சித்தோம். 1983 டிசம்பர் அளவில் கிழமைக் கணக்காக நாம் வியாபாரத்தை நிறுத்தி வைத்திருக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்ட

தால் எமக்கும் வாடிக்கையாளருக்கும் பல சிரமங்கள் ஏற்பட்டன.

**கே.** நீங்கள் கூறியவற்றிலிருந்து எதையும் எதிர்வு கூற முடியாத சூழ்நிலைகளிலேயே வியாபாரிகள் இயங்குகின்றனர் எனத் தெரிகிறது. இத்தகைய சிரமமான சூழ்நிலையில் யாழ். வாசிகளுக்கு நீங்கள் அளிக்கும் உதவிகள் எவை எனக் கருதுகிறீர்கள்?

**ப.** உயிர் உடைமைகளுக்கு உத்தரவாதம் இல்லாத இச் சூழ்நிலையில் வர்த்தகர்கள் பொருட்களை பல சிரமங்களுக்கு மத்தியில் கொணர்ந்து மக்களுக்கு அவர்களின் இடத்திலேயே கிடைக்கக் கூடியதாகச் செய்கிறார்கள். இதனால் யாழ். மக்கள் பட்டினியில் மாயாமல் தடுக்கிறோம். சிறப்பாக என்னைப் போன்றவர்கள் பொருட்களைக் கொழும்பில் இருந்து கொண்டு வந்து விநியோகம் செய்யாவிடின் பதுக்கலும் கள்ளச் சந்தையும் ஏற்பட்டிருக்கும். பொருள் தட்டுப்பாடு இல்லாமல் நாம் பார்த்துக் கொள்வதால் விலையேற்றத்தை தடுத்து வைத்திருக்கிறோம்

**கே.** வேறு வழிகளிலும் நீங்கள் அவர்களுக்கு உதவுகிறீர்களா?

**ப.** ஆம். இன்று பெரும்பாலானோர் சம்பளம், பென்ஷன் என்பவற்றை காசோலைகளாகவே பெற்றுக் கொள்கின்றனர். அவற்றை நேரடியாக அவர்களிடம் இருந்து பெற்று அதற்கீடாக பணமாகவோ பொருளாகவோ கொடுக்கிறோம். மேலும் சில்லறை வியாபாரிகள் தங்களது கொள்வனவின் போது இக்காசோலைகளைத் தரும்போது நாம் அவற்றை ஏற்றுக் கொள்வதால் மக்கள் சிரமமின்றி தமது காசோலைகளை கோட்டையிலுள்ள வங்கிக்குப் போகாது தமது ஊரிலேயே அவற்றை மாற்ற முடிகிறது. கூட்டுறவு நிறுவனங்கள் கூட எம்மிடம்கடன்முறையில்பொருட்களைப் பெறுவதும் மக்களுக்குநாம்மறைமுகமாக உதவும் ஒன்றே. மேலும் அகதிகள் அமைப்புகளுக்கும் தனிப்பட்ட முறையில் பல உதவிகளைப் புரிந்துள்ளேன். ஏன் இலக்கிய துறையினருக்குக் கூட எப்பொழுதும் எனது அனுசரணை உண்டு.

**கே.** இன்று வர்த்தகர்கள் புரியும் கடமைகள் அவர்களின் நலன்களையும் பொதுமக்களின் நலன்களையும் கொண்ட ஒரு வலைப்பின்னல் என்று கூறக்கூடியதாகவுள்ளது. வர்த்தகரில் சேவை இல்லாதிருந்தால் யாழ் வாசிகள் என்ன சிரமங்களை பெற்றிருப்பார்கள்?

**ப.** தட்டுப்பாடும் கறுப்புச் சந்தையும் நிலவி பட்டினியும் பொருட்களுக்காக அலையும் நிலையும் கியூவும் தான் ஏற்பட்டிருக்கும். கலகங்கள் கூட ஏற்பட்டிருக்கலாம்.

**கே.** 1983ஆம் ஆண்டின் பின்னர் வர்த்தக நடவடிக்கைகளில் யாழ்ப்பாண வர்த்தகர்கள் அநுபவிக்கும் மாற்றங்கள் எவை எனக் கருதுகிறீர்கள்.?

**ப:** யாழ்நகர வர்த்தகர்கள் நகரத்திற்கு வெளியேயுள்ள வங்கிகளின் காசோலைகளை ஏற்றுக் கொள்வதில்லை. யாழ் குடா நாட்டிற்கு வெளியே எமது வாகனங்களை விற்பனைக்கு அனுப்புவதில்லை. சில்லறைவியாபாரிகளுக்கோ வாடிக்கையாளருக்கோ கடன் வழங்குவதும் நிறுத்தியிருக்கிறோம். வர்த்தகர்களிடம் நட்புறவும் நம்பிக்கையும் குன்றியிருக்கிறது. வியாபாரத்தில் போட்டி அதிகரித்துள்ளது. வியாபாரிகள் வியாபாரத்திலோ வேறுதுறைகளிலோ புதிய முதலீடு செய்யத்தயங்குகின்றனர். 1983இன் பின்னர் யாழ்குடாநாட்டிற்குவெளியில் சிங்களப்பகுதிகளில் கடைகள் வைத்திருந்தோர் இங்கு வந்து புதிய வியாபாரங்களை ஏற்படுத்தியிருப்பதால் போட்டி ஏற்பட்டுள்ளதற்குக் காரணமாகும். ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் கூட சில்லறை வியாபாரிகளாக உருவாகியுள்ளனர். அண்மையில் தீவுப்பகுதிபோன்ற பல பாதிக்கப்பட்ட பகுதிகளும் அதிகரித்து வருகின்றன.

**கே.** 'யாழ்ப்பாண மக்கள் ஒரு தனிப்பட்ட பண்புகளைக் கொண்ட ஒரு சந்தை என சந்தைப்படுத்தல் துறையிலுள்ளோரால் சிலர் கருதுகிறார்கள். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

**ப.** தென்னிலங்கையில் வாழ்பவரிலும் எமது மக்கள் சிக்கனமானவர்கள். தரமான பொருட்களைத்தான் வாங்குவார்கள். உசமாக Singer மெஷின், சன்லையிட் சவர்க்காரம், யானை நெருப்பெட்டி என தரமான பொருட்களையே வாங்குகிறார்கள். புதிய பொருட்களை சிந்தித்தே வாங்குவார்கள்.

**கே.** பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இயங்கும் யாழ்ப்பாண வர்த்தகர்கள் தமக்கு போதுமான வெகுமதிகளையும் பொதுசன ஆதரவினையும் மனநிறைவு தருமளவிற்கு பெறுகிறார்களா? உங்கள் கருத்தென்ன?

**ப.** பொதுமக்கள் எமது முயற்சியை வரவேற்கிறார்கள். ஆதரவும் தருகிறார்கள். இதனை எனதுகடைக்கு வருபவர்களின் தொகையிலிருந்து அறிகிறேன். இவ்வாதரவால் சிறந்த வெகுமதியைப் பெறுகிறோம் என்று சொல்வதிலும் திருப்திகரமான அளவிற்கு வியாபாரத்தை திறம்பட நடக்கக்கூடியதாகவுள்ளது. ஆனல் ஆபத்தும் இணைந்துள்ளது. இருப்பினும் பொதுசன ஆதவிருக்கும் வரை எம்மைப்போன்றவர்கள் அவர்களுக்கு உதவும் இம்முயற்சியிலிருந்து பின்வாங்க மாட்டார்கள். இதுவே பொதுவாக வர்த்தகத் துறையிலுள்ளவரின் கருத்தாக இருக்கும் என நம்புகின்றேன்.

## முட்டை மயிர்

சூரியன் காலடியில் நிழலாக ஒதுங்க...
ஒரு விவசாயி வயலிலே தானியத்தை விதைத்துக் கொண்டிருந்தான்.
அவ்வழியே இரு அறிஞர்கள் ஏதேதோ விவாதித்துக்கொண்டு வந்தனர்.
விவசாயியையும் அவன் உழைப்பையும் கண்ட அவர்கள் சிந்தனை பாதை மாறியது.
விதையிலிருந்து பயிரா?
பயிரிலிருந்து விதையா?
விளைச்சலுக்கு ஆதாரம் விதையா... நிலமா?
தர்க்கம் நீண்டுகொண்டே போயிற்று.
பசி அவர்கள் வயிற்றைக் கிளறியபோது— தர்க்கத்தை நிறுத்தினர் பசிதான் எல்லாவற்றிற்கும் ஆதாரமா? சுற்றும் முற்றும் பார்த்தனர்.
விவசாயி மரத்தடியில் அமர்ந்து ஆனந்தமாக உண்டுகொண்டிருந்தான்.

**செம்பியன் செல்வன்**

# நிகழ்வுகள், நிகழ்தகவுகள் அல்ல...

ஸ்வாதி

பரிசு நாவல்

( சென்றஇதழ் தொடர்ச்சி )

"ஐ ஆம் வெரி சொரி. எங்கட அம்மாவால உமக்குத்தான் கஷ்டம் என்ன .. எண்டாலும் அது உம்மட கடமையும் தானே? பை த பை .. வன் றிக்வெஸ்ட்... எங்கள விட வேற இடத்தில குறையச் சீதனம் கேக்கினமெண்டு அவவை வேற யாருக்கும் மரி பண்ணிக் கொடுத்திடாதையுமென்ன?'' என்று பகிடி விடுவது போல் சொன்னார். அவரை அடிக்கடி அவன் வியப்போடு கண்ணாடி வழியாகப் பார்த்துக் கொண்டு வந்தான். அவனுக்கு எதுவுமே பேச வரவில்லை.

''எப்பிடி .. நீர் எமிரேட் போற விசயமேதும் சரிவந்திருக்கே?'' ஆவலுடன் கேட்கிறார்.

''சௌதியில .. ஒரு டிரைவர் வேலை கிடைச்சிருக்கு. அது தான் எல்லா ஒழுங்குகளும் பாக்கிறன். ஒரு மூண்டு, நாலு மாசத்துக்கிடையில போக வேணும்.''

''அப்பிடியே? மெத்தச் சந்தோசம். நீர் போறதெண்டா அதுக்கிடையில மூத்தவவின்ர மரிஜை முடிச்சிட்டுத் தான் போவீர் என்ன? அவவின்ரை விஷயமெல்லாம் கொம்பிளீட் தானே? வெளியில போன பிறகு எங்கட மர்ரரையும் கொஞ்சம் சூனா நடத்தப்பாருமன்'' சிரிப்பு மாறாமல் அவர் சொல்லிக் கொண்டே போகிறார். அவன் தேள் கொட்டிய திருடனாக பஸ் ஓட்டினான்.

* *

அடுத்த தரிப்பு முறுகண்டிப் பிள்ளையாருக்கு முன்னால்...

பிள்ளையார் கோயிலின் புறச்சூழல் கடைகளில் வியாபாரம் சூடு கண்டிருந்தது. 'தேங்காய்,' 'கற்பூரம்,' 'கச்சான்' என்று பையன்கள் வியாபார அறை கூவலில் போட்டி போட்டுத் தொண்டை நீரைத் தீர்த்துக் கொண்டிருந்தனர். சாப்பாட்டுக் கடைகளில் 'ஒருகை பார்க்கும் படலம்' நடந்து கொண்டிருந்தது.

கோவிலின் முன் கற்பூரம் அனலாக எரிந்து கொண்டிருந்தது. அவனும் கற்பூரம் கொளுத்தித், தேங்காய் உடைத்துக், கோவிலைச் சுற்றி வந்து, பிள்ளையார் முன் விழுந்து கும்பிட்டான். ''முறிகண்டிப் பிள்ளையாரே! என்ர சகோதரங்கள் சந்தோசமா வாழ அருள்



செய்யும் அப்பனே! என்ர குடும்பம் நல்லா இருக்கத் துணை செய்யும் ஐயனே! இந்தச் சிக்கலிலிருந்து விலகி, எல்லா விக்கினங்களும் நீங்கி, எல்லாம் நல்லபடியா முடிய நீர் தான்உதவி செய்யவேணும்.''பிராத் தனை முடிந்து திரும்பிப் பார்த்தான். தேவனுடைய பிராத்தனை இன்னும் முடியவில்லை. அவன் தன்னுடைய குடும்பத்துக்கு மட்டும் தானே பிராத்தித்தான்? ஆனால்... தேவன் அப்பிடியில்லையே... எத்தனையோ குடும்பங்களுக்காகப் பிராத்திக்க வேண்டியவனல்லவா? "கும்பிட்டு விட்டு வந்த போது அந்த வீரனின் கண்களும் கசிந்திருந்தன.

"தேவன்! ஏன் உன்ர கண் கலங்கியிருக்கு?''

"ஒண்டுமில்லை. எங்கட நிலைமை களைப் பற்றிப் பிள்ளையாரோட பேச்சு வார்த்தை நடத்தினன். அது தான்...முந்தின யுகங்களில- பூமியில அநியாயங்கள் நடக்கேக்கிலயெல் லாம் கடவுள் ஒவ்வொரு அவதார மெடுத்து வந்து அந்த அநியாயங் களை அழிச்சவாரம். இப்ப மட்டும் ஏன் அண்ணை கடவுள் வராமலிருக் கிறார்? இங்க நடக்கிற அநியாயங் களுக்கு என்ன அவதாரம் பொருந்து மெண்டு இன்னும் கடவுளுக்குப் பிடி படேலையோ? 'பூமியில அநீதி நடக் கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலயும் நீதியின் பக்கம் நான் பிறப்பே னென்று பகவத் கீதையில சொன்ன கண்ணன் இங்க வெடிக்கிற பம்ஸ் களையும், எஸ். எல். ஆர்களையும் பாத்துப் பயந்திட்டாரோ அண்ணை?''

"சில நேரங்களில- சாமி கும் பிடப் போனூ- இது தான் நினைவில வரும். பிறகெங்க கும்பிட மனம் வரும்? பிள்ளையாருக்கும் மற்றவைக்கும் திட்டுத்தான். ஆனூ சாமி எனக்குப் பதிலா சொல்லப் போகுது? கடைசில... ஆத்தாம... கண் கலங்கிறதும் நான் தான். எண் டாலும் அழமாட்டன். அழுறவன் கோழை என்னைப் பொறுத்தவரை.'' என்று தேவன் சொன்ன போது அவன் மௌனமாகத் தலையைக் குனிந்து கொண்டான். என்றாலும் தேவனிடமிருக்கும் மனவுறுதி தன் னிடமில்லை யென்பதை தனக்குள் ஒப்புக் கொண்டான். இருவரும் கோவிலுக்கெதிரிலிருந்த சாப்பாட் டுக் கடையொன்றினுள் நுழைந்து- சாப்பிட அமர்ந்தனர்.

"என்னடா யோசிக்கிறாய்?''

"ம்... எங்கட கஷ்டமெல்லாம் எப்ப தீரும்? இவ்வளவு கொடுமை யளையும் ஏன் எங்கட இனம் அனுப விக்க வேணும்? முந்தின பிறப்புக ளில செய்யிற பாவங்களுக்கு இந்தப் பிறப்பில தண்டனைகுடுக்கிறதெண்டு ஆச்சி சொல்லுவா. அப்ப...எங்கட முழு இனமுமே போனபிறப்பில பாவம் செய்ததுகளா? பாவியள் தான் தமிழராப் பிறக்குதுகளா? எங்கட இனத்தை அழிக்கிறவன் களா? கடவுளின்ர அவதாரங்கள்? அல்லது இவங்கள் இந்தப் பிறப்பில செய்யிற பாவங்களுக்கு அடுத்த பிறப்பில கடவுள் தண்டனை குடுப் பாரெண்டு நாங்கள் பாத்துக் கொண்டிருக்க வேணுமா? அப்பிடி யிருந்தா பிறகு இங்க 'தமிழன், எண்டு ஒருத்தனும் இருக்க மாட் டான். ஏனண்ணை கடவுள் அவங்கட பக்கமே நிக்கிறார்?''

''எத்தினை பெடியள் அநியாய மாச் செத்திருக்குங்கள்? எத்தினை பொம்பிளைப் பிள்ளையளத் துடிக்கத் ...துடிக்கத்...கடவுளே? எனக்கு இதையெல்லாம் நினைக்கேக்கில... உடம்பெல்லாம் பதறுதண்ணை. என் னெண்டு விவரிக்க முடியாதவொரு ஆவேசம் ஒவ்வொரு நரம்பு முடிச் சுகளிலயும் பரவிப் பத்தி எரியிற மாதிரியிருக்கும். எங்கட இனத்துக்கு ஏன் இப்பிடியொரு சாபக்கேடு? இதுக்கு எப்ப விமோசனம் கிடைக் கப் போகுதெண்டு நினைக்க, நினைக்க கண்ணுக்கு முன்னால ஒரே இருள் தான் தெரியுது.''

தேவன் சொல்வதைக் கேட்க அவனுக்கும் கவலையாகத்தான் இருக் கிறது. தேவன் சொல்வது நூற் றுக்கு நூறு உண்மை. 'எங்களுக்கு ப்ப விமோசனம் கிடைக்கப் போகுது?'' தேவனுக்கு மட்டுமல்ல -தேவனைப் போல் எத்தனையோபேர் இன்று, இப்பிடித் துடிக்கின்றனர் தான். துடித்துத்தான் என்னபலன்? சிறுபான்மை இன்னும் சிறுகச் சிறு கச் சிறுகிக் கொண்டுதான் போகின் றதே தவிர ஒரு விடிவெள்ளியின் தோற்றத்திற்கான அறிகுறி இன் னும் தென்படவில்லை! 'கடுகு சிறுத் தாலும் காரம் பெரியது 'என்று சொல்வதுவேறு. ஆனால் இனம் சிறுத்தால் அழிந்தால் இடம்கிடைத் தாலும் என்ன பலன்?

தேவன் மௌனமாக யோசித் துக் கொண்டிருந்தான். இந்தப் போராட்டம் எதில் போய் முடியப் போகின்றது? எங்கள் பிரச்சினைகள் எப்போது ஓயும்? யார் தீர்த்து வைக்கப் போகிறார்கள்? இந்தப் பிரச்சினையைக் காரணங்காட்டி உள் நாட்டினர் பலர் லாபம் தேடியது மாறி,இப்போது வெளி நாட்டினரும் லாபந்தேடும் நிலை ஏற்பட்டுள்ள தேயன்றி- பிரச்சினையின் பரிமாணம் கூடியதே யன்றி கடுகளவேனும் குறையவேயில்லை. பிரச்சினையைத் தீர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு தலைவர்கள் தங்கள் மனைவியருடன் 'டூர்' போவதும், போகுமிடங்களில் பொழுது போக்காக- கண்டுடைப் புக்காகதேவலம்தாம்பூலம் மெல்லும் விஷயம் போல் இரண்டு மூன்று நிமி ஷம் பேச்சின் பின் அடுத்த 'டூருக் கான திகதியும், இடமும் செலக்ட் பண்ணப்படுவதும், பத்திரிகைகளுக் கும், ரி. விக்கும் தங்கள் வதனங் களைக் காட்டுவதோடும் சரி. ஆனால் இங்கு, அழிவு, ''அவல மரணங்களி னதும், கற்பழிப்புகளினதும் அத்தி யாயங்களில் தொடர்கதையாகிறது. இனம் சிறுகதையின் சாரமாகிக் கொண்டு போகின்றது. கடைசி இங்கே 'தமிழினம்' என்றொரு இனம் வாழ்ந்தது என்பதைச் சரித்திரத் தில் எழுதவாவது எங்களில் ஒருவ னின் உயிராவது எஞ்சியிருக்குமா? ஏனெனில் எங்கள் சரித்திரத்தில் அதிக அத்தியாயங்கள் இரத்தத் தாலும்- கண்ணீராலும் உருவா னவை.

கடைச் சிப்பந்தி இருவருக்கும் சாப்பாடுகொண்டுவந்துவைத்தான். தேவன் இன்னும் வெறித்தபடி சுவ ரைப்பார்த்துக் கொண்டிருந்தான். ''எங்கள் விடுதலைக்கு வெளியாரை நம்புவது மடமைத்தனம். அந்த மட மையை தங்களுக்கு சாதகமாக மாற்றியமைக்க நினைப்பது அவர்களு டைய பகற்கனவு. 'பகற்கனவுகள்' பலிக்காது என்றுசொல்லக் கேள்வி. எங்கள் விடுதலையை நாங்களே வர வேற்க வேண்டும்.''

தேவனின் இருதயம் வெள்ள மாகப் பொங்கியது. அவனுடைய மனக் கண்ணின் கனவுகளில் போரா டிப்பெற்ற சுதந்திர மண்ணில் அவ னுடைய இனம் அழிப்பாரின்றி- அடக்குவாரின்றி, அடிமைத்தன மின்றி, முழுமனிதர்களாக பூரண வாழ்க்கை நடத்துகின்றனர். ஒவ் வொரு மனங்களிலும் விடுதலையின் சுகத்தை உணர்கிறான். ஒவ்வொரு வரின் கண்களிலும் நிம்மதி புத்து ணர்ச்சி தெரிகிறது. அப்பிடியொரு சுதந்திரம் கிடைக்குமா? அந்தநாள் எப்போது வரும்? எப்போதுமே மனக்கற்பனையிலும், நித்திரையிலும் தானா? நிஜத்தில் வரவே வராதா?

'பிள்ளையாரே! புத்துயிர் பெற்ற பூமியைப் போராடிப் பெற்றபின் நான் இங்கே இவர்களோடு வாழ்ந் தாலும் சரி... இல்லை... இவர்களுக் காகப் போராடிப்போகும் போராட் டத்தில் செத்திட்டாலும் சரி.

அதுக்கு முன்னம்... நான் வேற மாதிரிச் சாகக் கூடாது எங்கட இனத்துககு ஏமாற்றம் வரவே கூடாது.'' திரும்பிக் கோயிலைப் பார்க்கிறான். கற்பூரம் அனலாக எரிகிறது. மக்களின் பிரார்த்தனைகளை இறைவனுக்கு அடையாளம் காட்ட அது காற்றோடு கரைந்து கொண்டிருந்தது.

இருவரும் மௌனமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். இருவருடைய மனதிலும் வெவ்வேறு சிந்தனைகள்.

''மூத்தக்காவை எப்பிடிச் சமாதானப் படுத்திறது? சின்னக்காவை எப்பிடி ஓமெண்டப் பண்ணிறது? மலர் என்ன செய்யிறாளோ? சத்தியம் பண்ணித் தந்ததையும் மீறி ஏதையாவது செய்திட்டாளெண்டா...? முறுகண்டிப் பிள்ளையாரே! நீர் தான் துணையப்பனே'' கையினால் நெஞ்சைத் தடவி விட்டபோது மேரியின் கடிதம் சட்டப்பையில, 'தான்' இருப்பதையுணர்த்தியது. ஒரு முறை கடிதத்தை வெளியிலெடுத்துப் பார்த்தான். அவளைப் போலவே எழுத்துகளும் குழந்தைத் தனமாக இருந்தது. அவளுடைய மென்மையான சிரிப்பு, மெதுவான பேச்சு, பேதைத் தனமான குழைவு தெய்வீகமான அன்பு... எல்லாவற்றினதும் சாரமாக இருந்தது கடிதம்.

அம்மாவின் அதீத அன்பு,மூத்தக்காவின் தீவிரமான பாசம், சின்னக்காவின் குறைசொல்ல முடியாத அக்கறை, ஒவ்வொன்றும் வரிக்கு வரி அப்பட்டமாக இருந்தது. ஏன்...மலரின் நையாண்டியும், குறும்பும் கூட சில இடங்களில் அந்தக் கடிதத்தின் சந்தோஷமான அந்தரங்க விஷயங்களிலிருந்தது. "சொல்லப் போனா... அவளிலைஎன்ர குடும்பத்தைப் பார்க்கிறன். என்ர குடும்பத்திலை அவளைப் பார்க்கிறன்.''

உண்மையில் அவன் எவ்வளவு அதிர்ஷ்டசாலி? ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுத் தியாகம் செய்து-அன்பு காட்டும் குடும்பம்-காதலி... இவ்வளவு இருந்தும் அவன் பெருமூச்சுக்களுக்கும் உறவினனாயிருக்கின்றான். பெருமூச்சுக்களும், துயரங்களும் கூட அவன் மீது போட்டி போட்டு அன்பு செலுத்துவதனால் தான் அவனோடு கூடவேயிருக்கின்றன. ஆனாலும் துன்பங்களில் களைக்காமல் அவனும் இடையிடையே பெருமைப் பட்டான்.

"என்னமாதிரி மூத்தக்கா மாப்பிள்ளையைப் பாத்துக் கேட்டாவே கேள்வி. அவர் முகம் போன போக்கை... பேயறைஞ்ச மாதிரி...'' நேற்றய மாப்பிள்ளையின் அந்த நிமிட முகத்தின் கோலத்தை நினைத்துத் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

"அக்காவைப் போல எல்லாப் பொம்பிளையளும் வெளிக்கிட்டாத் தான் எங்கட சமுதாயத்தில 'சீதனம்' எண்ட கொடுமை இருந்த இடம் தெரியாமப் போகும். எல்லாரும் என்னெண்டு வெளிக்கிடுறது? புல்லுருவி நாயளும் இருக்குதுகளே. உண்மையில இவங்கள் இப்படியானவையளைத் தான் முதலில போஸ்டில கட்ட வேணும். ஆனா சிலதுகள்... பாவங்கள்... தங்கட சகோதரங்களைக் கரைசேர்க்க வழியில்லாமத் தான் சீதனம் வேண்டுதுகள்... எண்டாலும்... சீதனம் வேண்டி இன்னொருத்தன் உழைச்ச காசுக்கு தன்னை வித்துத்தான் சகோதரங்களை வாழ வைக்க வேணுமே? ஏன்... நான் என்ர உழைப்பை நம்பித்தானே என்ர சகோதரங்களை வாழவைக்க வெளிக்கிட்டனான். மேலிட்ட சீதனமா வேண்டப் போறன்?''

''சீதனம் குடுக்கிறவனுக்கு பூசை குடுத்தாத் தான் சீதனம் வாங்கிறவன் வாயை மூடிக்கொண்டு அடங்குவான். அப்ப முதல் பூசை எனக்குத் தான்'' என்று நினைத்தபோது தான் அவனுடைய தவறு புரிந்தது.

''கடவுளே! ஒரு அதிசயமா இவங்கட போராட்டம் வெற்றியடைஞ்சிட்டா... உடன "சீதனமே வாங்கக் கூடாதெண்டு கடுமையான ஒரு சட்டம் கொண்டுவர வேணும். இல்லாட்டி எங்கட இனமழிய வேற ஒண்டும் தேவையில்லை. இந்தச் சீதனச் சாத்தான் ஒண்டே போதும். அக்காவின்ர கலியாணம் நிண்டதில கவலை தான். எண்டாலும் அக்கா சொன்னதில என்ன பிழை? எங்களைக் கஷ்டப்படுத்திச் சீதனம் வாங்கிறவனைக் கலியாணம் செய்து கொண்டு அக்கா எப்பிடி நிம்மதியா வாழப் போகுது? அதவிட அக்கா கேட்ட மாதிரி அக்கா எனக்கொரு பாரமே. நிம்மதியா வாழுறதுக்கு வழியில்லாட்டி பிறகேன் அக்காவை வில்லங்கப்படுத்திக் கட்டி வைக்க வேணும்? அக்காவுக்கு ஒரு பிடி சோறு போட முடியாமலேயே கலியாணம் பேசினனான்? ஆகத் தான் அவர் இடம் குடுத்திட்டமெண்டோடனை தலையிலயெல்லே ஏறிக் குந்தப் பாக்கிறார்...''

''மாமா' [illegible]
யிருந்த அவனு[illegible]
அந்தப் பிஞ்சுக் கு[illegible]
துக்கு அழைத்து வர[illegible]
கொண்டு நிமிர்ந்தான். [illegible]
மேசைக்கு முன் மேசை[illegible]
ஒரு சின்னப் பெண் குழந்[illegible]
னுடைய மாமாவின் வாயில [illegible]
பிஸ்கட்டை ஊட்டிக் கொண்[illegible]
ருந்தது. அந்தக் குழந்தையையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய கண்களில் கண்ணீர் தளும்பியது.

''என்ர மூண்டு சகோதரங்களும் கலியாணம் முடிச்சா - கடைசி ஆளுக்கு ரெண்டுப்படி பாத்தாலும் ஆறு குஞ்சுகள் என்னை 'மாமா மாமா' வெண்டு சுத்தி வருங்களே. கடவுளே! என்ர அக்காமாருக்குக் கலியாணம் நடக்கவே மாட்டுதா?'' அந்தக் கேள்விக்குறி கேள்விக் குறியாகவே விஸ்வரூபமாக வளர்ந்து நின்றது. பாவம். அவன் ஒரு 'இருதலைக்கொள்ளி எறும்பு!' சீதனம் கேட்காத-நல்ல குணமான மாப்பிள்ளைகளை எந்த அரிதட்டில் அரித்துப் பிடிப்பது? ஆசை சின்னக்காவுக்கும் காட்டி கலியாணம் செய்து வைக்கேலாது. ஏனெண்டா அவளின்ர ஆசையேமூத்தக்காவின்ரகலியானம் தானே!மலர் மட்டும் என்ன சும்மாவே? ஏற்கனவே அக்காமாரின்ட கலியாண ஆசை. போதாக்குறையா... இப்ப அவளின்ர விசயமே இதுகளுக்கு தடையா வந்திட்டுது. இனி... அக்காவையள் வாழாமல் அவனைக் கட்டச் சம்மதிக்காள். அவனைத் தவிர வேறயாரையும் கட்டவும் மாட்டாள். அப்ப...... இதுக்கு என்ன முடிவு...?'' அவனுடைய சிந்தனைப் புகாரில் தெளிவே கிடைக்கவில்லை.

* * *

## 2

பெரிய வளவில் சிறிய குடிசை. பூஞ்செடிகள் இரு தரப்பிலும் பூத்திருக்க - நடுவில் கிரவல் கல் பாதை தெருப்படலை வரை நீண்டு வளைந்து வந்தது. முற்றத்தை 'வரிவரி'யாகக் கை விளக்குமாற்றினால் கூட்டிப் பெருக்கிக் கொண்டிருந்தாள் சுகுணவதி. நேரம் நெருங்க, நெருங்க மனதில் ஒரே பரபரப்பு; பயம். நெஞ்சு பீதியுடன் 'படக்' 'படக்' கென்று அடித்துக் கொண்டிருந்தது.

''அநே தெய்யனே!'' மனதுக்குள் அடிக்கடி இறைவனைத் துணைக்குக் கூப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

…டுபடவில்லை.
…ரை பார்வை
…. வாகனச் சத்தங்
…கேட்கும் போதெல்
…குற்ருள். இன்னும்
…நரம் தான். அதன்
…போகும் ஆபத்தைப்- பயங்
…தயுணராமல் வரிசை, வரிசை
…க வரத் தொடங்கிவிடும். கடவுளே! என்ன செய்வது? எப்படி நிறுத்துவது? அவ்வளவு பெரிய கூட்டத்தை அவளால் எப்படிச் சமாளிக்க முடியும்? என்ன நடந்தால் நமக்கென்ன?' என்று நினைத்தும் தோற்றுத் தோற்றுக் கொண்டிருந்தாள். காதால் கேட்டு கண்ணுக்கு முன்னல் நடக்கப் - பார்த்துக் கொண்டிருக்க மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லை. எப்படியாவது தடுக்கவேண்டும். எப்படியாவது… எப்படி…?!

''அநே சுகுண! கோ ஒய தாத்தே?'' (எங்கே உன் அப்பா?) அப்புஹாமிதான் அது. அவனுடைய கையிலிருந்ததைப் பார்த்த போது ஆத்திரம் ஒரு புறமும், பயம் மறுபுறமுமாக உலுப்பியது. அவனுக்குப் பதில் சொல்லாமல் தன் வேலையிலிருந்தாள் அவள்.

''மொனவத சுகுண? தாத்தே கோ துவ? (என்ன சுகுண? அப்பா எங்கே மகள்?) என்று மீண்டும் அவன் கேட்ட போது ''ஐ?'' (ஏன்?) 'சள்' ளென்று எரிந்து விழுந்த அவளை அப்புஹாமி அதிசயத்துடன் பார்த்தான். 'இவளுக்கு இன்று என்ன நடந்தது?'

''பிஷ்ஷூத? தங் மொனவத அப்பே கீவ? ஐ ஒயா பல்லா வாகே காய்காணுவ?'' (விசரா? இப்போது என்ன நான் சொல்லி விட்டேன்? ஏய் நாய் மாதிரி கத்திருய்?) சுகுணவதி பதிலேதும் சொல்லாமல் மௌனமாக முற்றத்தைப் பெருக்கி முடித்தாள். தெரு வாசலில் பியசேன, பிரேமசிறி, சிறிசேன… இன்னும் பலர் ஆயுதபாணிகளாக… ஆயத்தமாகத் தான் வந்திருந்தனர்.

''அப்புஹாமி ஐயே! கோ பண்டா ஐயே? வெலாவ யனவ'' (அப்புஹாமி அண்ணை! எங்கே பண்டா அண்ணை. நேரம் போகிறது.) சிறிசேன அவசரப்பட்டான்.

''பொட்டாக் இன்ட மல்லி!'' (கொஞ்சம் இரு தம்பி) என்று கையமர்த்திய பியசேன எதிரிலே நிமிர்ந்து பார்த்து விட்டு ''ஆ…… அற… பண்டா எனவ'' (ஆ… அதோ.. பண்டா வருகிருன்.) என்று சொல்லிக் கொண்டு கையில் அரிவாளை எடுத்துக் கொண்டான். செய்யப் போகும் வேலைக்கு மெருகேற்ற- நிறையக் குடித்து விட்டுக் கோரமாக வந்து கொண்டிருந்தான் பண்டா. சகாக்களைப் பார்த்து அட்டகாசமாகச் சிரித்தான். ''ஆ… அன்ன கறி… சேரும மரண்டோன ''என்று கர்ஜித்தான். 'பொட்டாக் இன்ட' என்றபடி குடிசையினுள் தீட்டி வைத்திருந்த பெரிய பாருங்கத்தியை எடுத்துக் கொண்டு துவேஷத்துடன் திரும்பினுன்.

எதிரே… அவனுடைய மகள் சுகுணவதி…! ''தாத்தே! கோயத… யன்ன?'' (அப்பா! எங்கே போகிருய்?)

''நா… சுகுண…! அப்பே… (இல்லை… சுகுண… நான்…)

''கத்தா கறண்டா எப்பா… அப்பிர்ர தன்னவ'' (கதைக்க வேண்டாம். எனக்குத் தெரியும்.) அவள் அவனை எரித்து விடுவது போல் பார்த்தான்.

''ஒயட்ட… தன்…ன துவ. எயா .. சேரும மரண்டோன. அப்பே மல்லி சோமசிறி… மரண்ட வாகே எயா சேரும மரண்டோன…'' (உனக்குத் தெரியாது மகள். அவர்கள் எல்லோரும் சாக வேண்டும். என் தம்பி இறந்தது மாதிரிச் சாக வேண்டும்.) அவன் வன்மத்துடன்… கொடூரமாகக் கூறிக் கொண்டு முன்னேறினுன்.

''நா… தாத் ு… யன்ட எப்பா —'' (இல்லை… அப்பா ; போக வேண்டாம்) தடுத்த அவளைத் தள்ளி விழுத்திவிட்டுக் கொலை வெறியுடன் வெளியேறினுன் பண்டா.

* * *

யாழ்ப்பாணத்திலிருந்து தனக்கு முன் புறப்பட்ட ''பிள்ளையார்'' சொகுசு பஸ்ஸையும், ''சேவ்ரி'' யையும் முந்திக் கொண்டு அவன் தான் இப்போது தனது பஸ்ஸுடன் முன்னுக்கு வந்து கொண்டிருந்தான். வவுனியாவில் சாப்பாட்டுக்கு நிறுத்திய போது, அங்கு சிலர் கதைத்தது உண்மையோ, வதந்தியோ தெரியவில்லை. யாழ்ப்பாணத்தில் இப்ப கொஞ்சம் முந்தியாப் பெடியங்களுக்கும் அவங்களுக்குமிடையில கடுமையான மோதலாம். பெடியளி ரெண்டுபேர் சரியாம். அவைன்ர பக்கமும் கணிசமா முடிஞ்சிட்டுதாம். உண்மையா இருக்குமா? அதுக்கிடையிலயா? கடவுளே! என்னெண்டு இவ்வளவு உயிருகளையும் கொழும்பு கொண்டு போய்ச் சேக்கிறது? பேசாமத் திரும்பி யாழ்ப்பாணத்துக்கே போகலாம். ஆன… அங்கதானே கொதியில நிப்பாங்கள்! அதைவிட விசயம் பரவிறதுக்கிடையில கொழும்பு போய்ச் சேந்திடெல்லாம்.''

மனதில் ஒரே படபடப்பு. 'அங்க என்ன நடந்திதோ? எங்கட வீட்டுப்பக்கம் என்ன மாதிரியோ? என்று ஒரு புறமும், ''வழியில ஒரு கரைச்சலுமில்லாம இவ்வளவு பேரையும் கொண்டு போய்ச் சேக்க வேணுமே, யென்று மறுபுறமும் எண்ணங்கள் பீதியுடன், இழுபட்டு அலைந்து கொண்டிருந்தன. இரண்டு, மூன்று முகாங்களில் வரிசையாக, இடையூறுகளின்றிப் பரிசோதனை நடந்து வெளிவந்த போது ''வதந்தியோ?'' என்று நிம்மதியுடன் நினைத்தாலும் எவ்வளவு சீக்கிரம் அபாயமான பகுதிகளைக் கடக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கடந்துவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் பஸ்ஸை வேகமாக ஓட்டிக் கொண்டிருந்தான் இடையில் கொழும்பிலிருந்து வந்த இரண்டு லொறிகளைச் சந்தித்து ''வரும் வழியில் ஏதாவது பிரச்சினையா? 'என்று விசாரித்தான். ''இல்லை'' என்ற பதிலில் கிடைத்த சிறிய நிம்மதியுடனும், நிறையப் பிரார்த்தனைகளோடும் அவன் போய்க் கொண்டிருந்தான்.

* * *

பியசேனவும், அப்புஹாமியும் இரண்டு மரக்குற்றிகளை நடுவீதியிலெடுத்துப் போட்டனர். பண்டா முட்தடிகளைக் கொண்டு வந்து அவற்றுக்கு மேலே போட்டுவிட்டான். எல்லோரும் அடர்ந்த காட்டு மரங்களிடையே நின்று கொண்டனர். ஆயுதங்களின் முனைகளும், அந்த வெறியர்களின் கண்களும் கொலை வெறியுடன் மின்னிக்கொண்டிருந்தன.

பிரேமசிறியின் தலைமையில் ஒரு கூட்டம் இங்கே பொல்லுகள், கத்தி, அலவாங்குகளுடன் ஆயத்தமாக பற்றைகளுக்குள் பதுங்கிக் கொள்ள, சில யார் தூரத்தில்-முன்னல் பண்டாவின் தலைமையில் கொஞ்சப்பேர் அங்கே நின்றனர். பிரேம சிறியின் இடத்தை அவர்கள் கடந்து போனல் தான் பண்டாவின் வீதித்தடைகளை காண முடியும். கண்டவுடன் அவர்கள் 'ரிவர்சில்' திரும்ப முயற்சி செய்யும் போது பின்னலிருந்து பிரேம சிறியின் கூட்டம் வழிமறித்துத் தாக்கும். நல்ல திட்டம் தான்… அரிவரிப் பிள்ளைகள் விளை

யாடும் 'பசுவும் புலியும் விளையாட்டு' வினையாக நடக்கப் போகிறது. அவ்வளவு தான்...

* * *

"இங்கன தான் பயம். கெதியெண்டு போயிட வேணும்" என்ற அவசரம், அவனுடைய பஸ் ஓட்டத்தில் தெரிந்தது. தேவனும் பரபரப்புடன் இருந்தான். "தற்சமயம் ஒரு ஆபத்து வந்து விட்டால்... அவன் ஒருவனால் எத்தனை பேரைக் காப்பாற்றமுடியும்?" பயணிகளில் சிலர் தூங்கிக் கொண்டிருந்தனர். "ஒரு வேளை வவுனியாவில் கதைச் சதுகளைப் பத்தி இதுகளுக்கொண்டும் தெரியாதோ? ஏதாவதொரு அசம்பாவிதமெண்டா வழியில யாரும் சொல்லியிருக்குங்களே! சிந்தனையுடன் ஓட்டிக் கொண்டிருந்த அவன் பஸ்ஸின் எதிரே கையை காட்டிக் கொண்டு ஓடி வந்த அவளைப் பார்த்துப் புன்னகையுடன் கையாட்டிவிட்டு வேகமாக ஓட்டினான். அவள் கத்தியது எதுவும் கேட்கவில்லை.

* * *

"அநே தெய்யனே!" என்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டாள் சுகுணவதி. அந்த டிரைவருக்கு அவளுடைய கையசைவின் சைகை புரியவில்லையா? வழக்கம் போல் விளையாட்டுக்குக் காட்டுவதாக நினைத்து - தன்னுடைய பஸ்ஸிலிருக்கும் பிரயாணிகளுக்கும், தனக்கும் வரப் போகும் ஆபத்தை - பயங்கரத்தையுணராமல் சிரித்துக் கொண்டு கை காட்டிக் கொண்டு போகின்றானே! இவனை என்ன செய்வது? மடையன்! மடையன்!! கடவுளே! என்னென்று இவர்களைக் காப்பாற்றுவது? எல்லாம் அவளால் தான். ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு பஸ்சும் போகும் போதும் வாசலில் நின்று கை காட்டி கை காட்டி இன்று உண்மையிலேயே கை காட்டக்...கடவுளே... என்றாலும் அவளுடைய முகத்தில் தெரிந்த பரபரப்பை— பயங்கரத்தைக் கூட உணராமல்... மடையன்... போய் விட்டானே"! உடனே அங்கே போய்... அவளால் முடிந்தளவு...

* * ✝

"முருகா! எங்களைக் காப்பாற்றும் அப்பனே!" "ஜீசஸ்! இண்டைக்கு செத்தம்" பஸ்ஸினுள் எல்லோரும் கூச்சலிட்டு அழத் தொடங்கிவிட்டனர். குழந்தைகள் வீரிட்டன. ஒரு பெண் நெஞ்சைப்பிடித்துக்கொண்டு மயங்கிச் சாய்ந்து விட்டாள். அவளை யாருமே கவனிக்கவில்லை. அவன் பதட்டத்தை அடக்கிக் கொண்டு பஸ்சை 'ரிவர்சில்' எடுத்தான். பின்னாலிருந்து "தெமலபல்லா கொட்டியா" என்று கோரமான கூச்சல் தடுக்க, "அண்ணை!... பின்னாலையும் ஆயுதங்களோடை வாறான்கள்" தேவன் பரபரத்தான்.

"என்னடா இது பெரிய சோதினை? இப்ப என்ன செய்யிறது. உயிரோடு விடுவான்களாடா?", அவன் அழாத குறையாகக் கேட்ட போது தேவனால் பதில் சொல்ல முடியவில்லை. தேவனுக்கு இரத்தம் கொதித்தது. முழுப் பயிற்சி பெற்ற அவன் பக்கத்திலிருந்தும்... அவனால் அவனுடைய மக்களைக் காப்பாற்ற முடியாமல்— கையாலாகாமல்... "இல்லை எப்படியாவது... என்ர உயிரே போனாலும்... உடம்பில ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் மட்டும் என்ர ஆட்களில கை வைக்க விடமாட்டன்."

"சேரும பகின்ட. ஹரியட்ட பகிண்ட... பல்லா" (எல்லோரும் இறங்கு. கெதியாய் இறங்கு நாயே). பண்டா கர்ஜித்தான். பயணிகள் ஒருவரையொருவர் பார்த்துப் பீதியுடன் கண் கலங்கித் தயங்கினார்கள்? பிரேமசிறி பஸ்ஸினுள் ஏறி முரட்டுத்தனமாக டிரைவர் சீட்ல்டி இருந்த அவனை இழுத்து இறக்கி முகவாயைப் பொத்தி அறைந்தான். "அம்மா" என்ற முனகலுடன் அவன் தாடையைப் பிடித்துக் கொண்டான். பயணிகள் எல்லோரும் அதற்குள் இறங்கிவிட்டனர். சிலர் பலவந்தமாக இழுத்து இறக்கப்பட்டனர். எல்லோருடைய முகங்களிலும் சவக்களை தாண்டவமாடியது. எதிரே கண்ணைக் கூச வைக்கும் கூர்மையான ஆயுதங்கள் தடிகள், பொல்லுகளுடன் சுற்றிவர நின்ற கூட்டத்தினரின் ஒரு முகத்தில் கூட இரக்கத்தின் துளியைக் காணக் கிடைக்கவில்லை.

---



நிதி அமைச்சரிடம் அவர் தந்தை மிகுந்த கண்டிப்புடன் "இந்தா! நான் சொல்வதைக் கேள். என்னாலை உலகத்தில தலை காட்ட முடியவில்லை. போறவாற நாடுகளிலெல்லாம் நீ எக்கச் சக்கமான கடன் வாங்கியிருக்கிறாயாம். வட்டி கூட கொடுக்காமல் மேலும் மேலும் கேக்கிறியாம்.. உங்கட மகனைக் கொஞ்சம் கண்டிச்சு வையுங்க எண்டு என்னட்டச் சொல்லுறாங்கள்."

— ராஜகணேஷ்.

---

"சட சட" வென்று பொல்லுகளால் அடிக்கிறார்கள். கத்திகள் பலியாடுகளை வெட்டுவது போல்- பழக்க தோஷத்தில் நிராயுதபாணிகளின் தசைகளைச் சுவை பார்க்கத் தொடங்கின. இவர்கள் ஒவ்வொருவரும் யமரூபங்களை கையெடுத்துக் கும்பிடுகிறார்கள். எத்தனையோ நாமங்களால் இறைவனைக் கூக்குரலிட்டுக் கூப்பிடுகிறார்கள். இறைவன் இன்னும் வரவில்லை. இவ்வளவு பெயர்கள் கேட்கிறதே... இதில் எது தனது பெயரென்று அவனுக்கே குழப்பமோ என்னவோ... மரண ஓலம் இறைவனின் காதுக்குக் கேட்கவில்லையென்றாலும்... மற்றவர்களுக்குமா கேட்கவில்லை?

தங்கள் உறவுகளை இவர்கள் தாக்கும் போது பார்க்கப் பொறுக்காமல் சிலர் அவர்களுக்கிடையே புகுந்து காயமடைந்தனர்; உயிரற்றுச் சாய்ந்தனர்; குற்றுயிராய்

துடித்துக் கொண்டு விழுந்தனர். பஸ்ஸில் வந்த பயணிகளுள் 'இளம் பெண்'ணாக இருந்த அந்தத் தமிழ்ப் பெண்ணை பலாத்காரமாக பியசேனா இழுத்துக் கொண்டு போக, அவளுடைய வயது முதிர்ந்த தந்தை, தன் மகளின் உயிரக்காகவோ, மானத்துக்காகவோ என்று யோசியாமல் பியசேனாவை தன் பலங் கொண்ட மட்டும் எதிர்க்க, அவன் அலட்டிக் கொள்ளாமல் தன் கையிலிருந்த கத்தியை அவளுடைய வயிற்றில் இடம்மாறச் செய்து விட்டு அவளை இழுத்துக் கொண்டு போனான். அவர் "ராசாத்தி... என்ர நாச்சியார்... அம்மா... துளசி .. ஐயோ... என்ர பிள்ளையை... யாராவது காப்பாற்றுங்களேன்" என்று கத்திக் கொண்டு அந்த முதியவர் மண்ணில் விழுந்தார்.

அந்தப் பெண் "அப்பா" என்று தான் கதறினாளே தவிர "யாராவது காப்பாற்றுங்களேன்" என்று கத்தவில்லை. அவளுக்குத் தெரியும் தான் பாஞ்சாலியல்ல - கண்ணன் தனக்குச் சேலை கொண்டுவர..." தேவனால் பொறுக்க முடியவில்லை. தான் பெற்ற பயிற்சிகளினால் இது வரை உயிர்களைக் காப்பாற்றப் போராடியும் அவனால் முடியவில்லை. ஆனால்... அவனுடைய கண்ணுக்கு முன்னாலேயே தமிழ்ப்பெண்...! அதுவும்...! இதையாவது அவன் காப்பாற்ற வேண்டும். கண்ணை மூடிக் கொண்டு பாய்ந்து போய் பியசேனாவின் பிடரிமயிரைக் கொத்தாகப் பிடித்திழுத்து முகத்தில் ஓங்கியறைந்து குத்தினான். பியசேனா சுதாகரித்துக்கொண்டு திமிறியபடி கத்தியை தேவன் மேல் பாய்ச்ச வரும் போது - தேவன் அந்தக் கையைப் படாரென்று பற்றி முறுக்கிப் பலமாக மடித்து பியசேனாவின் கையாலேயே பியசேனாவின் வயிற்றில் பாய்ச்ச... அவன் துடித்துக் கொண்டு விழுந்தான். அவ்வளவு மரண ஓலத்தில் பியசேனாவின் ஊளையை அவனுடைய சகாக்கள் கவனிக்கவில்லை. அவர்கள் அவ்வளவு 'பிஸி'யுடன் வெட்டிப்போட்ட பயணியின் உடலொன்று பியசேனாவின் உடலுக்கு மேல் உயிரற்று விழுந்தது. அவனுடலிலிருந்து பீறிட்டு வழிந்த இரத்தத்துடன் தன்னுடைய குருதியையும் கலக்கவிட்டது. என்ன அதிசயம்? எங்கள் இரத்தமும் சிவப்பாகத் தானேயிருக்கிறது?

"தாத்தே! தாத்தே! எப்பா... ஏகொல்லன்ட பவ் தாத்தே. மொக்கொத் கறன்ட எப்பா". அப்பா! அப்பா! வேண்டாம். வேண்டாம். அவர்கள் பாவம். ஒன்றும் செய்ய வேண்டாம்.) மூச்சிரைக்க.. அலறிக்கொண்டு ஓடிவந்த சுகுணாவதி கீழே இரத்த வெள்ளத்தில் கிடந்த முண்டங்களைப் பார்த்து வீரிட்டாள்.

"தாத்தே!... மொனவத? ஐஒயட்ட பிஸ்ஸுத மே... மொனவத கறன்னே ஒய? அநே ... மே .. பாலாண்ட" (அப்பா! என்ன இது? ஏன் உனக்கு விசரா? நீ என்ன செய்கிறாய்? ஐயோ இங்கே... பார்) தனது மக்களைக் காப்பாற்ற தனியொருவனாக போராடும் தேவனைப் பார்த்தாள் தலையில் இரத்தம் வழிய விழுந்து கிடக்கும் டிரைவரைப் பார்த்தாள். அவளுக்கு



எழுத்தாளர்: என்ன சார்! என்ர திரைக் கதையைப் படித்து முடித்து விட்டீர்களா? கதையின் சோக முடிவு எப்படி சார்.?
படாதிபதி: உமது கதையைப் படம் பிடிச்சா .. எனக்குச் சோக முடிவு தான் ..

— வண்ர்.

இரத்த வாடை ஓங்காளித்தது. மயக்கம் வரும் போல் கண்ணெல்லாம் இருண்டது. இதனால் அவள் மயங்கி விழக்கூடாது. அவளால் இயலுமானவரை சில உயிர்களையாவது காப்பாற்ற வேண்டும். இல்லையேல் புத்தபகவான் அவளை மன்னிக்கமாட்டார்.

"தாத்தா! எப்ப... எப்ப... ஏகொல்லண்ட மொக்கொத்கறன்ட எப்பா கவுறுத்களுப்பு அபராதி யட்ட அகின்சக மனுஷியாவ மரண்டெப்பா. தெவியா கொகோமத் சமாவ தென்னனு" (அப்பா! வேண்டாம். அவர்களை ஒன்றும் செய்ய வேண்டாம். யாரோ தீர்த்துக் கொண்ட பழிக்காக ஒன்றுமறியாத அப்பாவிகளான இவர்களை கொல்ல நினைக்க வேண்டாம். புத்தபகவான் உங்களை மன்னிக்க மாட்டார்.) அவளுடைய இரஞ்சுதலுக்கு இரக்கம் காட்ட - செவி சாய்க்க யாருமே அவளைக் கவனிக்கவில்லை. அந்த வெள்ளி பிரேம் போட்ட கண்ணாடிக்கார இளைஞரின் நெஞ்சில் கத்தியைப் பாய்ச்ச அவர் அலறித் துடித்துக் கொண்டு விழுந்தார். அப்போது தான் மயக்கம் தெளிந்து, கண்விழித்த அவன் அந்தக் காட்சியைக் கண்டு, "ஐயோ! என்ர சின்னத்..." கத்தி முடிப்பதற்குள் பண்டா அவனை நோக்கிக் கத்தியுடன் "மே... பல்லா... சேரும மரண்டோன" (இந்த நாயள் எல்லோரையும் கொல்ல வேணும்.) என்று கத்தியபடி பாய - தான் சொல்வதை யாரும் கேட்கமாட்டார்கள் என்று புரிந்த சுகுணாவதி செயலில் காட்ட வேண்டிய நிலையில் தந்தையைத் தடுக்கக் குறுக்கே போக... வந்த வேகத்தில், கண் இமைக்கும் நேரத்தில் சுகுணாவதியின் வயிற்றில் கத்தி ஏறியது. "அம்மே!" (அம்மா)என்று அலறியபடி அவள் விழுந்தாள்.

"மகே துவ... சுகுணம்மே" (என் மகளே! சுகுணம்மா) பண்டாவின் அலறல் கசாப்புக்காரர்களின் அலுவல்களை நிறுத்த... தேவன் பாய்ந்து சென்று சுகுணாவைத் தூக்கினான். "உடன ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக வேணும்... அண்ணை நிக்க நேரமில்லை. வாங்கோ பஸ்ஸை எடுங்கோ அண்ணை." பண்டா செயலற்று ஸ்தம்பித்து நின்றான். "ஏன் இந்த சுகுணா எப்படி வந்து இடையில் புகுந்தாள்?" என்று யோசிக்கவோ, அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளவோ அவனால் முடியவில்லை. என்ன செய்வது? என்று தோன்றாமல் வயிற்றிலிருந்து இரத்தம் பாய விழுந்து கிடக்கும் சுகுணா

வையே பார்த்துக் கொண்டு நின்றான். நெஞ்சில் அழுகை முட்டிக் கொண்டு வந்தாலும், கத்தி அழக் கூட முடியாமல் நெஞ்சினுள்ளேயே உருண்டையாய் முட்டிக் கொண்டு நின்றது.

அவன் சுகுணாவின் நிர்மலமான முகத்தைப் பார்த்தான். ஒவ்வொரு 'டிரிப்' பஸ் போகும் போதும் குழந்தைகளைப் போல்- குழந்தைகளுடன் நின்று கைகாட்டுவாள். ஆனால் இன்று...' வரும்போது போகவேண்டாம் என்று தான் கை காட்டினாளே? சீ... நான் தான் விளங்காமல்- வழமைபோல் கை காட்டுறாளெண்டு அவசரமா வந்து -இத்தனை உயிருக்கும் நாசம்தேடித் தன் முழுப் பேரையும் காப்பாற்ற முடியேலையெண்டாலும், இவ்வளவு பேரையாவது காப்பாற்றி வைச்சாளே... அந்த நன்றிக் கடனுக்காவது அவளை க்காப்பாற்றவேணும் எப்படியாவது.... என்ர உயிரைக் கொடுத்தாவது. ''பண்டாவின் ஆட்கள் மௌனமாக வீதித்தடைகளை அவசரம் அவசரமாக அகற்றிவிட அவன் வேகமாக பஸ்ஸை 'ஸ்டாட்' பண்ணினான். ''இந்த பயங்கரமான முள்ளுப்பத்தைக்குள்ள இப்படியொரு புனிதமான பூவா? 'எந்த இனமாயிருந்தாலும் தாய் மனம் தாய் மனம் தான்.' அவனுக்கு வலியே மறந்து போய்விட்டது. சுகுணாவதியின் வயிற்றில் ஒருபெண்மணி தனது சேலைத்தலைப்பைக்கிழித்துக் கட்டுப்போட்டிருந்தாள். உறவுகளை வந்த இடத்தில்- கண்ணுக்கு முன்னால் பறிகொடுத்த ஓரிருவரின் கதறல் மட்டும் ஓயவில்லை. வெட்டுக் காயங்களுடன் ஒரு சில உடல்களைக் 'காப்பாற்றி விடலாம்' என்ற நப்பிக்கையுடன் எடுத்து வந்தனர்.

''அவளை அப்படியே சாகவிட்டிருக்க வேணும். என்னத்துக்கு இவங்கள் கொண்டு வாறாங்கள்? எங்கட ஆக்களை துடிக்கத் துடிக்க வெட்டினவங்களுக்கு ஏன் உதவி செய்யவேணும்?' புலம்பிய அந்தப் பெண்மணியைத் தேவன் ஆத்திரத்துடன் திரும்பி முறைத்துப் பார்த்தான். நாவற்குழியில் பரிதாப மொழி பேசிய அந்தப் பெண்தான் இப்போது இப்படித் தனது முந்திய பேச்சுக்கு ஒரு விதத்திலேனும் பொருந்தாத பேச்சுப் பேசுகிறாள். ஒரு நேரத்துக்கு ஒரு மாதிரி ஒலிப்பரப்பாகும் இவர்களுடைய பேச்சு தேவனுக்கு விந்தையாக இருந்தது. அவள் குறுக்கே வராமல் இருந்திருக்கலாம். என்ன நடந்தாலென்ன என்று அலட்டிக் கொள்ளாமல் அவள் வீட்டிலிருந்திருக்கலாம். இப்படி மூச்சிரைக்க ஓடிவந்திருக்க வேண்டிய அவசியமில்லை. இப்படி இவர்களைக் காப்பாற்றப்போய்- தகப்பனின் கத்திக் குத்தை வாங்கியிருக்க வேண்டியதில்லை. ஏன் பேசமாட்டார்கள்?

தேவன் அழுதுகொண்டிருந்த அந்த இளம்பெண் துளசியைப் பார்த்தான். அவளுடைய சட்டையின் மேற்பகுதி தாறுமாறாகக் கிழிந்திருந்தது. தன் இனத்துக்காகவென்றே தனது உடலில் சேர்த்து வைத்திருந்த இரத்தத்தை அவர்களுக்காக சிந்தியதில் கறைபட்டிருந்த தனது 'ஷேர்டை' கழற்றி அந்தப் பெண்ணிடம் நீட்டினான். அதை அணிந்தபோது- அதிலிருந்த இன்னும் காயாத குருதிச் சொட்டுகளைப் பார்த்தபோது- அந்தக் குருதி குளிர்மையாக உடலில் பட்டபோது அவளுடைய உடல் சிலிர்த்தது. அவனை நன்றியுடன் பார்த்தாள். இவ்வளவு துயரத்திலும் தளராமல் இறுகிப் போயிருந்த அவனுடைய முகத்தை, வீரத்தைப் பார்த்தபோது அவளுக்கு அவன் யாரென்று புரிந்தது. அவனுடைய உடம்பில் அவளுக்காகவும், அவர்களுக்காகவும் வாங்கிய காயங்களின் கண்கள் குருதிக் கண்ணீர் வடித்தபடியிருந்தன. அதைப் பார்த்த பின் துளசிக்குக் கண்ணீர் வரவேயில்லை.

''பாவம்! இந்தப் பிள்ளையும், அந்தப் பெட்டையும் இல்லாட்டி எங்கட கதி என்ன? அம்மாளாச்சி தான் இவளின்ர ரூபத்தில வந்திருக்கிறா. இனம் வேற எண்டாலும் மனம் பொம்பிளைன்ர மனம்தானே? அவ்வளவுபேர் சாக வேணுமெண்டு விதி. ஏதோ... எங்கட காலம் தான்... இன்னும் இருந்து அழுந்த வணுமெண்டு எழுதியிருக்காக்கும்''.

தேவன் மனதுக்குள் சிரித்துக் கொண்டான். 'அம்மாளாச்சி கூட காயம்பட்டிட்டாவே'.

''எனக்கின்னும் நடுக்கம் தீரேலை. நம்பவே முடியேலை. இன்னும் உயிரோட தான் இருக்கிறமெண்டு பாக்கேக்கிலை அதிசயமா இருக்கு. என்ன இருந்தாலும் என்ர முருகன் என்னைக் கைவிடேலை' என்று ஒரு பயணி சொன்னபோது அவரை ஏளனமாகப் பார்த்தான். ''ஏன் பெரியவர்? அங்க வெட்டுப்பட்டுச் செத்துக் கிடக்கிறதுகளும் தானே தொண்டை கிழிய முருகனைக் கூப்பிட்டுதுகள்! அதுகளை மட்டும் உங்கட முருகன் காப்பாற்றாமல் ஏன் ஓரவஞ்சனை செய்திட்டார்? கடவுளும் கட்சி பாக்கிறாரா?' ஆற்றாமையோடு தேவன் ஆத்திரமாகக் கேட்டபோது 'இந்தக் காலப் பெடியன்களுக்கு என்னத்தைச் சொல்ல முடியும்?' என்று முணுமுணுத்துக் கொண்டு வாயை மூடினார் அந்தப் பெரியவர்.

இவங்களுக்கு இருக்கேலாம துவங்கினவங்கள். எங்களுக்கு 'தனிநாடு வேண்டித் தரப் போயினமாம் தனிநாடு. அவங்களுக்கென்ன... ஒரு குண்டு வைச்சு கவிட்டுப் போட்டு கள்ளத் தோணியில இந்தியாவுக்கு ஓடிடுவாங்கள். சாகிறது நாங்கள் தானே? போராளியளெண்டா தங்கட உயிரைப் பத்தி நினைக்கக் கூடாது. காந்தியும் தான் போராடினவர். அப்பிடியொரு போராட்டத்தில இப்ப யார் யார் சேருறது? போராட்டம் எண்டா என்னெண்டு ஒரு விவஸ்தையுமில்லாமல் போச்சு. கண்டதுகளும் சேர்ந்து கொண்டு போராடினம் போர்.,,தேவன் அந்தப் பெண்மணியையே பரிதாபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் அப்படித்தான் திட்டுவாள். கண்ணுக்கு முன்னால் தன்கணவனையும் கைக்குழந்தையையுமல்லவா க்ண்டதுண்டமாகப் பலிகொடுத்து விட்டாள்? வெட்டியவர்கள் மேல் அவளுக்கு வெறுப்பில்லையா? இருக்கும். நிச்சயமாய்

இருக்கும். ஜென்ம ஜென்மத்துக்கும் அந்த கொடூரத்தை அவளால் மறக்க முடியாது. துவேஷம் அவளுடைய ஹிருதயத்தில் புள்ளியாக விழுந்து, பெரும் பூகம்பமாக வெடிக்கப் போகிறது. அந்த வேதனையில் தான் அவள் இப்படிப் புலம்புகிறாள். திட்டித் தீர்க்கிறாள். போன உயிரைப் பற்றிக் கவலைப்படாமலிருக்க அவள் போராட்ட வகுப்புகளுக்குப் போனவளா? அல்லது போராட்டத்தின் அர்த்தத்தைப் புரிந்தவளா? கணவன், குழந்தை, குடும்பம் என்று ஒரு வட்டத்துக்குள்ளேயே வாழும் சாதாரணக் குடும்பப் பெண். தான் இழந்தவற்றுக்காகத் துடிதுடிக்கும் பொது மக்களில் ஒரு பிரதிநிதி. போராளிகளின் குழந்தைகளில் போராளிப் பறவைகளின் இறக்கைகளினுள் பாதுகாப்புத் தேடும் குஞ்சுகளில் ஒருத்தி. குஞ்சு மிதித்தா கோழி சாகப் போகிறது? அவள் மனதுக்கு இதன் மூலமாவது ஆறுதல் கிடைக்கட்டுமேன்.

அந்த மரண ஓலத்தை விட்டு வெகு தூரம் வந்துவிட்டாலும், அந்த இடமும் அவர்கள் துடித்து துடித்து விழுந்ததும், கும்பிடக் கும்பிட வெட்டித் தீர்த்த இவர்களின் வெறி பிடித்த ரூபமும் தான் கண்ணுக்கு முன்னால் வந்து கொண்டிருந்தது. அந்த மரண ஊளைகள் துரத்தித் துரத்திக் கொண்டு வந்தது. மனம் இன்னும் அந்த கொடூர நிகழ்ச்சியின் உலுப்பிலிருந்து மீளவில்லை. அந்தப் பயங்கரக் கோரக் காட்சியையும் பரிதாபமான அந்தச் சத்தத்தையும்அவனால் வாழ் நாளில் மறக்க முடியாது.

பண்டா மவுனமாக இருந்தான்.

''கொஸ்பிட்டலக்க; யனவ பஸ... சேரும மரண்டோணு நேயதே ஐயே.. எயா ஒக்கமா தெமல பல்லா'' (ஆஸ்பத்திரிக்குப் போன பிறகு எல்லோரையும் கொல்ல வேண்டும். என்ன அண்ணை? அவர்கள் எல்லோரும் தமிழ் நாயள்.) என்று பிரேமசிறி மெதுவாகக் கேட்டபோது பண்டா வெறுப்புடன் அவனை முறைத்தான்.

''அப்பிட்டக் கத்தாக் கறண்ட எப்பா பல்லா'' (என்னோடு கதைக்க வேண்டாம் நாயே.) அவனுக்கு உடம்பெல்லாம் பதறியது. ''என்னுடைய மகளைப் பற்றி நான் கவலைப்படுகிறேன். இவர்கள் 'என்னவென்றால் ...! அவ்வளவு பேரை வெட்டிச் சாய்த்தும்... இவர்களின் இரத்த வெறி ஓயவில்லை. எனக்கு அன்பு காட்டுவது போல்— என் மனதில் சோமசிறியின் மரணத்தை வைத்து கொடூரத்தை வளர்த்து... இப்போது நான் கண்ட பலன்... என் மகளை என்னுடைய வெறிக்கே பலியாக்கியது...

''இவ்வளவு பேரை இழந்தும்' துவேஷம் காட்டாமல் தங்களைக் காப்பாற்றிய நன்றிக்காக எனது மகளைக் காப்பாற்ற இவர்கள் நினைக்கிறார்கள். அப்படியிருக்க... இந்தப் பிரேமசிறி என்ன கதைக்கிறான்? இந்த பஸ்ஸினுள் எத்தனை பேர் அழுது கொண்டு வருகிறார்கள்? இவர்கள் ஒவ்வொருவருடைய கண்ணீருக்கும் நான் தானே காரணம்? ஆனால் இவர்கள் எதிரிகளுக்கும் உதவி செய்கிறார்கள். என்னுடைய ஒரு சகோதரனின் 'மரணத்துக்காக எத்தனை உயிர்களைப் பறித்து விட்டேன்! சே...எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டேன்! அதற்கு பரிகாரமாக ஒவ்வொருவரின் காலிலும் விழுந்து மன்னிப்பு கேட்கவேண்டும். நான் ஒரு மடையன். நான் மன்னிப்புக் கேட்பதால் போன உயிர்கள் திரும்பியா வரும்? இந்த ஜென்மத்திலும் சரி—இனி எந்த ஜென்மத்திலும் சரி... எனக்கு மன்னிப்பே கிடையாது. எனது மகள் முதலில் தடுத்த போது கேட்டேனா? என் மதி எங்கே போனது?'' பண்டா வெட்கிப் போய் தலை குனிந்திருந்தான்.

✻ ✻ ✻


ஆஸ்பத்திரியில் வைத்தியர்கள் சுகுணவதியை ''எமர்ஜென்சிப்' பகுதியில் அனுமதித்திருந்தனர். மற்றக் காயக்காரர்களுக்கு 'வெளிநோயாளர் பகுதியில் வைத்தியம் நடந்து கொண்டிருந்தது, அபாயக் கட்டத்தில் தத்தளித்தவர்களும் சுகுணவதியைப் போல் அவசர சிகிச்சைப் பகுதியினுள் அனுமதிக்கப்பட்டனர்.

அவன் சிந்திக்கத் திராணியில்லாமல் ஸ்தம்பித்துப் போயிருந்தான். கண்ணை மூடவே பயந்தான். கண்ணை மூடினாலும், திறந்திருந்தாலும் ஒரேயொரு காட்சிதான் தோன்றிப் பயமுறுத்தியது. ''சின்னக்காவுக்குப் பேசின மாப்பிள்ளை துடிச்ச துடி... கடவுளே! அந்த அவர் என்ன வேதனைப்பட்டாரோ? யாரையெல்லாம் நினைச்சாரோ? தன்ர பேச்சடங்கப்போகுதெண்டா அப்பிடி மூச்சுவிடாமக் கதைச்சுக் கொண்டு வந்தவர்? அக்காவைப் பற்றி என்னெல்லாம் கதைச்சார்? எத்தினைய யோசிச்சு ஆசைப்பட்டிருப்பார். கடவுளே என்ன அறியாயம் இது! இதக்கேப்பார் யாருமில்லையா? இண்டைக்கு என்ர பஸ். நாளைக்கு இன்னொரு பஸ். இண்டைக்கு இந்தப்பெட்டை இடையில வந்து காப்பாற்றினான். நாளைக்கு...'

''அக்கா கலியாணம் வேண்டாமெண்டிட்டா எண்டு அவரிட்ட எப்பிடிச் சொல்லுறதெண்டு தவிச்சன். இவரைக் கட்டச்சொல்லி அக்காவை என்னெண்டு சமாதானப்படுத்திறதெண்டு குழம்பினன். ரெண்டுக்குமிடமில்லாமல் போய்ட்தெண்டு சந்தோசப்படவா இல்லை கவலைப்படவா,? தெய்வமே! அவரைப் பெத்ததுகள் என்ன மாதிரித் துடிக்கப் போகுதுகள்! இந்தளவில நான் தப்பினது யார் செய்த புண்ணியமோ? பாவம், அந்தப் பெட்டை எங்களுக்காண்டி இடையில வந்து— இப்ப உயிரோட போராடிக் கொண்டுகிடக்கும். இப்பிடியுமொரு நல்ல மனம்' இதைப் பெத்தவளுக்கு...?''

அவனால் எதையும் நிதானிக்க முடியவில்லை. இனி என்ன செய்வது என்று கூடப் புரியவில்லை. ஆஸ்பத்திரிப் பொலிஸ் பகுதியில் கடமைக்காக முறையீடு செய்தான். மேலிட நடவடிக்கைகள் தொடங்கின. பிரேதங்களைப் பொறுப்பேற்க ஒரு சிலர் நின்றனர். சின்னக்காவுக்குப் பேசின மாப்பிள்ளையைப் பெறுப்பேற்க தன் பெயரைக் கொடுத்தான். ''என்ன உறவு?'' என்ற போது அவனால் பதில் சொல்ல முடியவில்லை. அருகிலிருந்த தபாற்கந்தோரில் ஒரு அவரத் தந்தியொன்றை அவரது பெற்

ரூருக்கு அனுப்பி வைத்தான். சின்னக்காவின் கல்யாண விடயமாக மாப்பிள்ளை வீட்டுக்கு இரண்டொரு தரம் போய் வந்து, கடிதம் போட்டு மனப்பாடமாகிப் போன அவர்கள் வீட்டுவிலாசம் இறுதியில் இதற்கு தான் உதவியிருக்கிறது. பெருமூச்சுடன் நிமிர்ந்து பார்த்த போது எதிரே ஆஸ்பத்திரி விருந்தையில் பண்டா தனது சகாக்களிடம் கெஞ்சும் பாவனையில் கேட்டுக் கொண்டு வர - அவர்கள் ஒவ்வொருவரும் தலையை ஆட்டி மறுப்புத் தெரிவித்துக் கொண்டு வந்தனர்.



''அம்மா என்ன கோவிச்சுக் கொண்டு புறுபுறுக்கிறா ..''

''அவ கோயிலுக்குப் போக வேணுமாம். என்ர சிங்கப்பூர் நைலக்சைத் தரட்டாம் கட்டிக் கொண்டு போக ''

— மைதிலி

''நா... பண்டா ஐயே... அப்பிர்ர தன்னா... அப்புஹாமி ஐயட்ட கியன்ட'' (இல்லை பண்டா அண்ணை. எனக்கு தெரியாது. அப்புஹாமி அண்ணையிடம் கேள்.) சிறிசேனா சொன்னதும் அப்புஹாமி அவசரமாக மறுத்தான். ''பா... பா... மொனவத கிவ்வ சிறிசேனா? ஐ ஒயட்ட பிஸ்ஸுத? மே... பலாண்ட அபி... கோ தியனே லேத்? மொனவத ஒய கத்தா கறன்னா?'' (மாட்டேன்... மாட்டேன்...என்ன கதைக்கிறாய் சிறிசேனா? ஏன் உனக்கு விசரா? இங்கே பார் என்னை... எங்கே கிடக்கிறது இரத்தம்? நீ என்ன கதைக்கிறாய்?) என்று சிறிசேனாவைப் பார்த்துக் கண்டிப்புடன் கேட்டு விட்டு பண்டாவிடம் 'அபி யன்டோன பண்டா... கெதற ஹரி யட்ட வடக் தியனவ. ம்... ஒய துவ கறி பிஸ்ஸு.' (நான் போக வேணும் பண்டா... வீட்டில் நிறைய வேலை கிடக்கு. ம்... உன் மகளுக்குச் சரியான விசர்.) என்று கூறி விட்டு இவ்விடத்தை விட்டகன்றான் அப்புஹாமி. மற்றவர்களும் 'தங்களுக்கேன் இந்த வீண் வம்பு?' என்ற நினைவுடன் விரைந்தனர். பண்டா நிலை குலைந்து போய் நின்றான்.

கொஞ்சம் முன்பு...

எத்தனை உயிர்களைத் துவம்சம் செய்தான் ஈவிரக்கம் காட்டாமல்... பரிதாபம் பார்க்காமல்..? இப்போது...? அவனுடைய ஒரேயொரு மகள்- அவனுடைய வாழ்க்கையின் ஊன்று கோல்- அவன் உயிர் வாழ வேண்டிய அர்த்தம், அவசியம்... தனது உயிர் நூல் அறுந்துவிழும் நிலையில் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. இப்போது தான் அவனுக்கு ஒரு உயிரின் அருமை தெரிகிறது. அவனும் அவனுடைய சகாக்களும் கொன்று குவித்த உடல்களில் எத்தனை உடல்கள் சுகுணவதியைப் போல் தமது குடும்பங்களுக்கு ஒரேயொரு ஊன்றுகோலாக -உயிர் நாடியாக - கண்ணுக்கு கண்ணாக...? பகவானே!

அவன் அனாயாசமாக உடல்களை வெட்டிப் போட்டபோது வெள்ளமாகக் குருதி பாய்ந்து கொட்டியதே! அப்போது அவன் அதை லட்சியம் செய்யவில்லை. இப்போது...? அவனுடைய மகளின் உடல் இரத்தத்துக்காகக் கருகிக் கொண்டு கிடக்கின்றது. இப்போது தான் அவனுக்கு இரத்தச் சொட்டுகளின் பெருமை- பெறுமதி புரிகின்றது. எத்தனையோ உயிர்களை அழிக்க, மண்ணை இரத்தச் சேறாக்கி வீணாக்க கூட வந்த அவனுடைய சகாக்கள் ஒரேயொரு உயிரைக் காப்பாற்ற- ஒரு பைந் இரத்தம் தானம் தர முன்வரவில்லை. சே...!

''என்ட ஐயே... சேரட்ட கியான்ட.. அப்பே லேத்தட்ட செக் கரண்ட கியாண்ட...'' (வாங்கோ அண்ணை. சேரிட்டச் சொல்லுங்கோ ...என்னுடைய இரத்தத்தை சோதிக்கச் சொல்லுங்கோ) அரை குறைச் சிங்களத்தில் அவன் சொன்னபோது பண்டா நம்ப முடியாமல், அதிர்ச்சியுடன் நிமிர்ந்து பார்த்தான். ஒவ்வொரு செயலிலும் அவர்கள் இவனை வெட்கித் தலை குனியச் செய்து கொண்டிருந்தனர்; தன்னுடைய தவறுக்காக- கொடிய பாவத்துக்காக ஒவ்வொரு வினாடியும் துடிக்க வைத்துக்கொண்டிருந்தனர். ஆனால்... ஆனால்... அவனுடைய மகள்- சுகுணவதி பிழைக்க வேண்டும். அவனுடைய கொடுமையால் தானே அவளுக்கு இந்தக்கதி? பண்டா அவனைக் கூட்டிக்கொண்டு அவசரமாக டாக்டரின் அறைக்கு ஓடினான். ஆச்சரியத்துடன் புருவங்களை நிமிர்த்தி அவனைப் பார்த்த டாக்டர் மௌனமாக தாதிகளிடம் அவனுடைய இரத்தத்தைச் சோதிக்க ஜாடை காட்டினார்.

இரத்தம் சோதிக்கப்பட்டது.

அவனுடைய இரத்தமும், சுகுணவதியின் இரத்தமும் ஒரு குறூப் என்று முடிவு சொல்ல - அவனிடமிருந்து சுகுணவதிக்காக இரத்தம் எடுக்கப்பட்டபோது, ''எவ்வளவு தேவையோ... அவ்வளவையும் எடுங்கோ. அந்தப் பிள்ளையைக் காப்பாற்றுங்கோ'' என்று தட்டுத் தடுமாறி அவன் சிங்களத்தில் சொன்னபோது டாக்டர் மீண்டும் ஒருமுறை மரியாதை கலந்த ஆச்சரியப் பார்வையை அவன் மேல் பதித்தார்.

* * *

பயணிகளை பொலிஸ் பாதுகாப்போடு வவுனியாவரை கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்ட எல்லோரும் ஒரு சி. ரி. பி. பஸ்ஸில் போய்விட்டனர். ஆனால் அவனும்' அந்தத் துளசியும் போகவில்லை. தேவனை வார்ட்டிலிருக்கச் சொல்லி விட்டதால், தேவனைத் தனியே அபாயமான இடத்தில் விட்டுவிட்டுப் போக அவன் விரும்பவில்லை. அத்துடன் அவன் அடி வாங்கியதாலும், சுகுணவதிக்கு இரத்தம் கொடுத்ததாலும் பலவீனமாக இருந்ததால் -அவன் பஸ்ஸை

ஒட்ட முடியாத நிலையிலிருந்தான். ஆனால் அந்தப் பெண் துளசி...? எவ்வளவு சொல்லியும் அவள் போக மறுத்துவிட்டாள்.

அவனுடைய பஸ் தான் ஆபத்தில் சிக்கியது என்று அறிந்தால் வீடு செத்தவீடுபோல் அழுகையும், புலம்பலுமாகத் தானிருக்கும். யாருமே சாப்பிட்டிருக்க மாட்டார்கள். ஒவ்வொருவரும் முதல் நாளைய சம்பவங்களை நினைத்து 'எல்லாம் தன்னால் தான்', 'தன்னால்தான்' என்று வெம்பி, வெடித்துக் கொண்டிருப்பார்கள். பாவம் மேரி... என்ன செய்கிறாளோ? 'தனக்கு எந்த ஆபத்துமில்லை'யென்று வீட்டுக்கு அனுப்பிய தந்தி கிடைத்தால் பரவாயில்லை. கிடைத்திருக்குமா? இப்போதெல்லாம் தந்திகூட தபாலோடு தானே வருகிறது?

✻ ✻ ✻

பண்டா அதுவரை தன் நெஞ்சில் அடக்கி வைத்திருந்த அருவருப்பான உணர்ச்சிகளையும், தாழ்வு மனப்பான்மையையும் அடக்க முயன்று தோற்றபோது- அவனுடைய கைகளிரண்டையும்பற்றிக்கொண்டு, தனது பருத்த சரீரம் குலுங்கக் குலுங்க அழுதான். அவன் மௌனமாக இருந்தான். பண்டா தனது மன்னிக்கமுடியாத குற்றத்திற்காக, -மன்னிப்புக் கேட்கும் திராணியில்லாமல் - மன்னிப்புக் கேட்டு அழுகிறான். அவனிடம் மன்னிப்புக் கேட்டு என்ன பலன்? இறந்த அத்தனை உடல்களுக்கும் அவனா சொந்தக்காரன்? கடவுளிடம் மன்னிப்புக் கேட்டால் ஒரு வேளை அவர் மன்னிக்கலாம். ஆனால் அவனுடைய கண்ணுக்கு முன்னாலேயே அவனுடைய இனத்தவரையே கதறக் கதற மிருகங்களைப் போல் -வெட்டிய இவர்களை- இவர்களுடைய மிருக வெறியை, இரத்த துவேஷத்தை அவன் தானே கடவுளாக இருந்தால் கூட மன்னிக்கும் மனநிலையில் எப்போதுமே - அந்த நிகழ்வுகள் நினைவைவிட்டு வெளியேறும் வரை அவனுக்கு வரவே வராது. அதனால் தான் அவன் மனிதனாக இருக்கிறான். ''தங்களில் ஒரு சில உயிர்களையாவது, தன்னைப் பற்றி நினையாது காப்பாற்றியவள்'' என்ற ஒரேயொரு நன்றிக்காகத் தான் அவன் சுகுணாவைக் காப்பாற்றினான். அதனால் தான் அவன் நல்ல மனிதனாகத் தெரிகின்றான். அந்தத் தருணத்தில் வலியச் சென்று சுகுணாவுக்கு இரத்தம் கொடுத்துக் காப்பாற்றாமல் விட்டிருக்கலாம். அதன் பின் அவனுக்கும், இவர்களுக்கும் என்ன வித்தியாசம்? யாரிடமும் பெற முடியாத மன்னிப்பை - மனஆறுதலை பண்டா அழுதழுதே பெற்றுக் கொள்ளட்டும்.

''மல்லி! அபி தமுஸலா சேரம மரண்ட கித்துவ. நமுத் தமுளே மகே துவகே ஜீவிதேய (B) பேர கத்தா. அபி ஒபலாகே ஜாதிய விருத பவபாறகத்தா அபி தெமல ஊறுவ கியா கீப்ப சரயக் பன்ன. தங் மகே துவகே அங்கெ ஒபகே தெமல லேத் கலவங் வெலா துவனுவ. ஏனிஸா ஓயாமகே அஸ்தெக்க அரியா. ஒபட்ட புதுதெவியங்கே (புத்த பகவான்) பிகிட்டய். தெவியனே மட்ட சமாவென்ட ''(தம்பி! உங்கள் எல்லோரையும் கொல்ல நினைத்தோம். ஆனால் நீ என் மகளினுயிரையே காப்பாற்றி விட்டாய். உங்களினத்தை வெறுத்தோம். 'தமிழ்ப் பன்றிக'ளென்று எத்தனையோ தரம் ஏசினோம். ஆனால் இப்பொழுது என் மகளினுடலில் உன் தமிழ் இரத்தம் தான் கலந்தோடுகிறது. நீ என் கண்ணைத் திறந்துவிட்டாய். உன்னை புத்தபகவான் ஆசீர்வதிப்பார். அவரே என்னை மன்னிக்கட்டும்.) என்று அழுகையுடன் பண்டா கூறியது முழுவதும் அவர்களுக்கு புரியா விட்டாலும், தன்னுடைய தவறுகளுக்காக பாவங்களுக்காக அவன் உணர்வுகளால் கூனிக் குறுகி மிகவும் வருந்துகிறான் என்று புரிந்து கொண்டார்கள். பரவாயில்லை. இந்தச் செய்கைக்கு- இந்தக் கொடிய கொலைப் பாதகங்களுக்கு மன்னிப்புக் கிடைக்கா விட்டாலும், இனிமேல் இப்படியான கொடுமைகளை தன் வாழ்வில் நினைத்தும் பார்க்க மாட்டான். புது மனிதனாக மாறி விடுவான்.

அப்படியானால் பெரும்பான்மையரின் தவறுகளைத் திருத்த- இப்படியான சந்தர்ப்பங்களையுருவாக்கி- சிறுபான்மையர் 'உயிர்த் தியாகம்' செய்ய வேண்டியது தானா? இவர்கள் தங்கள் தவறுகளை உணர இன்னொரு சுகுணாவதியோ- இரத்த தானம் செய்ய இன்னொரு 'அவனும்' இருக்கிறார்களா என்ன?

## 3

பஸ் வவுனியாத் தடை முகாமை விட்டு வெளியே வந்து யாழ்ப்பாணத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. பஸ்ஸினுள் அவனும், தேவனும், துளசியும் தான் இருந்தனர். அந்தப் பயங்கரம் நடந்து மூன்று நாட்களாகி விட்டது. இன்று தான் தேவனை ஆஸ்பத்திரியிலிருந்து 'டிஸ்சார்ஜ்' செய்தார்கள். இந்த மூன்று நாட்களும் பண்டா ஓடி, ஓடி அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வலிய, வலியச் செய்தான். ஆனால் அவர்களால் அவனுடைய உதவிகளை ஏற்க முடியவில்லை. பண்டா எதிரே வரும் போதெல்லாம் அந்தக் கோரமான காட்சிகளும், பயங்கரமான அலறல்களும் தான் ஞாபகத்தில் வந்து இருதயத்தை வேக வைத்துக் கொண்டிருந்தன. தன்னுடைய பாவத்துக்குச் சாந்தி பெற பண்டா நினைத்தான். ஆனால் அவனுக்குச் சாந்தி கொடுத்தால் இதுவே தொடர்கதையாகி விடும். துடிதுடித்து மாண்ட உயிர்களுக்கு அவனுடைய உதவிகளே விலையாகி விடும். அதனாலேயே அந்த இடத்தை விட்டு அவர்கள் விரைவில் போய் விட வேண்டும் என்று தீர்மானித்து விட்டனர்.

போவதற்கு முன் சுகுணாவதியைப் போய்ப் பார்த்தார்கள். வருத்தம் கலந்த புன்னகையுடன் அவர்களை வரவேற்றாள். தன்னுடைய தந்தையின் தவறுகளுக்காக வெட்கப்பட்டாள். ஆனால் தங்களில் ஒரு சிலரையாவது உயிரோடு அவள் காப்பாற்றிய விதத்திற்காக மரியாதை கலந்த நன்றியோடு அவளை அவன் பார்த்தான்.

அவர்கள் அவளிடம் விடை பெற்ற போது அவனிடம் "அண்ணு! அடுத்த முறை உங்கள் பஸ் வரும் போது கை காட்ட நான் கேற்றடியில் காத்து நிற்பேன்'' என்ருள். தேவனிடம், "நீங்கள் அன்று இவர்களைக் காப்பாற்றப் போராடியதைப் பார்த்தேன். எனக்கு உங்களை யாரென்று ஊகிக்க முடிகிறது. என்னுடைய வருங்காலக் கணவரும் இப்போது உங்களுடைய இடத்தில் தான் இருக்கிருர். ஆனல் உங்களுக்கு எதிரியாக'' என்ருள் புன்னகையுடன். அவளும் ஒரு சாதாரணப் பெண் தானே? அபிலாஷைகளில் நடமாடும் ஜீவன் தானே? எதிர்காலத்தைப் பற்றி எத்தனையோ கனவுகள் காண வேண்டிய பருவத்தில்- அந்தக் கனவுகளுக்கு மனதை அர்ப்பணிக்க அவள் அஞ்சுகிறள். அதற்கு காரணம் அவளுடைய கதாநாயகனின் இருப்பிடம் என்று நினைத்த போது அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. ஆனல் தேவன் இறுகிப் போன முகத்துடன் மௌனமாக இருந்தான். துளசியின் கைகளைப் பற்றி "எங்கள் மேல் உங்களுக்கு வெறுப்புத் தானே?'' என்று கேட்ட போது துளசி எவ்விதமான சலனமுமின்றி இறுகிப்போன மனதோடும், முகத்தோடும் மௌனமாக நின்ருள்.

பெருமூச்சுடன் சுகுணவதி தன் அன்பைத் தெரிவிக்கும் முகமாக துளசியின் கைகளில் முத்தமிட்டு விட்டு "எனக்கும் வெறுப்பு வரும், என்னைத் திருமணம் செய்யப் போகிறவர் உங்களிடத்திலிருந்து பிணமாக வரும் போது'' என்று கண் கலங்கக் கூறினுள்.

அவன் நீண்ட பெருமூச்சு விட்டான். "பாவம்... அவள் ஒரு விபரம் தெரிந்த குழந்தை. எங்கள் நிலைமையும் புரிகிறது அவளுக்கு. என்ருலும்...மனிசமனம்...தனது, தனது... ஆசைகளுக்கும் – கனவுகளுக்கும் தானே முதலிடம் கொடுக்கிறது! அவள் மட்டும் எப்படி விதிவிலக்காக இருக்கமுடியும்?''

✱ ✱ ✱

பஸ் கிளிநொச்சி டவுணை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தது. இன்னும் கொஞ்சம் விரைவாகப் போனல் மேரியை கண்டு கொஞ்ச நேரம் கதைத்துக்கொண்டு நிற்கலாம் என்று மனம் சந்தோஷப்பட்டது. "எனக்கு ஒரு ஆபத்துமில்லையென்று அவளுக்கு ஆர் சொல்லப் போகினம்? எனக்கு என்ன நடந்ததோ, ஏது நடந்ததோவெண்டு சாப்பிடாம நித்திரை கொள்ளாம- அடிக்கடி ஜெபம் செய்து கொண்டிருப்பாள். பாவம்''

யோசனை தடம் புரள எதிரே வீதியைப் பார்த்தான். சிலஇளைஞர்கள் ஒரு டிராக்டரில் வந்துகொண்டிருந்தனர். பஸ்ஸை நிறுத்தச் சொல்லி அவர்களிடம் இருந்து வந்த சைகையைப் புரிந்துகொண்ட அவன் பிரேக் போட்டு நிறுத்த - அவர்கள் பஸ்ஸினுள் எட்டிப்பார்த்தனர், "எங்கயிருந்து வாறியள்?'' அவன் விபரமாகச் சொன்னுன். காயங்களுக்குக் கட்டுப்போட்ட நிலையில் அசதியுடன் தூங்கிய தேவனை அவர்கள் கூர்ந்து பார்த்து விளங்கிக் கொண்டார்கள். "எடேய்! தேவனை'' என்று அவர்கள் தேவனை உரிமையோடு அழைத்தபோது அவர்களை அவனும் புரிந்து கொண்டான்.

தூக்கம் கலைந்து பார்த்ததேவன் எதிரில் நின்ற டிராக்டரிலிருந்த தோழர்களைக்கண்டு புதுத்தெம்புடன் 'வீசுக்' என்று எழுந்தான். அதற்குள் அவர்கள் பஸ்ஸினுள் ஏறி விட்டனர். ஆவேசத்துடன் எழுந்த தேவன் குமுறிக்கொண்டிருந்த உணர்ச்சிகளை அடக்க முடியாதவனுக ஓடிச்சென்று அவர்களைக் கட்டிக் கொண்டான். அனுதைகளாக அவனுடைய இனம் வெட்டுப்பட்டதை நினைத்து நினைத்து துடிதுடித்தஉணர்வுகளால் வெம்பி வெடித்த நரம்புகளுக்கு குமுறி வெடித்து விடுகின்ற நிலையிலிருந்த மனதிற்கு இப்போது தான் வடிகால் கிடைத்திருக்கிறது. குமுறிய உணர்ச்சிகளை குரல் கொடுத்து அழுது, அந்தத் தோழர்களின் தோள்களை கண்ணீரால்கழுவ வேண்டும் போலிருந்தது தேவனுக்கு. அவன் அழமாட்டான். அழுபவன் கோழை. ஆனல் அவன் தமிழனல்லவா? அவர்கள் அவனைத் தேற்றவில்லை; ஆறுதல் சொல்லவில்லை. அவர்களும் தேவனுடைய நிலையில்தானே இருக்கிருர்கள்!

"ம்...ம்... இனி இதை யோசிச்சு என்ன வரப்போகுது? உனக்கு உன்ர வஞ்சத்தைத் தீக்கிற நேரம் கட்டாயம் வருமடா. கவலைப்படாதை'' என்று சொல்லிவிட்டு அவனிடம் திரும்பி "இப்ப நீங்கள் உங்கட பஸ்ஸை நிப்பாட்டினம். இன்னும் கொஞ்சத்தால துவங்கப் போகுது. அதுக்கு ஆயுத்தமாய் எங்கட பெடியள் போய்ட்டாங்கள். நீங்கள் இப்பிடியே பஸ்ஸைத் திருப்புங்கோ அண்ணை'' என்றபோது அவனுடைய மனம் "மேரி'' என்று திடுக்கிட்டது.

கிளிநொச்சி டவுணில் இந்த பஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான ஒரு கராஜ் இருந்ததால், அங்கேயே பஸ்ஸைக்கொண்டு போய் நிறுத்தினுன். அந்த இளைஞர்கள் விடை பெற்றபோது தேவனும் அவனிடமிருந்து விடைபெற்றுக்கொண்டான். துளசியும் தேவனுடன் புறப்பட்டாள். அவனும், தேவனும் ஏன் அந்த இளைஞர்கள் கூடத் திகைத்தனர். எவ்வளவு சொல்லியும் அவள் பிடிவாதமாக, "நீர் என்ர மானத்தைக் காப்பாற்றினனீர் தேவன்! ஆனு எல்லோருக்கும் உம்மைப் போல ஒருத்தர் வந்து காப்பாற்ற ஆளில்லாமல் எத்தினையோ பேர் சீரழிஞ்சிட்டினம். இனி இதுக்கெல்லாம் இடம் குடுக்கக்கூடாது. நானும் இனிமேல் உம்மோடயே- உம்மோட துணையோடையே வரப் போறன். வாழ்க்கைப் பாதையில இல்லை. போராட்டப் பாதையில'' என்று உறுதியாகச் சொன்னபோது யாருமே மறுப்புச் சொல்லவில்லை.

எல்லோரும் போய் விட்டனர். அவன் மட்டும் தனியாக - பஸ்ஸின் பின் சீட்டில் படுத்திருந்தான். கராஜில் வேலை நடந்து கொண்டிருந்தது. ஒரு அரை மணித்தியாலத்தின் பின் பயங்கரமான சத்தங்கள் காதைப் பிளக்கத் தொடங்கின. கராஜில் வேலை செய்த வேலையாட்கள் வேலைகளை நிறுத்தி விட்டு சத்தங்களை கவனித்துக் கொண்டிருந்தனர்.

“என்ன நல்லாக் கிட்டத்தில கேக்கிது. ஒரு வேளை அவங்களோ?”

“சீச்சி... பெடியள் விடமாட்டான்கள். பெடியள் கெட்டிக்காரன்கள். வெற்றியா முடிச்சிடுவான்கள்.”

அவனுக்கு அவர்களுடைய பேச்சில் கவனம் செல்லவில்லை. மனம் பயத்தில் நடுங்கத் தொடங்கிவிட்டது. “எங்கே போய் ஒளிக்க முடியும்? ‘சாவு என்றிருந்தால் அது எங்கயும் வரும்’ எண்டு உணர்விருந்தாலும் அம்மா, சகோதரங்கள், மேரியெண்டு ஒவ்வொருத்தரும் கண்ணுக்கிள வரேக்கில- எல்லோரையும் அனாதையளா விட்டிட்டு நான் இஞ்சை - தனிய யாருமில்லாத அனாதை மாதிரி - அற்பப் பிராணியைப் போல சாக வேண்டி வந்திட்டால்...”

இருளத் தொடங்கிய போது சத்தங்கள் ஓய்ந்திருந்தன. பசி வயிற்றைக் கிள்ளியது. மூன்று நாட்களாக அவன் சரியாகச் சாப்பிடவில்லை; சாப்பிட மனமுமில்லை. இன்னும் காலையிலிருந்து எதுவும் சாப்பிடவில்லை. பசித்தாலும் சாப்பிட வேண்டும் என்ற உணர்வில்லை. “மேரி... மேரி...” என்று மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது. அவளை உடனடியாகப் பார்க்க வேண்டும் போல் உள்ளுணர்வு மனதைக் கிள்ளியது. ஏனென்றே புரியவில்லை.

கராஜை விட்டு வெளியே வந்து வீதியில் நடக்கத் தொடங்கினான். வீதி நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடக்கின்றது. மூன்று சந்திகளைக் கடந்து விட்டால்... போதும்... மேரியின் வீட்டுக்குப் போய்விடலாம். விரைந்து நடந்தான். இன்னும் கொஞ்சத் தூரம் தான். எதிரில் புகைமண்டலம் நெருப்போடு தெரிந்தது. “அவங்கள் வீடுகளை எரிக்கிறாங்களோ? கடவுளே! அப்ப... மேரி...?” நெஞ்சினுள் இனம் புரியாதவொரு படபடப்பு.

திடீரென்று “படபட” வெறுன் இயந்திரத் துப்பாக்கிகளின் சத்தங்கள். சனங்களின் கூச்சல். “ஏன்



நர்ஸ்: இந்தாங்க... வெள்ளி விழாப் பலகாரம். எடுத்துக் கொள்ளுங்க.

பேஷண்ட்: என்ன ஆஸ்பத்திரியின்ர வெள்ளி விழாவா?

நர்ஸ்: இல்லை. நீங்கள் ஆஸ்பத்திரிக்கு வந்த வெள்ளி விழா...

— மலர்விழி.

வந்தன்?” என்று ஒரு கணம் நினைத்தாலும் மேரியை நினைத்தபோது திரும்ப மனமின்றி கண்ணை மூடிக் கொண்டு மேரியின் குடிசையிலிருந்த திசையை நோக்கி ஓடினான். “சரியா? மடத்தனமா?” என்று அவனால் நிதானிக்க முடியவில்லை. நேரமுமில்லை. “மேரி! மேரி? அவளுக்கு என்ன நடந்ததோ? ஏது நடந்ததோ?” என்றுதான்மனம் கவலைப்பட்டது; துடித்தது. ஆயிற்று... வந்து விட்டான். படலை விழுந்திருந்தது. காலில் ஏதோ ‘சதக்’ கென்று நசிபட்ட போது குனிந்து பார்த்தான். சுற்றி வர எரிந்த நெருப்பு சிறுவனின் தலையை தனது ஒளியினால் அடையாளம் காட்டிய போது திகிலுடன் அந்தத் தலையைப் புரட்டினான். அது... அது .. கடவுளே! அது மேரியின் தம்பி.

இரத்தமெல்லாம் உறைந்து போய்... மூச்சே நின்று விடும் போலிருந்தது. அவனால் அந்த அதிர்ச்சியை எப்படி எதிர்கொள்வதென்று விளங்கவில்லை. மூன்று நாட்களுக்கு முன் தன்னுடைய வரவுக்காகக் காத்து நின்ற அச் சிறுவன் - “அக்காவுக்கு ரெண்டு கிழமையா சரியான காய்ச்சல்” ...அவன் சொன்ன அந்த வார்த்தைகள் கூட செவிப்பறையை விட்டு மறையவில்லை... அதற்குள்... அதற்கு...தலை வேறு முண்டம் வேறாய்...“ஐயோ!” என்று மேரியின் அலறல் ஈனஸ்வரத்தில் ஒலித்த போது “மேரி” என்று கத்தியபடி குடிசையை நோக்கிப் பாய்ந்தோடினான். ‘டுமீல்’ என்று எங்கிருந்தோ துப்பாக்கியின் குண்டுகள் பாய... அவன் வயிற்றைப் பொத்திக் கொண்டு “அம்மா...! மே...” அலறியபடி விழுந்தான். இரண்டு, மூன்று பூட்ஸ் கால்கள் அவனை உழக்கிக் கொண்டு போகின்றன. வேதனையுடன் நிமிர்ந்து பார்க்கிறான். உடைகளைச் சரி செய்து கொண்டு வந்தவனைப் பார்த்த போது... அவனால் உணர்ச்சிகளை அடக்க முடியவில்லை. “டேய் ... டேய்... பாவி...” அவன் கதறியதை அலட்சியமாக கேட்டபடி அவனை நிமிர்ந்து பார்த்த... அந்த பூட்ஸ்+ கனரகம்... சிறிய அதிர்ச்சியுடன் அவனருகே குத்துக் காலிட்டுக் குந்தியது.

“ஒயத?” (நீயா.)

அவன் விம்மி விம்மியழுதான். அவனுக்கு எல்லாமே முடிந்து விட்டது. அவங்கள் அவனிடமே தங்கள் சுயத்தை காட்டி விட்டாங்கள். அவனுடைய உரிமையிலேயே பலாத்காரம் நடத்திவிட்டார்கள்.

“ஒய தெமல ஊறுவா மொக்கொத் கறன; தன்னுவத? (உன்னுடைய தமிழ்ப் பன்றிகள் என்ன செய்திருக்கிறார்கள் தெரியுமா?) அந்த ஆயுதபாணியின் கேள்வி அவனுக்குப் புரிகிறது. “அதுக்காக... அதுக்காக... என்ர மேரியை... என்ர மேரியையா?” அவன் அந்த ஆயுதபாணியை முதல் முதலாக வெறுப்புடன் பார்த்தான்.” அந்த ஆயுதபாணி பழகிய தோஷத்தில் அவனுடைய காயத்துக்குக் கட்டுப் போட முயற்சி செய்த போது அவன் கத்தினான் “என்னைத் தொடாதே! அங்கால போடா...”

அந்த ஆயுதபாணி அவனை முறைத்துப் பார்த்தான், ஒய சேரம தெமல ஊவ. அப்பிட்டகமக் நா”

(நீங்கள் எல்லாம் தமிழ்ப் பன்றியள் தானே. எனக்குப் பரவாயில்லை) என்று கூறிவிட்டு அந்த இடத்தை விட்டகன்ருன். அவன் முன்ருப போன அவனைப் பார்த்து வெறு புடன் காறி உமிழ்ந்தான்.

அவளால் எழும்ப முடியவில்லை. இரத்தம் பெருமளவில் வெளியேறிக் கொண்டிருந்தது களைப்பாக இருந் தது. பரவாயில்லை. இனி என்ன நடந்தால் என்ன? அரைந்து அரை ந்து குடிசைக்குள்ளே போனன். குருதி சிவப்புக் கோடு போட்டது. உள்ளே... உள்ளே...

மேரி பிறந்த மேனியாய் கிடக் கிருள். அவன் அவளுக்குக் கிட்ட வந்து "மேரி... மே... ரி.. என்ர... ரா...சா...த்தி'' அவன் கண்ணீர் விட்டு— வாய் விட்டுக்— கஷ்டப் பட்டு கதறி அழுகிருன். அவளு டைய கண்கள் மங்கிக் கொண்டிருந் தன. கண்களின் கடையில் நீர் கோடாக வழிந்தது. அவளால் எழும்ப முடியவில்லை. வேதனையுடன் துடித்துக் கொண்டு கிடந்த அவளைப் பிறந்த மேனியாக— அவன் முதல் முதல் பார்கிருன். அவனுக்கு அந்த உணர்வேயில்லை. அவளுக்கும் மேனியை மறைக்க வேண்டும் என்று தோன்றவில்லை. எல்லாம் போய் விட்டது. எல்லாமே போய் விட் டது.

அவளுடைய உடலிலிருந்து இரத் தம் வழிந்து கொண்டிருந்தது. அவ னுடையஉடலிலிருந்து வழிந்த குருதி அவளுடைய இரத்தத்தோடு கலந்து கொண்டிருந்தது. தட்டுத் தடு மாறி— கஷ்டப்பட்டு அருகில் கிடந்த சேலையை இழுத்து அவளு டைய மேனியை அவன் மூடிய போது— அவனுடைய முதுகை அவ ளுடைய கைகள் அன்புடன் வெகு சிரமப்பட்டு அணைத்துக் கொண் டது. இப்போது அவளுடைய ஜீவ னில் ஏதோ ஒரு பரிபூரணம் கிடைத்துவிட்டது போல் கண்கள் மேலே செருகத் தொடங்கின.

அந்தக் கடைசி நிமிஷத்திலும் அவனுடைய ஆத்மாவும் மன மும்...'' கடவுளே! நான் இன்னும் உன்னை நம்புகிறேன். தேவனும், துளசியும்... அவர்களைப் போன்ற வர்களையும் நீ நிச்சயமாய் காப்பாற் றுவாய் என நம்புகிறேன். நிச்சய மாய்... அவங்கள் தப்பத்... தான்... ... ..............

✱ ✱ ✱

அடுத்த நாள்........

வானொலியும், ரீ. வி யும் லங்கா புவத். பாதுகாப்பு வட்டாரங் களை ஆதாரம் காட்டி "நேற்றுக் கிளிநொச்சியில் இராணுவத்தினருக் கும், பயங்கரவாதிகளுக்கு மிடையே நடைபெற்ற துப்பாக்கிச் சமரில் ஒரு பெண் பயங்கரவாதி யுட்பட பல பயங்கர வாதிகள் கொல்லப்பட்டனர். பயங்கரவாதி களுடன் உயிரைப் பணயம் வைத்து நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக் காவும், நாட்டின் தார்மிகக் கோட் பாடுகளையும் ஒற்றுமையையும் பாதுகாப்பாகவும் போராடிய பாது காப்புப் படையினருக்கு இந்த நாடும், நாட்டு மக்களும் நன்றிக் கடன் பட்டுள்ளதுஎன்று மேன்மை தங்கிய...'' என்று தமிழில் செய்தி வாசித்துக்கொண்டிருந்தன.

வடபகுதிப் பத்திரிகைகள்...

"கிளிநொச்சியில் இடம் பெற்ற நேற்றைய அசம்பாவிதங்களில் குழந்தைகளுட்பட பல அப்பாவிகள் உயிரிழந்தனர். ஒரு குடிசையினுள் கற்பழிக்கப்பட்ட நிலையில்— கொல் லப்பட்ட ஒரு இளம்பெண்ணின் சட லமும்,குண்டுகள் பாய்ந்து இறந்த நிலையில்ஒரு இளைஞனின் சடலமும் அருகருகே காணப்பட்டன...'

எதைக்கேட்பது? யாரை நம்புவது?

✱ ✱

"எனக்கு ஒரு ஆபத்துமில்லை'' என்ற தந்தியைக் கண்டபின் தான் அவர்களுக்கு போன உயிர் திரும்பி வந்தது.

''நான் கும்பிட்ட தெய்வமும்— பிடிச்ச விரதங்களும் 'தான் என்ர பிள்ளையைக் காப்பாற்றியிருக்கு'' என்று அம்மா கற்பூரக்கட்டியுடன்



''டைரக்டர் சார்...
கதா நாயகன் தொட்டு நடிக்க விடமாட்டான்,,
"ஆஹா! நீ ஒரு பத்தினிக் கதா நாயகி''...
"போங்க சார்! ராத்திரி உடம் பெல்லாத்தையும் புண்ணாக்கிப் போட்டியள்... ஓரேவலி... அது தான்...

— தர்ஷினி

வைரவர் கோயிலுக்கு அந்த இழுப்பி லும் போய் விட்டாள்.

''இனி... எப்படியும்.. தம்பி ரெண்டு, மூண்டு நாளில வந்திடு வான்... கிளிநொச்சிப் பிரச்சனைகள் ஓயும் மட்டும் அவன் வர ஏலாதே... ரெண்டு நாள் செல்லும் அவன் வர...'' அவர்கள் அவனுக்காகக் காத்திருக்கிருர்கள்.

✱ ✱

இதுதான் ஒரு நிகழ்வா? இல்லை... தினம் தினம் நடக்கும் தினசரி நிகழ் வுகள்- இந்தநிகழ்வுகள் நிகழ்தகவு கள் அல்ல......

(இந்தப் பிரச்சினைகளுக்கு சட்ட ங்கள் போதவில்லை. இன்னும் தேவை ப்படுகிறது. ஆம்! அன்ருடம் இறக் கும் உயிர்களின் நிழல்களைப் பிரேம் போட்டு வைக்க இன்னும் நிறைய மரச்சட்டங்கள் தேவை. எங்கள் பிரச்சினைகள் சட்டங்களுக்குட்பட் டவை. ஆம்! எங்கள் உருவங்கள் அந்த ஓரடிநீள ஓரடி அகல மரச் சட் டங்களுக்குட்பட்டவையாகத் தான் உள்ளன.)

—முற்றும்—

# புதுக்கவிதை

## இலைகள் சருகுகளான போது....

★ வவுனியா — திலீபன்

இலையுதிர் காலம்
இதயத்தின் மேற்பரப்பில்
சின்னச் சின்னக் காயங்கள்
ஓ!
அந்த ஈரஅரச மரத்தின்
இலைகளெல்லாம்
சருகுகள்...

பச்சை இலைகள்
பழுத்துவிடுமென்பதற்காக
நான்
என் ஜன்னல் வழியே
சிகரெட் புகையைக் கூட
ஊதியதில்லை!

என்
காதல் தேவதைக்கு
தபால் கவருக்குள்
கடிதமாக வைத்து அனுப்பியது
இலையைத் தான்.
ஏனெனில்
எனக்கு ஈர இதயமுண்டென
தெரியப்படுத்த!

புழுதியலைகள்
ஜன்னலினால்
பறந்து வந்ததைக் கண்டுகூட
புயல் வீசிய வேளையினிலும்
என்
ஜன்னலைச் சாத்தியதில்லை.
இலைகளின் நர்த்தனத்தை-
சலசலப்புச் சங்கீதத்தை-
நுகர முடியாதல்லவா?

இலைகளை
தாங்கியுள்ள
கிளைகள்
முறிந்துவிடுமென்பதற்காக
ஊஞ்சல் கட்ட வந்த
சிறுவனைக் கூட
உதைத்திருக்கிறேன்!

என்
நெஞ்சு மேடையினில்
கவிதை பாடிய
ஈரமரமே—
என்னுள்
ஏன் தீயைத் தெளிக்கின்றாய்?

என்
இரவுகளில்
நீலாம்பரியும்
என்
விடியல்களில்
பூபாளமும்
பாடிச் சருகுகளாய்ப் போன
இலைகளே...
கொஞ்சக் காலம் பொறுத்
திருங்கள்
நான் விழுவேன் உங்கள்
மடியில்!

## விளக்கின் காயமே வெளிச்சம்

— வாசுதேவன்

நடக்கத் தொடங்காமல்
குறிகளை வைத்துக்
கொஞ்சிக் கொண்டிருந்தால்
உதடுகளும் ஓர் நாள்
உதிர்ந்து போகும்
நடக்கத் தொடங்கி விட்டால்
குறிகளும் நமை நோக்கிக்
கும்பிடும்!

o

ஆடையான பிறகு
ஆச்சரியப்படுகிறோமே...
நமக்குத் தெரியுமா
தையல் கடையில்
துணி பட்ட
துன்பம்?

o

சிதை படுவதன்
சிரமத்தை
தாங்க மறுத்தால்
கல்லுக்கு வருமோ
கவர்ச்சி?
தாங்குவதை மட்டுமொரு
தவமாக்கிக் கொண்டால்
வேண்டிய வரமெல்லாம்
வீடு வந்து சேரும்

o

அடுப்பு நெருப்பல்ல
அணைந்து போவதற்கு...
கனலுக்கு நீயோ
கருப்பை!
பாடுபட வேண்டியதெல்லாம்
பத்து மாதங்களே

o

சூரியன் இரவுக்குத்
தாயாகலாமா? உன்
சோதி உனைத் தின்னும்
தீயாகலாமா?

o

நாளை உன்னை
நாடி வரும்—
இன்றில் நீ
இயங்கினால்

o

பறக்கலாமா என்று
பயப்படாதே...
பறக்கிறேன் என்று
சிந்தித்தால் போதும்
சிறகு முளைத்து விடும்

o

அழகாய் இருப்பதால்
ஒரு காயத்தை
அனுமதிக்க முடியுமா?
போதையின் முகங்களை
பொசுக்கி எறிந்து விடு!

o

நீ
தூங்கும் போது
பூமிக்குப்
புண்ணாகி விடுகிறாய்
விழிக்கும் போது
கண்ணாகி விடுகிறாய்

o

இமை
திறக்கும் வரை
சுமை இருட்டு
உன்னைச்
சுற்றித்தான் இருக்கும்
திறந்தால்
வெளி வரும்
தீயில்
சுற்றியிருப்பதெல்லாம்
சுடுபட்டுப் போகும்

o

பலரின்
அகவரிகளில்
உன் முகவரி
அறிமுகமாக வேண்டுமென்றால்
முதலில்
உன் சொந்த
முகவரியோடு தான்
நீ
மோதிக் கொள்ள வேண்டும்

o

தோல்வி என்பது
வெற்றி கொடுத்தனுப்பும்
'விசிட்டிங் கார்ட்'
கசக்கி, எறியாமல்
கவனித்துப் பார்த்தால்
வெற்றி ரகசிய
விலாசம் தெரியும்

o

கவலை இருட்டில்
சூரியனும் கூட
காணமல் போய் விடும்...
அந்தக்
குப்பையை உதிர்த்தித்
தீ வைத்துக்
கொளுத்தி விடு

o

எழுந்து நட!
எழுந்து நட!
பூமியும் சுருங்கியுன்
பின்னாலேயொரு
புள்ளியாகி விடும் வரை
எழுந்து நட!
எழுந்து நட!

சிறுகதை

# ஒலி

திருமதி கோகிலா மகேந்திரன்



'மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்' கண்ணன் சொன்னாலும், தேவர்களுக்கு ஆறு மாதம் பகற்காலம், ஆறு மாதம் இராக்காலமாம்! - தேவர்களுக்கென்ன, துருவ வாசிகளுக்கும் அப்படித்தான்! வெள்ளிக்கோளில் இவர் போய் வசித்தால், இவருக்கும் நூற்றுப்பன்னிரண்டு நாள் இரவும், நூற்றுப்பன்னிரண்டு நாள் பகலுமாய் இருக்கும் - இதென்ன பெரிய அதிசயமே?- அந்தஆறுமாதஇரவு முடிந்து விடியும் காலம் மார்கழியாம்! அதனால் அது சிறப்பான மாதமாம்!

கண்ணனுக்கு மனச்சந்தோஷமாக இருக்கட்டும்! இவருக்கு இந்த மாதம் முழுதுமே மனத்தாக்கலைவாக(Tension)இருந்தது! உயரமும் (அமைதியான கண்களுமாய் அவர் அவரைச் சுற்றி ஒரு நெருக்கமும் புழுக்கமும் எப்போதும் இருந்தன. அவருக்குள் இருந்து இடையிடை கானமிசைத்த ஒருசில பறவைகளும் பறந்து விட்டது போல . !

எத்தனையோ முறை திருப்பித் திருப்பிச் செய்ததில் இரண்டு குவிவு வில்லை (ConvexLens)கொண்டு அமைக்கப்பட்ட இந்தத் தொலைகாட்டி (Telescope) இம்முறைதான் சரியாக வந்திருக்கிறது. மார்கழி மாதத்தின் அதிசயங்களில் ஒன்ருய் இன்று வானம் மிகத் தெளிவாயும் இருக்கிறது. முற்றத்தில் நிறுத்தப்பட்ட தாங்கியில் (tsand) தொலை காட்டியைப் பொருத்தினுர் மாஸ்டர்.

மேற்கு வானில் மிகத் தெளிவாய் தெரியும் வியாழன்... தொலைகாட்டியூடாகப் பார்த்தபோது, பல்வேறு நிறங்களை வெளிவிட்டு மிக அழகாய் ஜொலித்த அந்த விநாடி அற்புதமாய் இருந்தது. தொலைகாட்டியூடாக வெள்ளொளி நிறப்பிரிகை அடையும்அழகு! (Chromatic Aberration) அவர் சந்தோஷிக்கிற ஒரு கணம்!

பிரதான வீதிக்கும் மாஸ்டரின் வீட்டு மதிலுக்கு இடையில் ஒரு ஆலடி தூரமிருக்கும்... வீதியை மருவியபடி வீடு! பஸ்ஸில் இருந்து இறங்கியவுடன் வீட்டு வாயிலில் நுழையலாம் என்று அப்போது நினைத்து மனைவியின் சீதனப் பணத்தில் ஆசையுடன் வாங்கிய வீடு! இப்போது...?

சற்று முன்னர்தான் பெரும் ஒலி எழுப்பியபடி கனரக வாகனங்கள் அந்த வீதியால் நீண்டு சென்றன. அவை சென்றதன் அடையாளமாய் இரண்டொரு வேட்டொலிகள்- பின் வெறிச்சோடிப் போன தெரு! சோர்ந்து வழிகின்ற வீதியோரத் தென்னைகள்!

மிக அருமையாயும் அதிசயமாயும் ஒரு பத்து நிமிடம் அவரது செவிப்பறை மென்சவ்வை (Ear -drum) எந்த ஒலி அலையும் தாக்கவில்லை! அந்த அமைதியைப் பயன்படுத்தியே அவர் இந்தத் தொலைகாட்டியை அமைத்து முடித்தார்.

மீண்டும் தொலைகாட்டியைக் கிழக்கு நோக்கித் திருப்பி, ஒருகூட்டமாகத் தெரிந்த 'கார்த்திகை' நட்சத்திரங்களைப் பார்த்தார். அதற்கு அருகில் மாடம் போலத் தெரிந்த 'ரோகிணி', அதற்கும் கீழே பிரபலமான அந்த ஓரியன் (Orion). எட்டாம் வகுப்பு விஞ்ஞான பாடத்தில் வானியல் அறிமுகம் செய்யப்பட்டு, அதற்கான ஆசிரியர் பாசறைக்கும் சென்று வந்த பின்னர்தான் இந்த நட்சத்திரங்களைத் தேடி பார்ப்பதில் மாஸ்டருக்கு ஒரு பிரியம் ஏற்பட்டிருந்தது.

''அப்பா... உதுக்குள்ளை என்ன தெரிது...?''

நீர் காலுக்கடியில் குளிர்ந்து பெருகுவது போல, அவரது காலுக்குள் ஓடிவந்தான் அவரது மழலை மகன்.

"இதுக்குள்ளேயோ கண்ணு... இதுக்குள்ளை தெரியிறது ஓரியன் என்ட வேட்டைக்காறன் நட்சத்திரம்.. அங்கை... அதிலை ஒரே நேருக்கு மூண்டு பிரகாசமாத் தெரிது. அதுதான் வேட்டைக்காரன்ரை 'பெல்ற்'.. மற்றப் பக்கமா மூண்டு... அதுதான் அவன்ரை வாள்... அந்தப் பக்கம் தனிய ஒரு நட்சத்திரம்... அதுதான்... அவன்ரை தலை... இனி உவனுக்குப் பின்னாலை கிழக்குப் பக்கதிலையிருந்து இரண்டு நாய் வரும்...

மாஸ்டர் மகனை அணைத்தபடி, விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கையில் அந்தச் 'சத்தம்' கேட்டது. பஸ் கண்ணாடிகள் நொருங்கிய பின்பும் அப்படியே சிலசமயம் நிற்பது போல, மகனது முகம் ஆயிரம் நடுங்கலுடன் நொருங்கி நின்றது. வீட்டு யன்னல்கள் உண்மையாகவே அதிர்ந்து— நொருங்காமல் ஓய்ந்தன. மாஸ்டரின் இதயம் ஒருமுறை நின்றுவிட்டுப் பின் துடிக்க ஆரம்பித்தது போல ஒரு உணர்வு! வழக்கம் போல... மனம் விறைப்படைந்து அமைதியிழந்தது. உலகம் வண்ணமிழந்து போனது போல்...!

வான் கொண்ட நட்சத்திரங்களைத் தொடர்ந்து பார்க்க முடியவில்லை! சந்திரன் சோகை பிடித்தாற் போல், மேற்றிசையில் சாம்பல் பூசி வெளிறித் தெரிந்தான்.

"என்னப்பா... பெரிய வெடியாயிருக்குது...? உங்களுக்கு... என்ன செய்யுது...? படுங்கோ இப்பிடி...!"

உள்ளேயிருந்து ஓடி வந்தாள் மனைவி.

இப்போது சில காலமாய்... பெரிய ஒலிகளைக் கேட்டவுடன் அவர் சமநிலை இழந்து, அந்தரப்படுவது அவளைப் பதற வைத்தது.

"எனக்கு ஒண்டும் செய்யேலை. நீ பதகளிப்படாதை. இப்பதானே உதாலை போனவங்கள்... எங்கை வெடிச்சுதோ தெரியேல்லை...கண்ணி வெடி போலைதான் இருக்கு..."

மனைவியைப் போலியாய் சமாதானம் செய்தவர் 'சாய்கதிரை'யில் மெதுவாக அமர்ந்து விட்டார்.

நேற்று முழுதும் பாடசாலையில் தன்னைப் பூச்சாண்டி காட்டிய அந்த 'மின் சுற்றுக் கணக்கை' இப்போதாவது செய்து பார்த்து விடலாம் என்றால்...?

வடக்குப் புறத்தில் இவரது வீட்டு மதிலை எல்லையாகக் கொண்ட 'டியூற்றறி'யிலிருந்து மெதுவாகக் 'கசமுச' வென்று வந்து கொண்டிருந்த ஒலி இப்போது- இந்தக் குண்டுச் சத்தத்தைத் தொடர்ந்து பெரும் இரைச்சலாகக் கேட்க ஆரம்பித்தது! அவர்கள் குண்டு வெடிப்புப் பற்றி அலசுகிறார்கள்! அவர்களிலும் பிழை இல்லைத்தான்- இனி, அவர்களின் 'டியூசன் மாஸ்டர்' வரும் வரையில்- சில சமயம் வந்த பின்னரும்- இந்த இரைச்சல் தொடரும்!

சென்ற வாரத்தில் ஒரு நாள் இப்படித்தான் இவர்கள் இரைந்து கொண்டிருந்த போது,

மனைவி மதிலுக்கு மேலே எட்டிப் பார்த்து "ஸ்" என்றதும், அவர்கள் "பயித்தங்காய் தலையை நீட்டுது இஞ்சை பாரடி பயித்தங்காய் கதைக்குது......" என்று மனைவியின் 'பட்டத்தை'ச் சொல்லி எள்ளி நகையாடி, மேலும் பலமாய்ச் சிரித்துக் கதைத்ததும், இன்றைக்கும் இந்த மதிலில் ஞாபகமாய்க் கிடக்கிறது!

சரி, இனி ஒரு வேலையும் செய்யேலாது சாப்பிடுவம்; சாப்பாட்டைப் போடு..."

மாஸ்டர் சாப்பிடப் போன போது, முன் கடையில் இருந்து "ஐ ஆம் எ டிஸ்கோ டான்ஸ்..." பாடல் ஒலிக்கத்தொடங்கியது.

"கொஞ்ச நேரத்துக்கு முந்தி அவங்கள் போன உடனை கடையை இழுத்துப் பூட்டினவங்கள், இப்ப அதுக்கிடையிலை திறந்து வைச்சுக் கொண்டு 'ரேப்பும்' போடத் தொடங்கிட்டாங்கள்.'

எரிச்சலுடன் புறுபுறுத்தாள் மனைவி.

அது 'றெகோடிங் பார்' அல்ல! ஒரு சிறிய சிற்றுண்டிச் சாலைதான்!

ஒரு மாதத்திற்கு முன் ஒரு மழை நாள் இரவில், இந்தக் கடைக்காரனுடன் கதைக்கப் போனதும்- அவமானப்பட்டுத் திருப்பி வந்ததும் -இவர் மனக் குகையில் மிக ஆழமான ஓவியமாய் வரையப்பட்டிருந்தது.

மெலிதான குளிர்காற்று 'சலக் சலக்' என்று மரத்தின் இலைகளோடு சண்டையிட்டுக் கொண்டிருந்தது. வீட்டில், பஸ்ஸில், தெருவில், பாடசாலையில், கடையில்... என்று எல்லா இடத்திலும் உலகம் ஒலியால் ஆக்கப்பட்டிருந்த எரிச்சலில், குடையை அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் விசிறிக் கொண்டு வேகமாய்ப் போன இவர்,

"தம்பி, இஞ்சை என்ன கலியாண வீடோ நடத்திறியள் ஒவ்வொரு நாளும்...?" என்றார்.

இவரை ஒரு பயித்தியம் போல் நிமிர்ந்து பார்த்தான் கடைக்காரப் பெடியன்.

"நீங்கள் கடையிலை உந்தப் பாட்டுக்களை உவ்வளவு சத்தமா விடப்பிடாது......"

"விட்டா... உமக்கென்ன செய்யுது...?"

தண்ணீர் தெறித்தது போல் அந்தப் பதில்! 'உங்களுக்கு' என்ற மரியாதை 'உமக்கு' என்று குறுகிவிட்டதிலும் இவர் ஆவேசமடைந்தார்.

"எனக்கு இடைஞ்சலாய் இருக்குது. ஒண்டும் சிந்திக்க முடியில்லை" உரப்பாகச் சொன்னார்.

"சத்தம் போடுறதாலை தான் எங்களுக்கு யாபாரம் நடக்குது. ஆனபடியால் அது எங்கட உரிமை. நீர் அதைத் தடுக்கேலாது..."

அதை விட உரப்பாகினான் அவன்.

"வழக்குப் போடுவன்' வெருட்டிப் பார்த்தார்.

"இப்ப பொலிசு எங்கையிருக்கு? கோடு எங்கையிருக்கு? வழக்குப் போட்டுப் பாருமன்......'

அவன் சவால் விட்டான்.

"நெடுக இரைச்சலுக்கை வாழ்றவையின்ரை காது கெதியிலை மெல்லிய ஒலிகளைக் கேட்கிற தன்மையை இழந்திடுதாம். பிறகு காதுக்குச் சாணை பிடிக்கேலாது...'

அவர் கொஞ்சம் இறங்கி வந்து நிலைமையை விஞ்ஞான ரீதியாக விளக்க முற்பட்டார்.

"நான் அதைப் பற்றிக் கவலைப் படேல்லை...'

"இனி மேல் இந்த மனிசனோடை கதைக்கிறதிலை பிரயோசனமில்லை' என்பது போல எழுந்து தன் வியாபாரத்தைக் கவனிக்க உள்ளே போய் விட்டான் பெடியன்.

அவர் தோல்வியுடன் மௌனமாய் வீடு திரும்பினார். அந்த மௌனத்தில் புயலின் கனம் இருந்தது. நிழல் விழுந்தும் பெரு மரங்கள் வீதியில் பயங்கரமாய்த் தோன்றின.

"நீங்களேன் கதைக்கப் போனீர்கள்?' என்று மனைவியும் கேட்ட போது,

"சூழல் மாசடையிறதைப் பற்றி உனக்கு என்ன இழவு தெரியும்? சும்மா கத்தாமல் வாயைப் பொத்திக் கொண்டு கிட....

கடைக்காரப் பெடியன் மேலிருந்த ஆத்திரத்தையும் மனைவிமேல் கொட்டித் தீர்த்தார். இந்த ஆதியம் ...எப்படி அழியும்?

'ஒரு இஞ்சாறு மாசத்துக்கு முந்தி, கனரக வாகனங்கள் போனால் இரண்டு மூண்டு நாளைக்குச் சுற்றுடல் அமைதியா இருக்கும். இப்ப அதுகும் இல்லை. அதுகள் போய் இஞ்சு நிமிசத்திலை எல்லாம் 'நோர்மல்' இனிமேல் யாழ்ப்பாணத்துச் சனத்தை ஒருத்தராலும் பயப்பிடுத்த ஏலாது போலை கிடக்கு...'

சாப்பிட்டு முடிந்த பின்னும், மாஸ்டரின் சிந்தனைகள் அத்திசையிலிருந்து ஓயவில்லை. வெளியே ஒலிகளும் ஓயவில்லை. இப்பொழுது தெருவில் வாகனங்களும் மெதுவாக ஓடத் தொடங்கி விட்டிருந்தன. ஒரு மோட்டார் சைக்கிள், சிறிது நேரத்தின் பின் பலமாக 'ஹோர்ன்' அடித்தபடி ஒரு கார்... தொடர்ந்து ஒரு லொறி...!

எந்த ஒலியும் வீட்டினுள் நுழையாமல் தடுக்கும் முயற்சி போல யன்னல்கள், கதவுகள் எல்லாவற்றையும் அடித்துச் சாத்தினார். 'சீ... நான் படுக்கப் போறன்... நாளைக்கு விடிய எழும்பி ஏதும் அலுவல் பாப்பம்'

என்று அலுத்துக் கொண்டபடி படுக்கச் சென்றார்.

மேற்குப்புற வீட்டிலிருந்து ஆணி அடிப்பது போல ஒரு சத்தம்! இடையிட்டு... இடையிட்டுக் கேட்டுக் கொண்டேயிருந்தது... அந்த வீட்டின் பத்து வயது வாண்டுப் பையன் ஏதோ உடைக்கிறான்.

தன் உலகம் பாடசாலை, வீடு, சத்தம் என்று சுருங்கி விட்டதில் பெரிதும் மன வெறுமை அடைந்திருந்தார் மாஸ்டர்.

நித்திரை வர மறுத்தது!

எல்லாவற்றையும் தலையைத் திருப்பி நோட்டம் விடுகிற மின் விசிறி சுழன்று கொண்டிருந்தும், புழுக்கம் அசைய மறுத்து அழுத்தமாய் மண்டிக்கிடந்தது. இந்த மார்கழியில் அந்தப் புழுக்கம் அதிசயமாய் இருந்தது இவருக்கு!

பத்து மணிக்குப் பிறகு எழுந்து சென்று இரண்டு மில்லிகிராம் (2mg) 'வலியம்' (Valium) மாத்திரையில் ஒன்றை விழுங்கிவிட்டு வந்து படுத்தார்.

'என்னப்பா நித்திரை வரேல்லையா?'

மகனை நித்திரையாக்கிவிட்டு வந்த மனைவியின் குரலில் கவலை மிதந்தது.

"இண்டைக்கு நித்திரை வராது போலைதான் கிடக்கு...'' நித்திரை வராது என்ற எண்ணம் மனதில் கடுமையான பரபரப்பும் அந்தரமும் கொண்ட ஒரு நிலையைத் தோற்றுவித்திருந்தது.

முன் கடையின் 'டிஸ்கோ' பாட்டுக்கள் இன்னும் கேட்டுக் கொண்டேயிருந்தன. வழக்கமாய்ப் பத்து மணியுடன் முடிந்து போகின்ற பாடல்கள்? இன்று...?

பின்புற வீட்டிலிருந்து ஒரு மூடியின் கீழ் விழுந்த உருளல்... கண்ணாடிப் பாத்திரங்களின் முணுமுணுப்பு! ஒலி எழுப்பும் சூழல் முழுவதையும் அறைந்து... சாகடிக்க வேண்டும் போல இவருக்குள் ஒரு வேகம்! ஆனால் செய்ய முடியாதே!

படுக்கையில் அமைதியற்றுப் புரண்டார்.

மனதில் மெல்லிழையாக ஊர்ந்திருந்த ஒரு வேதனை ஊதிப்பெருகி ஊடுருவ ஆரம்பித்தது.

இரைச்சல் இருதய நோய் உயர்குருதி அமுக்கம் ஆகியவற்றைக் கொண்டு வருகிறது என்றும், அதுவே சூழலை மாசுபடுத்துவதில் முதலிடம் வகிக்கிறது என்றும் அண்மையில் எங்கோ வாசித்த நினைவு...!

தனக்கும் இருதயநோய்தான் ஏற்பட்டு விட்டதோ?

எங்கோ என்ன எங்கோ? தமிழ் நாடு சுகாதார அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே தான் இவ்வாறு பேசியிருந்தார். அவருக்குப் புரிகிறது!

"யாழ்ப்பாணத்திலை இருக்கிற சனம் ஒண்டுக்கும் இது விளங்குதில்லையே?''

சின்ன வயதிலேயே இதை நன்றாகப் புரிய வைக்க வேண்டுமென்று எட்டாம் வகுப்பிலேயே சூழல் மாசடைதலைப் பற்றி...!

அந்த அலகை வகுப்பில் கற்பித்தபோது, காண்டீபன் கேட்டான்.

"கிருமி நாசினியள், செயற்கைப் பசளையள் தண்ணியோடை சேந்தாத் தண்ணி மாசடையுது எண்டு சொல்றம். ஏனெண்டால் அதுகள் நஞ்சுகள். ஆனால் ஒலி காத்திலை கலந்தா.... வளி எப்பிடி மாசடையும்? ஒலி நஞ்சுப்பொருளே... இல்லையே...?''

‘‘எந்த ஒரு பொருளும் அளவுக்கு அதிகமான செறிவிலை ஒரு இடத்திலையிருந்து, அதன் மூலம் மனித இனத்துக்குத் தீமை செய்யிறபோது அது மாசாகும்... நீரும் கூடச் சில சந்தர்ப்பங்களில் மாசுப் பொருளாகும்... வெப்பமும் சில சந்தர்ப்பங்களிலை மாசாகும்...’’

இவற்றைக் காண்டீபனுக்குப் புரிய வைப்பதில் மாஸ்டர் நீண்ட நேரம் செலவிடவேண்டி இருந்தது. ‘முன்கடைப் பெடியனுக்கு’ எவ்வளவு நேரம் செலவழித்தும் புரிய வைக்க முடியவில்லை!

ஏதேதோ சிந்தனைகளுடன் உறங்கிப்போனார் மாஸ்டர். அதுவும் ஆழமான நித்திரையல்ல! கனவுகள் நிறைந்த, அமைதியற்ற, அடிக்கடி விழிப்பு ஏற்படுகிற நித்திரை!

தான் ஒரு பயங்கர மனநோயாளியாய் அங்கொடை ஆஸ்பத்திரியில், இரும்புவலைக் கட்டிலுக்குள்ளே படுத்துக் கிடந்து - மனைவியைப் பார்த்துப் பேய்ச் சிரிப்புச் சிரிப்பதாய்...

கனவுகளும் வாழ்க்கையும் எந்தப் புள்ளியில் சந்திக்கின்றன என்று மாஸ்டருக்குத் தெரியவில்லை.

அந்தக்கனவு முடிவதற்கிடையில் ஒரு பயங்கர ஓசை! நட்சத்திரங்களும் நடுங்கித் துயருறும் நள்ளிரவில் அந்த ஓசை... மிக அண்மையில் கேட்டது.

கெட்டித்துப்போன முகத்துடன் எழுந்து படுக்கையில் அமர்ந்தார். மெதுவாக எழுந்து கதவுக்கருகில் சென்றார். திறந்து வெளியே பார்ப்போம் என்று நினைத்தார்.

‘‘ஐயோ, ஐயோ, கதவைத் திறக்காதையுங்கோ! இந்தக் காலத்திலை என்ன அவசரம் எண்டாலும் இரவிலை கதவைத் திறந்து வெளிலை போகப்பிடாது...’’

கதறியபடி ஓடி வந்த மனைவி அவர் கையைப்பிடித்துத் தடுத்தாள். முப்பதாயிரம் வருட முதுமையும், பயமும் அந்தக் கணத்தில் அவள் முகத்தில் குடியேறியிருந்தன

வாழ்வில் எப்போதுமே மனைவி சொல்லைத் தட்டி அறியாதவர் போலப்பணிந்து திரும்பி வந்துபடுத்தார் இவர்.

‘‘அற்பஜீவிகள்- மனிதனோடு ஒப்பிடும்போது ஒரு ‘இத்துனீயாயித், தெரிகிற வைரசுக்கள், பற்றீரியங்கள், பூச்சிகள், ‘புரத்தோசோவன்’ கள், சில சமயங்களில் மனிதனை எப்படி ஆட்டிப்படைத்து விடுகின்றன என்பது பற்றி எமது வைத்தியர்களைக் கேட்டால் சொல்லுவார்கள் கதை கதையாய்! பூச்சிகள் சில... ஒரு மனிதனைப்படுத்திய பாட்டைப் பற்றிச் சிறுகதை எழுதிய ஒரு எழுத்தாளனுக்கு இந்தியாவில் சில வருடங்களுக்கு முன் ‘இலக்கிய சிந்தனைப் பரிசு கிடைத்திருக்கிறது!’’

‘‘இந்த ஒலி உயிர்கூட இல்லாத இந்த ஒலி மனிதனைச் செய்யும் வதை... இதைப்பற்றி ஏன் நான் ஒரு கதை எழுதக்கூடாது? எழுதினால் என்ன கிடைக்கும் எனக்கு? இந்த நாட்டில் தமிழனுக்கு என்ன கிடைக்கும்...? சூடுதான் கிடைக்கும்?

ஒன்றும் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. காலையில் எழுந்து அந்த மின்சுற்றுக் கணக்கைச் செய்துவிட்டு இதை எழுதத்தான் வேண்டும்...

நினைத்தபடியே கொஞ்சம் உறங்கிப்போனவர் மீண்டும் கண்விழித்தபோது, ‘‘போற்றி என் வாழ்முதலாகிய பொருளே;’’ என்ற பாடல் உச்ச உரப்பில் வானில் மிதந்து வந்து கொண்டிருந்தது. இது திருவெம்பாவைக் காலம் என்பது இவருக்கு நினைவுக்கு வந்தது.

அமைதியான காலைப் பொழுதை விழுங்கிக்கொண்டிருந்த அந்தப் பாடல், அருகில் இருந்த வைரவர் கோயிலில் இருந்து ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது!

இரவு முழுவதும் வதைபட்டதில் கண் எரிந்தது. தலை சுற்றுவதுபோலிருந்தது. மனதில் தொடர்ந்து அந்த ‘ரென்சன்’ உணர்வு.

பல பலா விடியலுற்றபோது, துமி துமி என மழை துமித்துக் கொண்டிருக்க,

‘‘இஞ்சரப்பா! என்னாலை தலை நிமித்த முடியேல்லை. கொஞ்சப் பிளேன்ரீ’கொணர்ந்து தாரும் பாம்பம்...’’ என்று மனைவியை எழுப்பினார்.

அவள் எழுந்து குசினிக்குள் போய் ஐந்து நிமிடம்கூட இருக்காது! திடீர் என்று எங்கிருந்தோ தோன்றிய ஐந்து ஹெலிகொப்டர்கள் தாங்க முடியாத இரைச்சலுடன் அந்த ஊரின் மேல் வட்டமிட்டுப் பறக்கத் தொடங்கின.

அறிகுறி இல்லாத ஆக்கிரமிப்பு!

ஆகாயத்திலிருந்தும், தரையிலிருந்தும் இடைவிடாது கேட்ட சூட்டுச் சத்தங்கள் ,ஊசி இழைகளால் உயிர் நரம்பையே ஊடுருவின.

கோவிலில் திருவெம்பாவைக்குக் கூடிநின்ற சிலர்குழறியபடிதெருவில் ஓடுவது கேட்டது. காலையில் எழுந்து வைத்தியரிடம் செல்ல வேண்டும் என்ற நினைவு முற்றாக விடைபெற்றுவிட்டது.

மனதின் ‘ரென்சன்’ அங்சைந்தி **Anxiety** ஆகியவை அதிஉச்ச நிலையை அடைய... படுத்த கட்டிலின் கீழ் பதுங்கிக் கொண்டார் மாஸ்ரர்.

நீ வெளிலை போகாதை...’ என்று மனைவிக்குப் பணித்த வார்த்தைகள் பிசினைப் போல் தொண்டையில் ஒட்டிக் கொண்டு, மிகக் கடினப்பட்டு வெளியில் வந்தன.

சோகமே மௌனமாய் உருக்கொண்டு சிலையாய்ச், சமைந்தது போல் சுவர் மூலையில் நின்றாள் மனைவி. அவளை ஒட்டிக்கொண்டு அவளின் சேலையைப் பிடித்தபடி அழுதுகொண்டு மகன் மனைவியின் கண்களிலும் ஈரம் கண்ணீருக்குத் தேவையான உரம், பயத்திலிருந்தும் கிடைக்கிறதா?

அதிகாலையில் தாங்கள் துலாவில் ஏறி, பட்டை மூலம் நீர் பாயிச்சுகையில், பறவைகளின் உதயத்திசை தமக்குத் தேனிக்கும் என்று மாஸ்டரின் தந்தையார் முன்னர்ஒரு முறை கூறியது இப்போது அவருக்கு நினைவு வந்தது!




## நீதி இன்னும் சாகவில்லை

சட்டங்கள் திட்டமிட்டு அதி கரிக்கப்படுகின்றன. சட்டத்தின் ஆட்சி சவக்கிடங்கிற்குள் போய் விட்டதோ என்றறிலை ஆனல் இன் னும் நீதி, நீதிமன்றத்தில் சாக வில்லை போலும் திரு. போல் நல்ல நாயகத்தின் வழக்கில் யூலை 17ல் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கண்டோம். திரு. நல்லநாயகம் ஒரு கனேடியப் பிரஜை கல்முனை பிர ஜைகள் குழுவின் தலைவர். அவர் மீது "சிறிலங்கா அரசாங்கத்தி மிருந்து விடுதலையும் வெறுப்பை யும் உருவாக்கும் வகையில் பொது விழிப்புணர்ச்சியையும் பொது ஒழுங் கினத்தையும் ஏற்படுத்தி, வதந்தி களையும் பொய் கூற்றுக்களையும் பரப்பினர்' என்பதே அரசு சுமத் திய குற்றம். இதற்கு துணைபோனது அவசரகாலச் சட்டத்தின் 29ம் பிரிவு. "பொதுசன விழிப்புணர்ச்சி யையும் பொது ஒழுங்கினத்தையும் ஏற்படுத்தும் வதந்திகளை அல்லது பொய் கூற்றுக்களை வாய்மூலமோ அல்லது வேறு வழிகளினுலோ பரப் புதல், தெரிவித்தல் கூடாது'' என் பதுதான் அதன் வாசகம். திரு. நல்லநாயகம் 'காரைதீவுக் கிரா மத்தை முஸ்லீம்கள் தாக்குவதற்கு விசேட அதிரடிப்படை (S.T.F.) உதவியது; நொச்சிமுனையில் S.T.F. தமிழ் இளைஞர்களைக் கொலை செய்து இளைஞர்களினாலேயே வெட்டு டிய குழிகளில்புதைத்தனர் என தெரி வித்தார் எனக் கூறி அவரைகைது செய்தனர்.

திரு. எஸ். நடேசன் Q.C. எதிர் னுதாரின் சட்டம த்தரணி. வாத மும் வியாக்கியான மும் நீதி மன்றத் தில் கரைபுரண் டது. பொது மக் களிற்கு அல்லது அதன் ஒருபகுதி யினருக்கு வதந்தி பரப்பப்படாவிடின் அது பொது ஒழுங்கினத்தை ஏற் படுத்த இடமில்லை. ஒரு தொடர்பு, குறிப்பிட்ட சம்ப வம் குறித்து ஒரு தனிப்பட்ட நபரிடம் செய்யப்படும் போது அதனை 29 ஆம் பிரிவு கட்டுப்படுத்த முடியாது எனக் கூறி திரு நல்லநா யகத்தை அப் பிரிவின் பிடியிலிருந்து மீட்க முனைகிறர். அரச சட்டத் தரணி திரு. சுனில் டி. சில்வா அவர் திலுரையில் அவசர காலச் சட் டம் ஒரு கையளிப்புச் சட்டமல்ல. ஆகவே அதன் சரத்துக்கள் மீதான வியாக்கியானம் தெளிவில்லாத விடத்து குற்றம் சுமத்தப்பட்டவ னிற்கு சாதகமாகவே அது கருதப் பட வேண்டிய அவசியமில்லை. வத ந்தியை பரப்பியமையை நிரூபிக்க முடியாத சூழ் நிலையிலும் நீதிமன் றம் வதந்தியை பரப்ப முயன்றிருப் பினும் அவரைத் தண்டிக்க வேண் டும் என வேண்டினர்.

### சட்டம்

நீதியரசரின் தீர்ப்போ 84 பக் பக்கத்தில் திரு. நல்லநாயகம் காரைதீவில் எப்பிரல் 1985ல் நடந்த சம்பவம் குறித்து தானு கவே முயன்று எந்தவொரு தகவலை யும் வெளியிட முயலவில்லை. பாதிக் கப்பட்டவரிடமிருந்து திரட்டப் பட்ட தகவல்களையே தெரிவித் தார். என்னிடம் இருக்கும் சான்று களின் படி காரைதீவு கிராமத் தாக்குதலுக்கு முஸ்லீம்களிற்கு உதவியாக S.T.F. இயங்கியது என் பது வதந்தியல்ல. அது நம்ப முடி யாத ஒன்றுமல்ல நொச்சி முனைச் சம்பவம் தொடர்பாக அவர் பாதிக் கப்பட்டவரின் பெற்றேர்கள் குறிப் பிட்டவற்றையே தெரிவித்துள்ளார் இன்றைய கட்டத்தில் பிரசைகள். குழுவினரின் கடமை மிகப் பொறுப் பானதும் கடினமானதுமாகும். தற் பொழுது அவர்களிடமே குற்ற மறியா மக்கள் ஆறுதலடையக் கூடியதாகவுள்ளது. எனக் கூறி திரு நல்லநாயகத்தை விடுதலை செய் தார்.

இத்தீர்ப்பு இன ஒழிப்புச் சக்தி களை இனம் காட்டிய வரலாற்றுச் சான்று இங்கு நீதி வென்றது. அது இன்னும் அது சாகவில்லை. பிதா சிங்கராயர் மீதான வழக்கில் சட் டத்தின் கடுமையும் படையினரின் கொடுமையும் வெளிவந்தன. தொடர்ந்தும் றிமாண்ட் சிறையில் வாடும் அவரின் அடுத்த வழக்கில் நீதி மரண தண்டனையிலிருந்து பிழைத்து விடுமா?

## வரலாறு

### நகரம் கிராமத்தை விழுங்குகிறதா?

சிந்துவெளி நாகரீகம் மிகத் தொன்மையானது. அங்கு நகரக் கலாச்சாரம் நிலவியது என்பதற்கு சான்றுகள் உள. உலகில் முன்னர் நகரங்கள் மிகச்சில. இன்று நகராக் கமும் பெருகி வரும் சனத்தொகை யும் உலகின் இரு பெரும் பிசாசு களோ? என்பதே பயப்பாடு. அண் மையில் ஸ்பெயின் தேசத்திலுள்ள பார்சிலோனு நகரில் "குடித்தொ யும் நகரத்தின் எதிர்காலமும்' என்ற பொருளில் கருத்தரங்கு இடம் பெற்றது. அதில் குறிப்பிடப் பட்டவைகள் சில.

இன்று உலக மக்களின் 40 வீதத்' தினர் நகரத்தில் குடி கொண்டுள் ளனர். 2000ம் ஆண்டில் உலக மக்களில் பாதிப் பகுதியினர் நகர வாசிகளாகவேயிருப்பர். 78 நகரங் கள் ஒவ்வொன்றும் 4 மில்லிய னிற்கு மேற்பட்ட சனத்தொகை யைக் கொண்டிருக்கும். அதாவது

# நகரம் கிராமத்தைவிழுங்குகிறதா?

உலகின் 20% மக்கள் இவ் 78 நகரங்களில் வாழ்வர். 1950 ல் கோடி மக்களைக் கொண்ட நகரங்கள் மூன்று. அவை லண்டன், நீயூயோர்க் ஹங்காய் ஆனால் 2000ம் ஆண்டில் இத்தகையவை 22 ஆக பெருகும். இன்று அதிசனத்தொகை கொண்ட நகரம் மெக்ஸீக்கோ அது இந்நூற்ருண்டின் முடிவில் கனடா தேசத்தின் சனத்தொகையைக் கொண்டிருக்கும். விருத்தியடைந்த நாடுகளில் டோக்கியோ அதிசனத்தொகையுடைய நகரமாக விருக்கும்.

இக்கருத்தரங்கில் உருவான பிரகடனம் 'பார்சிலோஞ பிரகடனம்' எனப்பட்டது. நகர, தேசிய. சர்வதேச மட்டங்களில் திட்டமிடல், கொள்கை உருவாக்கம் குறித்து ஒரு சிறப்புச் செயல் முறையை அது கோருகிறது.

நகர்நோக்கிய படையெடுப்பு முதலில் குறைவிருத்தி நாடுகளின் நகரங்களில் வேலையின்மையையும் சமூக தொல்லைகளையும் ஏற்படுத்தும். பின்னர் அவை கைத்தொழில் நாடுகளிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு விடும் என்பதே விருத்தியடைந்த நாடுகளின் அச்சம்.

எப்படி கிராமத்தவனிற்கு நகரத்தில் பிரஜாவுரிமையை பெருது தடுப்பது? நகரம் நரகமாவதை எப்படித் தடுப்பது. இவை இன்றைய சிந்தனைகள்.

★

## பொருளியல்

### மௌன விற்பனையாளன் (SILENT SALESMAN)

நாம் எல்லோரும் கடைகளிற்குப் போகின்றோம். இவ்விற்பனை நிலையங்களில் விற்பனையாளர்கள் எம்மை வரவேற்கிறார்கள். எமது தேவைகளைத் தந்துதவுகிறார்கள். இவர்கள் பேசும் விற்பனையாளர். எம்மிற் சிலர் விற்பனை நிலையங்களிற்கு போகு முன்னரே எமது தேவைகளை குறித்துக் கொண்டு செல்வதுண்டு. இந்நடவடிக்கைக்கு மேலாகவும் கூட சில பொருட்களை நாம் குறிக்கத் தவறிவிடுகிறோம். ஆனால் விற்பனை நிலையத்தில் அவற்றைக் கண்டவுடன் வாங்கிவிடுகிறோம்.

சந்தை ஆராய்ச்சியின் மூலம் 'நுகர்வோரில் பலர் தமது கொள்வனவைத் திட்டமிட்டு அமைப்பதில்லை கொள்வனவைக் குறித்து திடீர் என முடிவெடுக்கும் தன்மையுடையவராக (Implusivf) காணப்படுகின்றனர்' என சந்தைபடுத்தற் துறையிலுள்ளோர் கண்டுள்ளனர். இதனால் தமது விற்பனைப் பொருட்களை போதுமான தொகையிலும் கண்மட்டத்திலும் அழகான முறையிலும் அடுக்கி காட்சியாக வைப்பர். அவை நுகர்வோரை வாங்கும்படி தூண்டுகின்றன. தாமாகவே தம்மை விற்பனை செய்கின்றன. இக்காட்சியையே (Display) நாம் பேசாத விற்பனையாளன்என்கிறோம்.

விற்பனை நிலையத்தில் இட நெருக்கடி, பேசும் விற்பனையாளனிற்கு நேரநெருக்கடி, நுகர்வோனர்க்கு பணநெருக்கடி, நுகர்வோனின் நேரமும் நெருக்கடி, இந் நெருக்கடிகளிற்குள் மௌன விற்பனையாளனும் தன் விற்பனைக்கு போட்டியிடுகிறான்.

எப்பொழுது நாம் எமது கொள்வனவை மௌன விற்பனையாளனிடம் பெற்றுக் கொள்கிறோம்?

## நடப்பு

நாம் ஒரு கிலோ அரிசி வாங்கும்போது அதிலுள்ள 70 கிராம் தூசிற்கும் வேறு பொருட்களுக்கும் அரிசி விலை கொடுத்துள்ளோம். அறுவடையின் பின் ஏற்படும் இழப்பு இன்று இலங்கை காப்பு இருப்பாக (BUFFER STOCK) இறக்குமதி செய்யும் அரிசியிலும் அதிகமாகும். பொருத்தமான காலத்தில் அறுவடை செய்தல், பொருத்தமான சூடு மிதித்தல் முறை, நெல் ஆலையில் அரிசியாவதற்கு முன் துப்பரவு செய்தல் என்பவற்றால் மொத்த இழப்பிலிருந்து கணிசமான பங்கை காப்பாற்றலாம். துப்பரவு செய்யப்பட்ட பின் நெல்லை ஆலையில் ஈட்டு அரிசியாக்கினால்நாம் 70 கிராம் கழிவுப் பொருளிற்கு அரிசிவிலைகொடுக்க வேண்டியதில்லை. ● சி. என். ஆர்.

## நீங்களும் நாங்களும்!

நீங்கள்
ஆளும் வர்க்கத்தின்
அடிவருடிகள்,
நாங்களோ
அடக்குமுறையை
அடக்கப்புறப்பட்ட
அடலேறுகள்...
நீங்களோ
ஆயுத பலத்தால்
எம்மை
அடக்க முனைகிறீர்கள்...
நாங்களோ
ஆன்ம பலத்தால்
உம்மை
வெற்றி கொள்கிறோம்...
உங்கள் இதயம்
இனவெறித் தசையால்
ஆனது...
எங்கள் இதயமோ
இலட்சிய அணுக்களால்
ஆக்கப்பட்டது...
நீங்கள்
எங்கள் தேசத்தில்
அத்துமீறிப் புகுந்ததால்
நாங்கள்
அந்நிய நாட்டில்
அடைக்கலம் புகுந்தோம்...
உங்கள் உலகம்
இருட்டுக் குகை போன்றது.
எங்கள் உலகமோ
எங்கும் பரந்தது...
உண்ணுவதையும்
உறங்குவதையும் தவிர,
அவ்வப்போது
அதிர்வேட்டுக்களால்
அட்டகாசம் புரிவதே
உங்கள் வேலை
எதிர்கால வாரிசுக்களை
சுதந்திரமாய் வாழ்விக்க
வழிசமைப்பதே
எங்களுக்கு வேலை...
நீங்கள்
விரக்திப் படியில்
ஏறும் போதே
நாங்கள்
வெற்றிப் படிகளில்
ஏறுகிறோம்...
நீங்கள்
மரணத்தின் மூலம்
மறக்கப்படுகிறீர்கள்
நாங்களோ
மரணத்தால் கூட
மதிக்கப்படுகிறோம்.

ஆதிலட்சுமி இராசையா.

# சிறுவர்களுக்கு ஏற்ற இலக்கியம்

— முருகையன்

இலக்கியம் பொதுவாக வளர்ந்தவர்களுக்கு என்று தான் படைக்கப்படுகிறது. இன்றைய நிலையில் அது நாவலாகவோ சிறுகதையாகவோ, பாட்டாகவோ, நாடகமாகவோ இருக்கலாம். இவைகளை, அதிகமாய், வளர்ந்தவர்கள் தான் எழுதுகிறார்கள். எல்லா மொழிகளிலும் காணப்படும் பொதுவான நிலை இது.

ஆனால், சிறப்பான சில நோக்கங்களை முன் வைத்து, சிறுவர்களுக்கு என்று பிரத்தியேகமான இலக்கியங்களும் ஆக்கப்படுவதுண்டு. இவற்றையும் பெரும்பாலும், வளர்ந்தவர்கள் தான் ஆக்குகிறார்கள். பழந்தமிழ்ப்பாட்டி என்று பேசப்படும் அவ்வையார் தொடக்கம், இந்த நூற்றாண்டிலே 'சிறுவர் செந்தமிழ்' எழுதிய சோமசுந்தரப் புலவர் வரை யாரை எடுத்து நோக்கினாலும் இவர்கள் வளர்ந்தவர்களாய்த் தான் இருக்கிறார்கள். சிறுவர்களே சிறுவர் இலக்கியம் படைக்கும் நடைமுறை எங்கேயென்றாலும் பரவலாய் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே சிறுவர் இலக்கியம் என்பது சிறுவர்கள் படிக்கும் பொருட்டு அல்லது கேட்கும் பொருட்டு அல்லது பாடும் பொருட்டு அல்லது நடிக்கும் பொருட்டு வளர்ந்தோராற் படைக்கப்படும் இலக்கியம் என்று தான், இன்றைய நிலையில் நாங்கள் விபரிக்கவேண்டி இருக்கிறது. அப்படி இலக்கியம் படைக்கிறவர்கள் (வளர்ந்தோர்) சிறுவர்களின் தேவைகள், சுவைகள், மனவளர்ச்சி நிலை என்பனபற்றித் தாம் தாம் உருவாக்கிக் கொண்ட சில எண்ணக் கருக்களை அடிப்படையாகக் கொண்டு தான் தம்முடைய எழுத்து முயற்சிகளை மேற்கொள்ளுகிறார்கள் என்று கூறலாம்.

## ஓர் உதாரணம்

உதாரணமாக, 'ஆத்திசூடியை' எடுப்போம். அதை இயற்றிய அவ்வையார் தமிழ் யாப்பிலக்கணங்களிலே சொல்லப்படாத ஒரு புது வகைச் செய்யுளைக் கையாண்டிருக்கிறார். ஈரசைச் சீர் இரண்டு கொண்டதாக 'ஆத்திசூடியின்' ஒவ்வொரு வாசகமும் இருக்கிறது. வழமையான அகவல் அடி நாலு சீர்கொண்டது. ஆனால், இரண்டு சீர் கொண்டு சிறுச்சிறு வாசகங்களாகத் தமது நீதி நூலை அமைக்க முற்பட்டமை, அவ்வையார் சிறுவர்களின் பொருட்டுச் செய்த ஒரு விசேட ஏற்பாடு. தொகையளவிற் செய்யப்பட்ட எளிமைப்பாடு, இது. இதுவும் வேண்டியது தான், நீண்ட அடிகள் பலவற்றைக் கொண்ட பெரிய பாட்டுகளைப் படிப்பதென்றால், சிறுபிள்ளைகளுக்குச் சிரமமாகத்தான் இருக்கும். குறுகிய அடிகள்கொண்ட தனி வாசகங்களாக, பெரும்பாலும் ஏவல் வாக்கியங்களாக அமைத்தமை சிறுவர்களின் பொருட்டு- அவர்களுக்குப் பாடம் இலகுவாய் அமையட்டும் என்று எண்ணித் திட்டமிட்டு- மேற்கொள்ளப்பட்ட இலகுவாக்கம். அத்துடன் அகர வரிசைப்பட அந்த வாசகங்களை அமைத்தமையும் சிறுவர்களின் வசதியை முன்னிட்ட ஓர்... ஏற்பாடே ஆகும். ஏனென்றால், அவ்வையார் காலத்துப் பிள்ளைகள் தமிழ் நெடுங்கணக்கு முழுவதையும் வரிசைக் கிரமமாக மனப்பாடஞ் செய்யும் வழக்கத்தை உடையவர்கள். அப்படி மனப்பாடஞ் செய்தவர்களுக்கு, அகர வரிசையில் இயற்றப்பட்ட ''ஆத்திசூடியும்' கவர்ச்சிகரமாய் இருந்திருக்கும் என்பதில்ஐயமில்லை. அதைப் பாடமாக்குவது அவர்களுக்குச் சுகமாக இருந்திருக்கும். இவையெல்லாம் பிள்ளைப் பருவ மனவளர்ச்சி நிலைமையை மனங்கொண்டு, அவ்வையார் செய்து கொண்ட சிறப்பு ஏற்பாடுகள்.

ஆனால், இவ்வளவு சிறப்பு ஏற்பாடுகளையுஞ் செய்த பிறகு, அவர் சிறுவர்களைப் பார்த்து என்ன சொல்லுகிறார்? ''அறஞ்செய விரும்பு'' என்று கூறுகிறார். 'அறம்' என்னும் எண்ணக்கரு எவ்வளவு சூக்குமமானது? அந்த எண்ணக்கருவைப் பரும்படியாக என்றாலும் உள்வாங்குகிற ஆற்றல் எத்தனை வயதிலே சித்திக்கும்? அரிவரி வகுப்பு அல்லது முதலாம் வகுப்பு மாணவன் 'அறம்' என்னுஞ் சொல்லின் கருத்தை எவ்வளவுக்கு விளங்கிக் கொள்ளுவான்? இவை போன்ற எண்ணவோட்டம் சிறிதும் இல்லாமலேதான், சிறுவர் நீதிநூல் ஆகிய ,ஆத்திசூடி ஆக்கப்பட்டுள்ளது வளர்ந்தவர்களாகிய நீதிநூல் ஆசிரியர்கள், சிறுவர்களின் தேவைகள் சிலவற்றை உணர்ந்த நிலையில் இலக்கியம் படைத்தாலும், அவர்களுடைய தேவைகள் பலவற்றை மறந்துபோய் விடுகிறார்கள். ஆகையால், அந்தப் படைப்புகளிற் பல சிறுவரின் மன வளர்ச்சி நிலைக்குப் பொருத்தமில்லாமற் போய்விடுகின்றன. குறிப்பாக, சிறுவர்களின் எண்ணக்கரு ஆக்கம்பற்றியும் எண்ணக்கரு அடைவு பற்றியும் அரிய செய்திகள் பல அண்மைக் காலத்து உளவியலாளராற் கண்டறிந்து கூறப்பட்டுள்ளன. இவைபற்றிய உணர்வு நிரம்பிய இலக்கியப் படைப்பாளிகள், சிறுவர்களுக்கு ஏற்ற உளவியற் பொருத்தப்பாடு மிகுந்த- இலக்கியங்களை ஆக்கி அளிக்கக் கூடியவர்களாய் இருப்பார்கள்.

## மனவளர்ச்சிப் பருவங்கள்

ஆரம்பப் பள்ளி மாணவர்களைப் பொறுத்தவரை, அவர்களுடைய மனவளர்ச்சி நிலை மாற்றம்

இரண்டு சந்தர்ப்பங்களில் நடைபெறும் என்று கூறுவார்கள். முதலாவது மாற்றம் ஆறு வயதளவில் நடைபெறும். பிள்ளைகளின் மன வளர்ச்சியிலே 'தொழிலிப் பருவம்' என்னும் ஒரு பருவம் உண்டு. இது 'ஒப்பறேஷனல் ஸற்றேஜ்' என்று கூறப்படும். இதற்கு முந்திய பருவம் 'தொழிலி முன் பருவம்' எனப்படும். அதை, 'பிறி ஒப்பறேஷனல் ஸ்ற்றேஜ்' என்று கூறுவார்கள். தொழிலி முன் பருவத்திலிருந்து தொழிலிப் பருவத்துக்கு நடைபெறும் மாற்றந்தான் ஆறு வயதளவில் நடைபெறுவது.

தொழிலிப் பருவம் என்றால் என்ன என்றும், தொழிலி முன் பருவம் என்றால் என்ன என்றும் கொஞ்சம் விளங்கப்படுத்துவது இந்த இடத்திலே பொருத்தமாகும்.

தொழிலி முன் பருவத்திலே, பிள்ளையானது தன்னுடைய சூழலைக் குறிப்பதற்கும், தன்னுடைய நடத்தைகளை நெறிப்படுத்துவதற்கும் படிமங்களைப் பயன்படுத்தும், அந்தப் படிமங்கள் மனப்படங்களாகவோ மன ஓசைகளாகவோ இருக்கலாம். ஐம்புலச் சார்புடைய எண்ணப் படிவங்களே படிமங்கள் (இமேஜெஸ்) என்று சொல்லப்படும்.

அடுத்து வருவது தொழிலிப்பருவம். இந்தப் பருவத்திலே பிள்ளை படிமங்களை அதிகம் பயன்படுத்தாது. குறியீடுகளையே பெரிதும் பயன்படுத்தும். குறியீடுகள் என்பன சூழலின் அம்சங்களை அல்லது நடத்தைகளின் அம்சங்களைக் 'குறிப்பதற்காக' 'இடப்' படுவன ஆகும். மொழியின் உறுப்புகளாகிய சொற்களும் கணிதத்தில் வரும் எண்களும் போல்வன குறியீடுகள் ஆகும். குறியீடுகளின் வரிசை நிலைகளை முற்றாக மாற்றி அவற்றை முன் பின்னாக ஒழுங்கு பண்ணி விரும்பிய வண்ணம் கையாளலாம். (தொழிற்படுத்தலாம்) இப்படிக் கையாளுவது 'தொழிலித்தல்' என்று கூறப்படும். இதனை ஆங்கிலத்தில் 'ஒப்பறேற்றிங்' என்று சொல்லுவார்கள். குறியீடுகளைத் தொழிலிக்கும் பருவந்தான் தொழிலிப் பருவம்.

தொழிலிப் பருவத்திலும் இரண்டு உட்பிரிவுகள் இருக்கின்றன. ஒன்று தூலசிந்தனைப் பருவம் மற்றது நியம சிந்தனைப் பருவம்- பதினொரு வயதுக்கும் பதினைந்து வயதுக்கும் இடைப் பட்டதொரு காலத்திலே தான்பிள்ளை தூல சிந்தனை நிலையிலிருந்துநியம சிந்தனை நிலைக்கு மாறும். நியம சிந்தனை நிலையிலே தான் ஒரு வரையறைக்கு உட்பட்ட, குறிப்பிட்டதொகையான (மட்டுப்பட்ட) குறியீடுகளைப் பிள்ளை கையாளும். ஆனபடியால், தூல சிந்தனைப் பருவத்திற் செய்ய இயலாமல் இருந்த மனத்தொழில்கள் சிலவற்றை, நியம சிந்தனைப் பருவத்திலே பிள்ளை செய்யக்கூடியதாய் இருக்கும்.

நம் நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களின் ஆரம்ப வகுப்பு மாணவர்கள் ஆறு வயது முதல் எட்டு வயதுவரை உள்ளவர்கள் என்ற முறையில், அவர்கள் தூல சிந்தனைப் பருவத்திலேதான் இருப்பார்கள். இவர்களுக்குப் படிப்பிக்கப்பட வேண்டிய இலக்கியம் தூல சிந்தனைக்கு இயைபானதாக இருப்பது தான் உளவியல் முறையிற் பொருத்தமாய் இருக்கும். நமது பள்ளிகளில் இப்பொழுது பயன்படும் இலக்கியப் பகுதிகள் அந்த விதத்திலே பொருத்தம் உடையனவா? இதுதான் எங்கள் முன் உள்ள கேள்வி.

## இலக்கியங்களின் தூலத்தன்மை

நாவல்கள், நாடகங்கள், சிறுகதைகள், பாட்டுகள் என்னும் இலக்கிய வகைகளை எடுத்து நோக்கும் பொழுது, நாவல்கள் நீளமாய் இருப்பதால் ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு ஏற்றவை அல்ல என்பது வெளிப்படை. சிறுகதையும், அதன் வழமையான வடிவத்தில் இருக்கும் போது, சிறுவர்களின் பொறுமையைச் சோதிப்பதாக இருக்கும். சிறுகதைகள் சிறுவர்களுக்குச் சுவை தர வேண்டுமானால், அவை சிறுவர்களுக்கென்று திட்டமிட்டு எழுதப்படுதல் வேண்டும். அப்படி எழுதப்படும் கதைகளைச் சிறுகதைகள் என்று கூறுவதைக் காட்டிலும் 'சிறிய கதை' என்றோ 'சிறுவர் கதை' என்றோ விவரிப்பதுதான் வசதியாகும்.

இனி, நாடகத்தை எடுத்துக் கொண்டால், வெறும் இலக்கியமாக அல்லாமல், ஒரு செயற்பாடாகவோ ஒரு விளையாட்டாகவோ அதை முன் வைப்பதுதான் சிறுவர்களுக்குச் சுவை தருவதாயும் பொருத்தமாயும் இருக்கும்.

ஆனபடியால், ஆரம்பப் பள்ளிச் சிறுவர்களுக்கு உரிய இலக்கியம் என்று பார்க்கும்பொழுது, பாட்டுகள் அல்லது கவிதைகள் தான் பிரதான இடத்தைப் பெறுகின்றன. பாட்டுகளில் இசை அமைந்து கிடப்பதும் அவற்றின் கவர்ச்சிக்கு ஒரு காரணமாகும். அத்துடன், தாளம் போட்டுக் கூத்தாடக்கூடிய வாய்ப்பு இருப்பது மற்றொரு காரணமாகும். இவை இரண்டும் புறக்காரணங்கள். இந்தப் புறக்காரணங்களைவிட, பாட்டுகளின் உள்ளார்ந்த இயல்புகள் சிலவும் சிறுவரின் மன வளர்ச்சி நிலைக்கு உகந்தனவாய் உள்ளன. அவர்களின் தூல சிந்தனைக்கு நல்விருந்தாய் அமைகின்றன.

இதற்குப் போதிய காரணம் உண்டு. கவிஞனின் மொழி அக்கறையும் சிறு குழந்தையின் மொழி அக்கறையும் ஏறத்தாழ ஒரேவிதமானவை. இது பற்றி ஜேம்ஸ் (B)பிறிற்றன் என்பார் கூறுவன மனங்கொள்ளத் தக்கன—

எம் தினசரித் தேவைகளின் பொருட்டு, பதார்த்தங்களையன்றி, அவற்றின் ஊடாக அவற்றின் கருத்துகளை நோக்கும் பழக்கமே எனக்கு உண்டு. ஆனால்... இளஞ்சிறுவர்களோ கவிஞர்களைப்போல, சொற்களின் வடிவத்தின் மீது தான் அதிக அக்கறை காட்டுவார்கள். ஏனென்றால், பௌதிக இயல்புகள் பற்றிய அபூர்வமான உணர்வு குழந்தைகளுக்கும் உண்டு. அவர்கள் எதுகை மோனைக் கோலங்களை ஆக்கியும் சிலேடைகளில் ஈடுபட்டும், கருத்தில்லாச் சந்தங்களைக் கலந்தும் விளையாடும்பொழுது இந்த உணர்வு வெளிப்படுகிறது.

பொதுவாக, பிள்ளைகள் பேசுவனவற்றின் பெரும்பகுதி ஓசை இன்பத்தின் பொருட்டுத்தான் பேசப்படுகிறது. யாருக்கும் எதை

யாவது தெரிவிக்க வேண்டும் என்னும் நோக்கத்தைவிட, தன் குரல் தன் செவியிற் படுவதை நயந்து இன்பங் காணும் நோக்கம்தான், பிள்ளைப் பேச்சைப் பொறுத்தவரை முன்னணியில் நிற்கிறது. 'ஓசை தரும் இன்பம் உவமையில்லா இன்ப மன்றோ!' என்று பாரதியார் சொல்லுவது இதைத்தான். இந்த வகையிலே குழந்தையின் பேச்சும் கவிஞனின் பேச்சும் பெரிதும் ஒற்றுமை உடையன. ஏனென்றால், கவிதையின் -அல்லது பாட்டின்- பிரதான நோக்கம் தெரிவிப்பதோ, போதிப்பதோ, நம்ப வைப்பதோ அன்று; கொண்டாடுவதும், இரங்குவதும், வாழ்த்துவதுந்தான் பாட்டுக்கலையின் பிரதான பணிகளாய் உள்ளன. இவ்வாறுள்ளபடியால், ஆரம்பப் பள்ளி வகுப்பறைகளில் அடிக்கடி ஒலிக்கப்படும் தகுதி பாட்டுகளுக்கு உண்டு. அத்துடன், பாட்டுகள் அந்தப் பருவத்து மாணவரால் விரும்பி வரவேற்கப்படுவனவும் ஆகும். பாட்டுப் பாடம் என்றதும் முதலாம் இரண்டாம் வகுப்பு மாணவர்கள் ஆர்வத்துடன் துள்ளிக்கொண்டு கிளம்புவதை நமது பள்ளிக்கூடங்களில் ஆசிரியைகள் அடிக்கடி அவதானித்திருக்கிறார்கள்.

அத்துடன்,பாட்டைத்தொடர்ந்து பேச்சும் இயல்பாகவே எழும். ஒரு பாட்டைப் படித்த பின், அதைத் தொடர்ந்து எழும் பேச்சுக்கள் பேச்சுப் பயிற்சிக்கும், அதன் வாயிலாக மொழி கற்பித்தலுக்கும்இட்டுச்செல்லக் கூடும். பிள்ளைகள் தமது சொந்த அநுபவம் பற்றியும் அக்கறைகள் பற்றியும் பேசத் தொடங்குவார்கள். திறமையுள்ள ஆசிரியர் இந்தப் பேச்சைத் தொடக்கப் புள்ளியாகக் கொண்டும் சாதுரியமாகத் தம்முடைய மொழிப் பாடத்தை நடத்திச் செல்லக் கூடும்.

இவை எல்லாவற்றையும் விட பாட்டுக்களின் உள்ளியற் பொருத்தப் பாட்டுக்கு ஆதாரமான முக்கிய காரணம் அவற்றின் தூலத் தன்மையாகும். புலவர்கள் (அல்லது கவிஞர்கள்) எப்பொழுதும் புறவுலகின் தூலமான அம்சங்களிலேதான் கணிசமான ஈடுபாடு காட்டுவோராகத் தோற்றம் தருவார்கள். கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியத்தக்க பருமையான பொருள்கள் பாட்டுகளிலே பெரிதும் பயிலும். வாழ்க்கையிலிருந்து நேரடியாகப் பெற்ற சில நுணுக்கமான விபரங்கள், உணர்வு மூட்டத் தக்க பொருண்மை வாய்ந்த காட்சிப் பொருட்களின் பௌதிக இயல்புகள். ஐம்புலன்களுடன் நேரடித்தொடர்பு கொண்ட பருமையான படிமங்கள்- இவை போல்வனவற்றைத்தான் புலவன் கையாளுகிறான்.

''பட்டுச் சட்டை போட்டீரோ
பஞ்சைப் போன்ற குஞ்சாரே
சொட்டுச் சொட்டுக் காலாலே
சோக்காய் ஓடிப்பார்க்கின்றீர்''

என்பது பா. சத்தியசீலனின் பாட்டு. இங்கு கோழிக்குஞ்சை நோக்கிக் குழந்தை பேசுகிறது. இங்கு, பட்டுச் சட்டை, பஞ்சு, சொட்டு என்னும் சொற்கள் தூலமான படிமங்களைத் தோற்றுவிக்கின்றன. குழந்தைப் பாட்டுகளுக்கு மட்டுமல்லாமல், பொதுவாக உயர் கவிதைகள் அனைத்

## எனது தங்கை

★ தி. வத்சலா.


வாசுகி எங்கள் தங்கை
வடிவு மிக்க தங்கை
நேசம் கொண்டு எம்மை
தினமும் சுற்றும் தங்கை.

பாசங் கொண்ட தங்கை
பாடித் திரியும் தங்கை
பள்ளி செல்லும் தங்கை
பண்புடன் கற்கும் தங்கை

வண்ண வண்ணச் சட்டை
விரும்பிப் போடும் தங்கை
சின்னக் கண்ணைக் காட்டி
அழகு செய்யும் தங்கை

கோபம் வந்தால் உடனே
குறும்புகள் செய்யும் தங்கை
நேசம் கொண்டு எம்மைக்
கட்டிக் கொஞ்சும் தங்கை.

வாசுகி எங்கள் தங்கை
அன்பு மிக்க தங்கை
ஆசையாக எம்மை
அன்புடன் நாடும் தங்கை.



மகன்: ஹெலி வருகிறது.
தந்தை: எலி வருகிறதா? பூனையைக் கூப்பிடு. ஓடி விடும்.
மகன்: எலி இல்லை. ஹெலி, பூனையை இல்லை. புலியைக் கூப்பிடவேண்டும்.

சிவமாலா சிவப்பிரகாசம்

துக்குமே—சிறந்த பாட்டுகள் எல்லாவற்றுக்குமே— தூலத்தன்மை ஒரு சிறப்புப் பண்பாக இருக்கிறதென்பதை அவதானிப்பது நல்லது.

> "புல் நுனிப் பனி நீர் அன்ன
> மனிசரைப் பொருள் என்றுன்னி
> என் உனக்கிளைய கும்ப
> கருணனை இகழ்ந்ததம்மா"

என்னும் கம்பன் பாட்டிலே, புல்லின் நுனியில் உள்ள அற்பமான பனி நீர்த்துளி என்னும் தூலமான காட்சிப்படிமந்தான் நிரம்பிய பாட்டுச் சுவைப் பேற்றுக்குக் காலாய் அமைகிறது.

> "மூங்கில் இலை மேலே தூங்கும்
> பனிநீரே
> தூங்கு பனி நீரை வாங்கு கதி
> ரோனே"

என்னும் நாடோடிப் பாடல் அடிகள் கம்பனைக் கவர்ந்தன என்று செவிவழிச் செய்தியாக வரும் கதையொன்று உண்டு. இந்தக் கதையின் வித்தும், பாட்டுக் கலையின் தூலத் தன்மையை மனங்கொண்ட பாட்டுச் சுவைஞர்களின் உணர்வுப் பேறே என்பது வெளிப்படை.

## புலவனும் குழந்தையும்

சிறந்த புலவர்கள் (கவிஞர்கள்) தெளிவற்ற, பொதுப்படையான, அருவப்பண்பு வாய்ந்த சொற்களைத் தவிர்த்துக் கொள்ளும் போக்கை உடையவர்கள். குழந்தைகளின் போக்கும் அப்படிப்பட்டதுதான்.

ஒரே ஒரு வித்தியாசம் - புலவர்கள் தமது சொந்த விருப்பத்தின் பேரில் அந்த விதமான சொற்களைத் தவிர்த்துக் கொள்ளுகிறார்கள். ஆனால், குழந்தைகளுக்கோ வேறு வழி இல்லை. சூக்குமமான அல்லது அருவமான - எண்ணங்களைப் பெற்றுக்கொள்ளவோ, அப்படிப்பட்ட எண்ணங்களைச் சுட்டும் சொற்களைக் கையாளவோ தேவையான ஆற்றல், தூல சிந்தனைப் பருவத்துச் சிறுவர்களுக்கு இல்லை. ஆகையால் அவர்கள் தம் மன வளர்ச்சி நிலை காரணமாக, தெளிவற்ற, பொதுப்படையான' அருவப் பண்பு வாய்ந்த சொற்களைக் கையாளாமல் விடுகிறார்கள்.

ஆகையால், தூலமான காட்சிப் படிமங்களைக் கையாள்வன ஆகிய கவிதைகள் (பாட்டுகள்) ஆரம்பப் பள்ளி வகுப்பறைகளுக்கு உகந்தவைகளாக இருக்கின்றன. ஆனால், இன்று நடைமுறையில் நமது ஆரம்பப் பள்ளித் தமிழ் வகுப்பறைகளில் வழங்கும் பாட்டுகளெல்லாம் அப்படிப்பட்ட தூலத்தன்மை உடையனவா என்பது பரிசீலனைக்கு உரிய விடயமாகும்.


மற்றுமோர் உண்மை கவனிக்கத்தக்கது. எம்மிடையே வழங்கும் சிறுவர் பாடல்களிற் பல, நீதி போதனையையும் தம் நோக்கமாகத் தெரிந்தெடுத்துக் கொள்ளுகின்றன. அதனாலும் தமது தூலத்தன்மையை இழந்துவிடுகின்றன.


எங்களிடம் தரமான அரிசி வகைகளும் சன்லைட், வொண்டலைட் சோப், எல்லாவிதமான பால்மா வகைகளும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**குணரட்னம் ஸ்டோர்ஸ்**

292, 294, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன் 22556

# ரமணி



ரமணீயமான முகை அரும்புகளே!

உங்கள் மழலை மொழி ஆதரவும், பிஞ்சுக் கரங்களின் அரவணைப்பும் 'ரமணி' சிறுவர் இலக்கியப் பூஞ்சோலையை நாளுக்கு நாள் நறுமணம் கமழ வைக்கின்றன.

நன்றி. நன்றி.

சென்ற இதழில் வெளிவந்த சிறுவர் பக்கங்கள் அனைத்தையுமே பாராட்டியுள்ளீர்கள்.

ராஜா மாமா உங்கள் பாராட்டுடன் மட்டும் திருப்தியடைந்து விடப்போகிறவர் அல்லர்.

உங்கள் எண்ணங்களை... எழுச்சிகளை... விருப்பு வெறுப்புகளை... உங்கள் மொழியில்... உங்களுக்குத் தெரிந்த சொற்களில்... உங்கள் கையெழுத்துக்களில் எழுதி அனுப்ப வேண்டும், சின்னஞ்சிறாரின் அற்புத உலகை உங்கள் மூலமாகத் தரிசிக்கவே பெரிதும் விரும்புகிறார்.

எனவே, உங்களின் அற்புதப் படைப்புகளை இன்றே எழுத ஆரம்பியுங்கள். பெரியோர் சகோதரங்கள் போன்றோரிடம் உதவியைப் பெற்றாலும், படைப்புக்கள் முழுக்க முழுக்க உங்கள் சொந்தமாக இருக்க வேண்டும். அப்போதுதான் நீங்களும் வளர்வீர்கள். மனத்திருப்தியும் பெறுவீர்கள். மனப்பலமும் கொள்வீர்கள். அகத்தின் அழகு முகத்தில் மிளிரும்.

நீங்கள் யாராவது கையெழுத்துப் பத்திரிகை நடத்துபவராக இருந்தாலும் என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள். அப்பத்திரிகையின் வளர்ச்சிக்கும் பிரபலத்திற்கும் மாமா உதவுவார்..

'ரமணி' —பக்கங்களை எப்படி நிரப்ப வேண்டும் எனவிரும்புகிறீர்கள் எனவும் எழுதியனுப்புங்கள். விஞ்ஞானக்கதையா! ராஜாராணிக்கதையா? சமூகக் கதையா? மாயாஜால மந்திர தந்திரக் கதையா? பயங்கரமான டிராகுலா, பிரான்கெஸ்ரீன் கதையா?...

எந்தக் கதைகளாக இருந்தாலும் உங்கள் உடலோ, உள்ளமோ ஊறுபடாது, — உறுதியும், உரமும் பெற்று விருத்தியுறும் தன்மையிலே படைப்புக்கள் இடம் பெறும்.


எங்கே எழுத ஆரம்பியுங்கள், பார்க்கலாம்.


● ராஜா மாமா

சிறுவர் கலைக் களஞ்சியம்













# மான்கள் மத்தியில்

4




சீனச் சுற்றுப் பயணக் கடிதங்கள்

பீக்கிங்
ஜூலை, 73.

அன்பின் சுமதி,

சாங்சுன் நகரத்தில் நாம் சென்ற இடங்கள் பற்றி முந்திய மூன்று கடிதங்களிலும் எழுதியிருந்தேன். கலைப் பயிற்சிக் கழகம் ஒன்றையும் இந்நகரத்தில் பார்த்தேன். இக்கழகத்தில் 12 முதல் 15 வயது வரையான இளைஞர்களும் இளநங்கையரும் பாடல், இசை, நடனம், ஓவியம் ஆகியவற்றை கற்றுக் கொள்கின்றார்கள் சுமார் 300 மாணவர்கள். அவர்கள் இக்கலைகளை விசேஷமாகக் கற்கும் அதே வேளையில் சாதாரண படிப்பில் ஈடுபடுகின்றார்கள்.

இக்கலைக் கழக மாணவர்கள் மங்கோலிய தேசிய இனம், கொரிய தேசிய இனம், ஹான் தேசிய இனம் முதலிய பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்தவர்கள். ஹான் தேசிய இனம்தான் சீனாவில் பெரும்பான்மைத் தேசிய இனம். இங்குள்ள பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஒரு குடும்பம் போல் ஒருவருக்கொருவர் மதிப்பும் உதவியும் அளித்து ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். இவர்களில் அநேகர் கிராமப்புறங்களிலிருந்து வந்தவர்கள். கலைக்கழகத்தின் நோக்கம் இவர்களைப் பயிற்றி கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்த கிராமப்புறங்களில் உள்ள கலாச்சாரக் குழுக்களுக்கு அனுப்புவதாகும்.

இந்த இளம் மாணவர்கள் பலேநடனப் பயிற்சி செய்வதை நாம் பார்த்தோம். அவர்கள் எமக்காக ஒரு விசேஷ கலை நிகழ்ச்சியையும் அளித்தார்கள். பாட்டுக்கள், நடனங்கள், வாத்திய இசை, புல்லாங்குழல் இசை முதலியவற்றை நாம் கண்டும் கேட்டும் ரசித்தோம்.

சாங்சுனுக்கு அடுத்ததாக நாம் கிறின் நகரத்துக்குச் சென்றோம். இங்கு நாம் மான் வளர்ப்புப் பண்ணை ஒன்றுக்குச் சென்றோம். மான் காட்டு மிருகம். அதை எப்படிப் பண்ணையில் வளர்ப்பது? ஏன் வளர்க்கின்றார்கள்? என்ற கேள்விகள் உங்கள் மனதில் எழலாம்.

மானின் கொம்பு ஒரு முக்கியமான மருந்துப் பொருள். அதைப் பல்வேறு நோய்களின் சிகிச்சையில் பாவிக்க முடியும். நீண்ட ஆயுளுக்கு மான் கொம்பு மருந்து உதவியானது. மான் கொம்பு அழகானது. அதைப் பெரும் பணம் கொடுத்து சீனாவுக்கு வெளியேயுள்ள சிலர் வாங்குகின்றார்கள். மான் தோலும் மதிப்பான பொருள். பிரதானமாகக் கொம்புக்காகத்தான் மானை வளர்க்கின்றார்கள். கிறின் நகரத்திலுள்ள மான் பண்ணையில் இலங்கையிலுள்ள ஆட்டு மாட்டுப் பட்டிகள் போன்றனவற்றில் மான்கள் வளர்க்கப்படுகின்றன. புள்ளியில்லாத மான், புள்ளிமான், ஆண்மான், பெண் மான், குட்டி மான் எல்லாவற்றையும் அங்கு பார்த்தேன். இந்தப் பண்ணையில் 850 மான்கள் உண்டு.

ஆண் மான்களுக்குத்தான் கொம்புண்டு. இனம் பெருக்குவதற்காகப் பெண் மான்கள் அங்கு வளர்க்கப்படுகின்றன. நாம் சென்றிருந்த போது ஆண் பெண் மான்கள் வேறுவேறான பட்டிகளில் அடைக்

கப்பட்டிருந்தன. சில மான்கள் கமராக்களுக்கு "போஸ்" அடிக்கும் அளவுக்கு மனிதருடன் பழகியிருக்கின்றன. வருடத்துக்கு ஒரு தடவை கொம்பு வெட்ட முடியும். சராசரியாக ஒரு மானில் 15 கொம்புகள் பெற முடியும் என்று எம்மிடம் கூறினுர்கள்.

கொம்பு வெட்டுவதையும் எமக்கு காட்டினுர்கள். மானின் கொம்பை வெட்டியதும் வெட்டப்பட்ட இடத்தில் மருந்து போட்டார்கள். மான் உடனே தனது பட்டிக்குப் பாய்ந்தோடுகின்றது. இக் கொம்பை தாமதிக்காமல் ஒரு அறைக்கு எடுத்துச் சென்று கெட்டுப் போகாமல் தயார் செய்கிருர்கள். ஒன்பது மணியளவில் மான்கள் புல்மேய வெளியே சாய்த்துச் செல்லப்படுகின்றன.

இந்தப் பண்ணை ஜின்சென் என்றழைக்கப்படும் மிகவும் மதிப்புள்ள மூலிகை ஒன்றையும் வளர்க்கின்றது. இதன் வேரை வைத்துத் தயாரிக்கப்படும் மது பலவீனமானவர்களுக்கு நல்லதொரு மருந்து. நீண்ட வாழ்வுக்கும் துணைபுரிகிறது. இது ஒரு காட்டு மூலிகை. கூடிய வெப்பம், மழை ஆகியனவற்றை இச் செடி தாங்க மாட்டாது. விசேஷ தோட்டம் ஒன்றில் இச்செடிகளை வளர்க்கின்ருர்கள்.

மயிர்த் தோல் தரும், கீரிவகை மிருகம் ஒன்றையும் இங்கு வளர்க்கின்ருர்கள். இதன் தோல் உஷ்ணமானது. குளிர்ப் பிரதேச மக்கள் தமது உடைகளைத் தயாரிக்க இதனைப் பாவிக்கின்ருர்கள். இந்த மிருகம் ஊன் உண்ணும் மிருகம். நாங்கள் பார்த்த போது இரண்டு இளம் பெண்கள் அவற்றுக்கு முயல் இறைச்சி வைத்துக் கொண்டிருந்தார்கள். கறுப்பு, வெள்ளை முதலிய நிறங்களுடையது இம் மிருகம்.

மான் கொம்பு, ஜின்சன் வேர் இந்த கீரி போன்ற மிருகம் ஆகியன வட கிழக்குசீனுவில் பொக்கிஷங்கள். என்று அழைக்கப்படுகின்றன. இலங்கையில் காட்டு மான்கள் ஏராளம் உண்டு. ஆனுல் இத்தகைய பண்ணைகளில் இவை வளர்க்கப்பட்டு இத்தகைய பிரயோசனம் பெறப்படுகிறதா என்பது எனக்குச் சரியாகத் தெரியாது. அநேகமாக இல்லை என்றே நினைக்கின்றேன்.

அன்புடன்
தம்பி மாமா,

## சொல் அமுதம்

| | | |
|---|---|---|
| பஞ்சலோகம் | — | பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் |
| பஞ்ச இலக்கணம் | — | எழுத்து, சொல், பொருள் யாப்பு, அணி |
| பஞ்ச பாண்டவர் | — | உதிஷ்டிரன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன். |
| பஞ்சாங்கம் | — | திதி, வாரம், நாள், யோகம், கரணம் |
| ஐங்குரவர் | — | அரசன், ஆசிரியர், அன்னை, தந்தை தமையன். |
| பஞ்ச வருணம் | — | பச்சை, மஞ்சள், வெண்மை, கருமை, செம்மை. |
| அறுசுவை | — | கைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு. |
| ஏழு வள்ளல்கள் | — | பாரி, ஓரி, ஆய், எழினி, பேகன், |
| | — | மலையான், நள்ளி |
| ஏழு வகை பிறப்பு | — | தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, மச்சம், தாவரம். |
| ஏழு சுரங்கள் | — | ஸ, ரி, க, ம, ப, த, நி. |
| ஏழு முனிவர் | — | வசிட்டர், விசுவாமித்திரர், கோதமன், அத்திரி, ஆங்கிரேசன், "இயமதக்கினி, பரத்துவாசன். |
| ஏழு பெண் பருவம் | — | பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் |
| அட்டதிக்கு பாலகர் | — | இந்திரன், அக்கினி, இயமன், இருநிதி, வாயு, வருணன், குபேரன், ஈசானன். |
| அட்டாங்கம் | — | இருகை, இருகால், இரு தோள், நெற்றி, மார்பு. |
| அட்டலட்சுமி | — | தனலட்சுமி, தானியலட்சுமி, தைரிய லட்சுமி, சௌரிய லட்சுமி, வித்தியா லட்சுமி, விஜயலட்சுமி, கீர்த்திலட்சுமி, இராச்சியலட்சுமி. |

தொகுப்பு -- திரௌபதி சிவலிங்கம்
ஏழாலை.

## "பிரதான வனாந்தரங்களின் பரப்பளவு"

1. சகாராப் பாலைவனம் ஏறத்தாழ 003, 000, 000 சதுரமைல்
2. அவுஸ்திரேலியப் பாலைவனம் ஏறத்தாழ 600, 000 சதுரமைல்
3. அரேபியாப் பாலைவனம் ஏறத்தாழ 500, 000 சதுரமைல்
4. கோபிப் பாலைவனம் ஏறத்தாழ 400, 000 சதுரமைல்

தொகுப்பு:- கு. சுந்தரவடிவேல்,
தெல்லிப்பழை.

# சண்டை வராது

பூமகள்

பாஞ்சாலநாட்டைவிஜயசிம்மன் என்பவன் ஆண்டு வந்தான். அவனது ஆட்சி சிறந்து விளங்கியது. மக்களும் அவனைப் பெரிதும் விரும்பினர். இப்படிப்பட்ட நல்ல மன்னனுக்கு ஒரு குழந்தை கூடப் பிறக்கவில்லை. விரதங்கள் பூசைகள் எல்லாம் செய்தும் எவ்வித பயனும் ஏற்படவில்லை. எனவே புண்ணிய ஷேத்திரங்களுக்குப் போய் நீராடி வருவதென எண்ணித் தன் நாட்டைத் தன் தம்பியான அமரசிம்மனிடம் ஒப்படைத்துச் சென்றான்.

அமரசிம்மன் நாட்டை ஆள ஆரம்பித்ததும் பதவி மோகம் தலைக்கேறியது. தன் அண்ணன் திரும்பி வந்ததும் நாட்டை அவனிடம் ஒப்படைக்க வேண்டுமே என அவன் மனம் கவலைப்பட்டது. தன் அண்ணன் திரும்பி வராமல் ஏதாவது ஒரு ஷேத்திரத்தில் இறந்து விடக்கூடாதா என்று கூட அவன் நினைத்ததுண்டு.

விஜயசிம்மன் திரும்பி வருகிறான் என்ற செய்தி கிடைத்ததுமே மக்கள் மகிழ்ந்தனர். அதனால் மனம் புழுங்கியவன் அமரசிம்மன் ஒருவனே!

அவன் விஜயசிம்மன் நாட்டிற்குத் திரும்பி வரும்வழியில் கொலை செய்யத் தீர்மானித்து ஒரு படைத் தலைவனுக்கு பணத்தாசை காட்டி தன் பக்கம் இழுத்துக் கொண்டான்! இருவரும் ஓரிடத்தில் அமர்ந்து தம் திட்டத்தைப் பற்றி பேசினர். எதிர்பாராதவண்ணம் அமரசிம்மனின் மனைவி முழுவதும் கேட்டு விட்டாள். ஆனால் அவளால் அக் கொலையைத் தடுக்க முடியவில்லை.

விஜயசிம்மனும் அவனது மனைவியும் நகருக்கு வரும்வழியில் அடையாளம் தெரியாத சிலரால் கொல்லப்பட்டனர். நகரமே துயரக் கடலில் மூழ்கியது. அமரசிம்மனும் எல்லோரையும் போல துக்கப்படுவது போல நடித்தான். விஜயசிம்மனுக்கு சந்ததி இல்லாததால் அவனே சிம்மாசனத்தில் அமர்ந்தான். அவன் மக்களின் மனதைக்கவர விஜயசிம்மனைப் போல ஆட்சி செய்தான். மக்களுக்கு எல்லாவித வசதிகளையும் செய்து கொடுத்தான். அவர்கள் சிரமப்படாமல் இருக்கவும் பார்த்துக் கொண்டான். இதனால் மக்கள் விஜயசிம்மனை விரைவில் மறந்தே போயினர். அமரசிம்மனைப் போற்றலாயினர்.

அமரசிம்மனின் மனைவி அமராவதி சிலதினங்களில் கர்ப்பமுற்றாள். அமரசிம்மன் தன்னை எதிர்க்க வந்த சிற்றரசர்களை எதிர்க்க எல்லைப் புறத்திற்கு போர் புரியச் செல்ல வேண்டியதாயிற்று. அப்பொழுது அமராவதிக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. பிரவசத்தின்போது மாதவி என்ற பணிப் பெண் ஒருத்தி இருந்தாள்.

அமராவதி தனக்குப் பிறந்த இரு ஆண் குழந்தைகளில் ஒன்றை எடுத்து மாதவி என்னும் பணிப் பெண்ணிடம் கொடுத்து இதோ பார் இக்குழந்தையை நான் கொடுக்கும் பணப்பையோடு காட்டில் எங்காவது வைத்து விட்டு வந்துவிடு! எனக்கொரு குழந்தையே போதும் என்றாள்.

அது கேட்ட மாதவி திடுக்கிட்டாள். அது தன்னால் முடியாதென மறுத்தாள். அப்போது அமராவதி "இரு சகோதரர்கள் இருந்தால் எப்போதும் இருவருக்கும் சண்டையே ஏற்படும். ஒருவரை மற்றவர் ஒழிக்கக்கூட முயல்வார்கள். என்கணவர்கூடதன்அண்ணனை கொலை செய்து விட்டே அரசரானார்" என்று அது நாள்வரை மூடி வைத்திருந்திருந்த ரகசியத்தை அவளிடம் கூறினாள்.

அது கேட்ட மாதவி அமராவதி கூறுவதில் நியாயம் இருப்பதாக உணர்ந்து அக் குழந்தையையும் பணப்பையையும் வாங்கிக் கொண்டு யாருக்கும் தெரியாமல் அரண்மனையை விட்டு வெளியேறினாள். அரசிக்கு ஆண் குழந்தைபிறந்ததாக அறிவிக்கப்பட்டது. அமரசிம்மன் போர்க்களத்திலிருந்து திரும்பி வந்ததும் தனக்கு ஆண் குழந்தை பிறந்தது கண்டு மகிழ்ந்து போனான். அக்குழந்தைக்கு விஜயசந்திரன் என்று பெயரிட்டு வளர்த்து வரலானான். வயதாக ஆக அவனுக்கு எல்லாக் கலைகளையும் பயில்விக்கவும் செய்தான்.

மாதவியோ தான் கொண்டு சென்ற குழந்தையை எங்கும்விட்டு விடாமல் தானே ரகசியமாக வளர்த்து வந்தாள். அவனும் பெரியவனாகி போர்க் கலைகளில் சிறந்து விளங்கினான். மாதவன் என்றுஅவள் பெயரிட்டிருந்தாள்.

சில ஆண்டுகளாயின. விஜயசந்திரர் ஒரு விஜயதசமியன்று தான் கற்றவற்றையெல்லாம் பொது மக்களின் முன் காட்டி தான் திறமைசாலி எனக் காட்ட விரும்பினான். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மக்களும் இளவரசனின் திறமையைக்காண பெருந்திரளாக கூடினர்.

விஜயச்சந்திரனும் பலவீரர்களை விற்போரிலும், வாட்போரிலும் மற்போரிலும் தோற்கடித்து விட்டான். பின்னர் அவன் இன்னும், யாராவது என்னுடன் சண்டை போட இருக்கிறார்களா?' என்று சவால் விடுத்தான்.

அப்போது கூட்டத்திலிருந்த மாதவன் எழுந்து வந்து விஜயச் சந்திரன் முன் நின்றான். இருவரும் ஒரே முகச் சாயலையும் உடலமைப்பையும் கொண்டிருப்பது கண்டு யாவரும் ஆச்சரியப்பட்டனர். அமரசிம்மனும் ஆச்சரியப்பட்டான். அமராவதி திகைத்துப் போனாள்.

அப்பொழுது அமரசிம்மன் மாதவனிடம், 'யாரப்பா நீ? உன் பெயர் என்ன? உன் தந்தை யார்?' என்று கேட்டான். மாதவனும் சிரித்துக் கொண்டே 'மக்களுக்கெல்லாம் மன்னன் தானே தந்தை. எனவே நான் உங்கள் மகன்

என்றே எண்ணிக் கொள்ளுங்கள்' என்றான்.

அது கேட்ட அமராவதி மூர்ச்சையடைந்து விழுந்தாள். உடனே அமரசிம்மன் அந்தப் போட்டியை நிறுத்தி அரசியை அந்தப்புரத்துக்கு அனுப்பி சிகிச்சைகள் செய்யும்படி ஏற்பாடு செய்தான். அவன் தன்னோடு மாதவனையும், மாதவியையும் கூட அழைத்துப் போனான்.

அமராவதி கண் விழித்து தன் எதிரே நின்றவர்களில் மாதவனைப் பார்த்து, 'என் மகனே! வந்தாயா?' என்று கட்டி அணைத்துக் கொண்டாள். இது கண்ட அமரசிம்மன் தன் மனைவியிடம் 'இதென்ன செயல்? எனக்கு எதுவும் விளங்கவில்லையே' என்றான்.

அப்பொழுது அமராவதி தான் இரட்டைக் குழந்தைகளை பெற்றதையும் ஒரு குழந்தையை மாதவியிடம் கொடுத்ததையும் கூறி 'இரு சகோதரர்கள் இருந்தால் இருவருக்கும் சிம்மாசனத்தில் யார் அமர்வது என்ற சண்டை ஏற்பட்டு விடுமல்லவா? அதற்காகவே ஒரு குழந்தையை காட்டில் விட்டு வரும்படி மாதவியிடம் கொடுத்தேன் என்றாள்.

மாதவியும் அக்குழந்தையைத் தானே வளர்த்து பெரியவனாக்கியதை கூறினாள். அப்பொழுது அமரசிம்மனுக்குத் தான் சிம்மாசனத்தை அடையத் தன் அண்ணனையே கொலை செய்தது மனத்தை உறுத்தியது. அவன் தன் மனைவியிடம் 'இவர்கள் சிம்மாசனத்திற்காக சண்டை போட மாட்டார்கள். ஏனெனில் என் நாட்டை இரு சம பாகங்களாக பிரித்து ஆளுக்கு ஒரு பகுதியை கொடுத்து விடுகிறேன்' என்றான். அது கேட்டு அமராவதி மகிழ்ந்தாள். அமரசிம்மன் தான் தன் நாட்டை இரு சம பகுதிகளாக்கி விஜயசந்திரனுக்கும் மாதவனுக்கும் கொடுத்து மகுடாபிஷேகம் செய்தான்.

## தெரியுமா?

| | | |
|---|---|---|
| வானளாவும் கட்டடங்களைக் கொண்ட நகரம் | — | நியூயோக் |
| கனவுக் கோபுரங்கள் நகரம் | — | ஒக்ஸ்போட் |
| ஏழு குன்றுகள் நகரம் | — | ரோம் |
| எரிமலை நகரம் | — | பில்டெல்பியா (U. S. A) |
| புயல் நகரம் | — | சிக்காகோ |
| சினிமா நகரம் | — | லாஸ் ஏஞ்சல்ஸ் |
| புகை நகரம் | — | ஓசாக்கா |
| தங்க வாசல் நகரம் | — | சன்பிரான்சிஸ்கோ |
| தவிர்க்கப்பட்ட நகரம் | — | லாசா (திபெத்) |
| 'கிறனைற்' நகரம் | — | அபேடீன் |

தொகுப்பு: கண்ணன்

## அறுவைகள்

சித்திர புத்திரன்: பிரபோ! தற்பொழுது பூலோகத்தில் அதிகரித்து வரும் அகால மரணங்களினால் நமது யம லோகத்திற்கு வரும் ஜீவன்களைக் கணக்கெடுப்பது கஷ்டமாயிருக்கே?

யமன்: அப்படியா? இப்பொழுதே ஒரு கல்குலேட்டருக்கு ஆர்டர் கொடுத்துவிடும்.

✻ ✻

யமன்: யாழ்ப்பாணத்திற்கு உயிர் பிடித்து வரச் சென்ற எமது எமகிங்கிரர்கள் இன்னும் வரவில்லையே:, என்ன காரணம்?

சித்திர புத்திரன்: சுவாமி! அவர்களும் அங்கே ஷெல்லில் அகப்பட்டுச் செத்துப் போனார்களாம்.

✻ ✻

மனைவி: இதோ பாருங்க... என் சாரியையெல்லாம் செல்அரித்து விட்டது.

கணவன்: (ஷெல் நினைவில்) ஆ... நல்ல காலம். நீ தவறி விட்டாயா?

—அச்சுவேலி

கதிர் மாணிக்கம்

## தெரியுமா?

1. உன் மணிக்கூட்டின் 'செக்கன்ட்' முள் உண்மையில் மூன்றாவது முள்— அது விநாடிகளைக் காட்டும்.

2. திமிங்கலம் தன் கண்களைத் திருப்ப மாட்டாது. அது இடது பக்கம் பார்க்க வேண்டுமானால் தன் முழு உடலையும் திருப்ப வேண்டும்.

3. உன் உடலில் இருக்கும் நீர்த் தன்மை முழுவதும் காய்ந்து விட்டால் உன் நிறை என்ன?— இப்போ இருப்பதில் மூன்றில் ஒன்று.

4. இந்தியாவைப் பற்றி எழுதிப் புகழ் பெற்ற ஆங்கில ஆசிரியர்—ருட்யாட் கிப்ளிங்.

5. உன் தலையில் எத்தனை மயிர்கள் உள்ளன?—60,000

6. முட்டையின் எப் பகுதி குஞ்சாகிறது? —வெள்ளை.

தொகுப்பு: "கண்ணன்"

# மகாவலிகங்கை பேசுகிறது

விநாயகமூர்த்தி சுபாசினி
வேம்படி மகளிர் கல்லூரி

நான் எனது நாடாகிய இலங்கையில் மத்திய பகுதியான மலைநாட்டில் இருக்கும் ஹற்றன் மேட்டு நிலம் என்னும் இடத்தில் பிறந்தேன். நான் பிறந்த இடம் எனக்குத் தங்குவதற்கு வசதியற்றுக் காணப்பட்டது. எனவே நான் தங்க வசதியான இடம் நாடிச் சென்றேன். இப்படி நான் செல்லும் பொழுது என்னிலிருந்து பல கிளைகள் தோன்றி புதுப்பாதைகளை நாடிச் சென்றன.

நான் மலைகளில் இருந்து குதித்துக் குதித்து காடுகளை எல்லாம் கடந்து மாங்கனி, தேங்கனி, வாசமலர்கள் எல்லாம் அள்ளிக்கொண்டு விரையும் காட்சியை மக்கள் கண்டு மகிழ்ச்சி கொண்டார்கள்.

என்றால் தங்களையும் தங்களின் ஆடு, மாடுகள், உடைகள் பாத்திரங்கள் என்பவற்றையும் சுத்தம் செய்தார்கள்.

அத்தோடு நில்லாது என்னைச் சிறைப்படுத்தி தாங்கள் பயன் அடைய எண்ணினார்கள். இயற்கையாகவே நான் வயல்களை, புற்றரைகள் மரம் செடி கொடிகள் என்பவற்றை செழிப்படையச் செய்பவள். ஆனால் மனிதர்கள் என்னை தங்கள் ஆக்கினைக்கு அடிபணியச் செய்ய எண்ணினார்கள். இதனால் கந்தளாய், விக்டோரியா, காசல்ரி, கொத்மலை போன்ற நீர் தேக்கங்களில் என்னை அடைத்து வைத்தார்கள். என் நீரைக்கொண்டு பல மின்சக்திகளை உண்டாக்குகிறார்கள்.

என் நீரைப் பாய்ச்சி பல வயல்களையும் தோட்டங்களையும் செழிக்கச் செய்கிறார்கள்.

இலங்கையின் மிக நீளமான நதியாகிய நான் இரத்தினக் கற்களை மக்களுக்கு அள்ளிக் கொடுப்பதில் பெயர் பெற்றவள். இதனால்தான் நான் மணி கொண்டுவந்து மணி விளக்கு ஏற்றுபவள் என்று கூறுவர் மக்கள்.

இத்தனை புகழ் வாய்ந்த நான் மனிதர்களுக்கு அடிமைப்பட்டு அடங்கி ஒடுங்கிக் கிடக்க விரும்புவேனா? என் உள்ளம் குமுறியது. இரத்தம் துடித்தது. என்னை அடக்கி ஒடுக்கி மனிதர்களை பலிவாங்க எண்ணினேன். கந்தளாய் என்னும் நீர்த்தேக்கத்தை உடைத்துக்கொண்டு வெளியேறினேன். வெளியேறிய நான் கால் போன போக்கெல்லாம் போனேன். எத்தனையோ மக்களை பலிகொண்டேன். எத்தனையோ வீடுகளை இடித்துத் தள்ளினேன். மரங்கள் செடி கொடிகள் எல்லாவற்றையும் அள்ளிச் சென்றேன். என் கோபத்தைக் கண்டு அஞ்சிய மக்கள் உயரமான இடங்களில் தஞ்சம் புகுந்தனர். ஆடுகள், மாடுகள், பறவைகள் போன்ற ஐந்தறிவு பிராணிகள்கூட என் கோபத்துக்குப் பலியாயின. கீழே வரப்பயந்த விஞ்ஞானிகள் ஆகாய விமானங்களில் வந்து பார்வையிட்டனர். எங்கள் நாட்டு அமைச்சர்களால்கூட எனக்குத்தண்டனை வழங்க முடியவில்லை. இவர்களைப் பார்த்து நான் சிரித்தேன். பட்சிகள், குழந்தைகள் பசியினாலும் எனது உக்கிரத்தாலும் படும் அவஸ்தையைக் கண்டு என் உள்ளம் இரங்கியது. இதனால் என் கோபத்தைச் சற்று குறைத்துக் கொண்டேன். இதனை மனிதர்கள் தங்களுக்குச் சாதகப்படுத்திக் கொண்டார்கள். உடைந்த அணைக்கட்டை திருத்த முயற்சி எடுத்தார்கள். நான் விரைந்து சென்று சமுத்திரத்தில் சங்கமமாகி விட்டேன்.

---

## அதிரடிக் கேள்விகள்

நகைச் சுவையுடன் கூடிய இக் கேள்விகளில் சில குறுக்கு வழியிலானவை.

(1) ஒரு மரத்தில் 50 குருவிகள் இருந்தன இதில் 9 குருவிகளை ஒரு வெடியில் ஒருவர் சுட்டு வீழ்த்திவிட்டார். மீதி எத்தனை குருவிகள் இருக்கின்றன?

(2) கண்களை மூடிக்கொண்டு என்ன செய்யலாம்?

(3) ஒரு கடைக்காரரிடம் ஒரு கிலோ சாமான் கேட்டால் அவர் எத்தனை கிலோ நிறுப்பார்?

(4) பெயரிலேயே வால் உள்ள பிராணி எது?

(5) பூக்காத, காய்க்காத மரம் என்ன மரம்?

(6) இமை வெட்டாமல் ஒருவரால் எவ்வளவுநேரம்இருக்க முடியும்?

(7) கேள்வியே பதிலாகவும்வரும் கேள்வி எது?

(8) குரங்கின் கை என்னும் அர்த்தமுள்ள ஊர் எது?

(9) இரு நபர்கள் சண்டை போட்டுக்கொண்டதில் பலத்த காயங்களுக்குள்ளானார்கள். ஆனால் அவர்களின் காயங்கள் அடிபட்டதாலோ, வெட்டுப்பட்டதாலோ ஏற்பட்ட காயங்கள் அல்ல, வேறு எப்படி அவர்களுக்கு காயங்கள் ஏற்பட்டிருக்கும்?

### விடைகள்

(1) மீதி ஒரு குருவியும் இருக்காது; வெடிச்சத்தத்திற்கு எல்லாக் குருவிகளும் பறந்துவிடுமே.

(2) நித்திரை செய்யலாம்.

(3) 2- கிலோ- படியுடன்.

(4) வௌவால்- அதன் பெயரிலும் ஒரு வால்!

(5) பட்ட மரம்

(6) அவர் தூங்கி எழும் வரை

(7) WHAT என்றால் என்ன?

(8) மந்திகை

(9) இருவரும் கடிபட்டதால் ஏற்பட்ட காயங்கள்.

—கதிர் மாணிக்கம்—

# 'சத்யஜித்ரே'

# பத்திக் சந்த்

நாலரை மணியளவில் பாப்லுவை அழைக்க ஹரிநாத் அவன் அறைக்குச் சென்றான். அது தேநீர் வேளை. பாப்லு வீட்டில் இல்லை. ஹரிநாத் இது பற்றிப் பெரிதுபடுத்திக் கொள்ளவில்லை. தெருவின் மூன்றாவது வீட்டில் பாப்லுவின் நண்பன் வசிக்கிறான். பாப்லு நீண்ட இடைவேளைக்குப் பின் அவனைச் சந்திக்க விரும்புவது இயல்பே. அவன் விரைவில் திரும்பி விடுவான்.

பாப்லு தன் நண்பன் ஒருவனைச் சந்திக்கத்தான் சென்றான். ஆனால் ஹரிநாத் நினைத்த நண்பனைச் சந்திக்கவல்ல. தர்வான் தன்னைப் பார்க்காதவாறு, அவன் தோட்டத்துப் பின்பக்கச் சுவரில் ஏறிக்குதித்து லோடன் தெரு, பாக்தெரு இரண்டையும் கடந்து லோவர் சேக்குலர் தெருவையும் பின் விட்டு சிஜரி வீதியை வந்தடைந்தான்; அங்கே பாலம் எங்கே இருக்கிறது என்று விசாரித்து அறிந்து கொண்டான். பாலத்தை அடைந்து அதன் ஒரு பக்கத்துப் படிகளால் ஏறி மறுபக்கத்துப் படிகளால் இறங்கினான். சேரிப் பக்கமாகச்சென்ற பொழுது குழாய்க் கிணறொன்றைச் சுற்றிப் பெண்கள் சிலர் நின்றார்கள். அவர்களோடு நின்ற சில சிறுவர்கள் பாப்லுவை அறிந்து கொண்டு அவனைக் கூப்பிட்டார்கள்.

அவன் அவர்களிடம் சென்று ஹாருண் பற்றி விசாரித்தான்.

'ஹாருண் அண்ணா இங்கு இல்லை அவர் போய்விட்டார்.' சொல்லும் பொழுது அவர்களுக்கு அழுகை வந்தது.

பாப்லுவுக்குத் தலை சுழன்றது.

'எங்கே போய்விட்டார்?'

வயது முதிர்ந்த மனிதன் ஒருவன் லுங்கி அணிந்து உடலின் மேற்பகுதியைச் சாக்குத் துண்டால் மறைத்த வண்ணம் பாப்லு நின்ற இடத்திற்கு வந்தான். 'ஹாருணையா தேடுகிறாய்? அவர் புகையிரத நிலையத்திற்குப் போய்விட்டார். சென்னைக்கு இன்று பயணமாகிறார். சேர்க்கஸ் கொம்பனி ஒன்றின் அழைப்பில் போகிறார்.'

அங்கு நின்ற சிறுவர்களிற் சிலர் பத்தாம் இலக்க பஸ்ஸில் ஹௌரா புகையிரத நிலையத்திற்குப் போகலாம் என்றார்கள். அவர்கள் பஸ் நிலையம் வரை அவனோடு கூட வந்தார்கள். பாப்லு தனக்கு முன் பணமாக உபேன் பாபு கொடுத்திருந்த பணத்தை அப்பொழுதும் தனது சட்டைப் பையுள் வைத்திருந்ததால் தயக்கம் இன்றி, பஸ்சில் ஏறிக்கொண்டான். ஹௌரா புகையிரத நிலையத்தில் பிளாட்போம் டிக்கற் பெற்று உள்ளே சென்றான்.

ஹாருண் அண்ணாவின் புகைவண்டி போயிருந்தால்— ..

"சென்னைப் புகைவண்டி? எந்த மேடை? சென்னைப் புகைவண்டி?"

"ஏழாம் இலக்க மேடை.அதோ ...அதுதான்."

நீண்ட பயணத்திற்கான அந்த நீண்ட புகைவண்டி முறையில் பாதையில் நீண்டு கிடந்தது. பொழுது மையலாகிக் கொண்டிருந்தது' பாப்லு விரைந்தான். சனங்களிடையே நெருக்கியடித்துக் கொண்டு ஹாருணைத் தேடினான். முதலாம் வகுப்பு...... இரண்டாம் வகுப்பு...... இரண்டாம் வகுப்பு... முதலாம் வகுப்பு, பெட்டிகள் படுக்கைகள் பரப்பப் பட்டிருந்த மேடையில் நெளிந்து வளைந்து சன நெருக்கத்தைச் சமாளித்து இனி அப்பால் செல்ல முடியாது தடைப்படும் வரை சென்றான்.

புகையிரத நிலையத் தேநீர்க் கடையின் முன்னால் சனக்கூட்டம் வட்டமாக நிற்பது தெரிந்தது. அருகிற் சென்று ஒருவாறு தலையை நுழைத்து, அங்கு என்ன புதினம் என்று பார்த்தான்: அந்தக் கடைசி நிமிடத்திலும் ஹாருண் மூன்று தேநீர்க் கோப்பைகளை எறிந்தும் பிடித்தும் வித்தை காட்டிக் கொண்டிருந்ததைக் கண்டான்.

சனங்களுக்கூடாக வழியமைத்துக் கொண்டு உள்ளே புகுந்து பாப்லு ஹாருண் அருகில் சென்றான். "என்ன? எப்படி இங்கே வந்தாய்?' ஹாருண் தேநீர்க் கோப்பைகளைக் கடைக்காரனிடம் கையளித்து விட்டுப் பாப்லு நின்ற பக்கம் திரும்பினான்.

"சேரிக்குப் போனாயா? நான் புறப்பட்டு விட்டதாக அவர்கள் சொன்னார்களா?' பாப்லு பதில் இறுக்காததால் ஹாருண் தொடர்ந்தான். "வெஸ்கடேஷ் எழுதிய கடிதம் பற்றி உனக்கு முன்பே சொல்லியிருந்தேன். இது ஒரு நல்ல சந்தர்ப்பம். நான் அதை பயன்படுத்தி ஆக வேண்டும். ஒற்றைச் சில்லுச் சைக்கிளில் கண்களைக் கட்டியபடி ஓடும் வித்தை. இதற்குக் குறைந்தது ஒரு மாதப் பயிற்சியாவது வேண்டும். இதற்காக முன்கூட்டியே சென்னைக்குப் போகிறேன்."

பாப்லு சன்மானப் பணம் பற்றி எடுத்துச் சொல்ல வாய் உன்னினான். ஆனால் அவனால் அதைச் சொல்லக் கூடவில்லை. சென்னைக்கு ஹாருண் செல்வது நல்லதுதான். அவன் அங்குக் கூடுதலாகப் பணம் சம்பாதிக்க வாய்ப்பு உண்டு. உற்சாகமாகவும் காணப்படுகிறான். சன்மானம் பற்றிச் சொல்வதால் அவனது உற்சாகம் குன்றிவிடக்கூடும்.

பாப்லுவின் உணர்வுகள், சிந்தனையோட்டங்கள் ஹாருணுக்குப் புரிந்தன. அவனுக்கு எல்லாம் தெரியும்.

"வீடு உனக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. அப்படித்தானே?"

"இல்லை, ஹாருண் அண்ணா."

'பத்திக் உன்னை மிகுதியும் தொந்தரவு படுத்துகிறான். இல்லையா? நான் அப்படித்தான் நினைத்தேன். உபேன்பாபுவின் தேநீர்க் கடையில் வாழ்ந்த வாழ்க்கை எவ்வளவு மகிழ்ச்சியானது என்று அவன் நினைவுபடுத்துகிறான். பாடசாலை இல்லை. ஹாருண் அண்ணாவும் அவனு

டைய வித்தைகளும் இருக்கின்றன. அவனோடு அலைந்து திரிவதுபோல உற்சாகம் தருவது வேறு ஒன்றுமே இல்லை, அப்படி இல்லையா?''

பாப்லு தலையை ஆட்டினான். ஹருண் அண்ணா சொல்வது எவ்வளவு உண்மையான வார்த்தைகள்!

'ஆனால் நீ அந்த பத்திப் பயலை உன்னிலிருந்து துரத்திவிடு' இல்லாவிட்டால் உன் படிப்பு க்குழம்பி விடும். இது சரியில்லை. பள்ளிப் படிப்பை உதறியதற்கு நான் எவ்வளவு வருந்தினேன், என்னையே வெறுத்துக் கொண்டேன் என்பது உனக்குத் தெரியுந்தானே?'

'ஆனால் நீங்கள் கலைஞர்; ஆச்சரியமான வித்தைகள் காட்டி மக்களைக் கவரவல்லவர்.' 'கலைஞன் நான் மட்டுமல்ல. நீ ஒருகலைஞனாக வரமுடியாது. என்பது உன் எண்ணமா? பெரிய வீட்டில் இருந்துகொண்டு, பள்ளிக்கும் போய்க்கொண்டு நீயும் கலைஞனாகலாம். நான் பந்துகளில் வித்தை காட்டுகிறேன். நீ சொற்களில், வர்ணங்களில், இராகங்களில் வித்தை காட்டலாம். அவற்றைச் சிந்தித்துப்பார். அவற்றோடு நீ கொள்ளும் உறவு, அவற்றிலிருந்து நீ வெளிப்படுத்தும் வித்தை மூலம் நீ பெரும் கலைஞனாகலாம். அதன்பின் நீ ''

பாப்லுவால் மேலும் அங்கு நிற்க முடியவில்லை. காட் விசில் ஊதி விட்டார். ஹருண் அண்ணாவுக்கு அவன் தன் குரலை உயர்த்திச்சொன்னான். "ஆனால் என் அப்பா உங்களுக்குத் தரவேண்டிய சன்மானத்தைத் தரவில்லை. நீங்கள் அதைப் பெறாமல் போகக்கூடாது.''

ஹருண் புகையிரதத்தில் ஏறி மிதிலடியில் நின்றபடி முன்னால் வளைந்து சிரித்தான்.

"உன்னுடைய நிழற்படத்துக்கு என்ன நடந்தது? நீ கொஸ்கொஸ்கின் மகன்போல அல்லவா காட்சி தருகிறாய்?''

ஹருணுக்குத் தெரிந்துவிட்டது. அவன் விளம்பரத்தைப் பார்த்திருக்கிறான்.

புகைவண்டி நகரத் தொடங்கியது. ஹருண் பெட்டியின் குலுக்கலில் மெல்ல அசைந்தபடி இன்னும் மிதிபடியில் நின்றான்.

"சேர்க்கஸ் கல்கத்தாவுக்கு வருமா?'' பாப்லு புகைவண்டிக்குச் சமாந்தரமாக மேடையில் ஓடியபடி கேட்டான். புகையிரதத்தின் வேகம் அதிகரிக்கிறது. அவனால் அதனோடு இனியும் விரைந்து ஓட இயலாது.

"கட்டாயம். கல்கத்தாவின் சனத் தொகை உலகத்திலேயே மிக அதிகம் சேர்வதற்கு வாய்ப்பான் நகரம்.''

ஹருண் கைகளை அசைத்தான்.

அவன் தூர, தூரச்சென்று மறைகின்றான்.

இப்பொழுது பார்வையிலிருந்து முற்றாக மறைந்து விட்டான்.

புகையிரதம் நிலையத்திலிருந்து சென்று விட்டது. அங்கே... பச்சை விளக்கு மீண்டும் தோன்றுகிறது பச்சைவிளக்கின் அசைவு பாதை வெளியாகி விட்டது என்பதன் அடையாளம்.

பாப்லு தன் கண்களைச் சட்டையில் துடைத்தபடி வீடு நோக்கித் திரும்பினான். அவனது சட்டைப் பைக்குள் இரண்டு மரப்பந்துகள் இருந்தன, அவை யாரோ ஒருவனுக்கு, அவனால் மிகவும் நன்கு அறியப்பட்டவனுக்குச் சொந்தமானவை.

முற்றும்.

## அன்னை

அமல அன்னை எம்மகம்
அறிவு புகட்டும் பொன்னகம்
பண்பும் பரிவும் சேர்ந்தெம்மை
வழி நடத்தும் அன்பகம்



பள்ளி சென்று வந்திட
பாடம் சொல்லித் தந்திட
ஆலயங்கள் சென்றிட
அன்பை ஊட்டி வளர்த்திட

ஆச்சி அண்ணன் அக்காமார்
தம்பி தங்கை சகோதரர்
வழி நடத்தும் பெரியார்கள்
நல் அறிவை ஊட்டும் ஆசான்கள்

ஒற்றுமையே எம் பலம்
ஓர் குடும்பம் ஆகினோம்
நாம் வாழும் நல்லகம்
நல் அறிவை ஊட்டும் அன்பகம்

★ ம. சத்தியசிலன்

# பாஸிஸம் வளர்ந்த வரலாறு...

## 'புதுமைப்பித்தன்'



# பேஸிஸ்ட் ஜெர்மனி

### 14- தடிக்கம்பு ஆட்சி

முஸொலீனியின் வெடிகுண்டுப் பேச்சு, கியோலிட்டியின் ராஜிநாமாவுக்குக் காரணமாயிற்று. காரணம், முஸொலீனியின் கண்டனமன்று; சர்க்கார் கட்சியில் நெருக்கடி ஏற்படும் என்று தோன்றியதால், அவன் மந்திரி சபையைக் கலைத்துத் தனக்குச் சௌகரியமான ஒன்றைக் கூட்டுவதற்காக முயற்சித்தான். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இந்தச் சமயம் பார்த்து ஸ்டிரைக் செய்ய ஆரம்பித்தார்கள். இத்தாலி முழுவதும் கலகங்களும் குழப்பங்களும் மறுபடியும் ஆரம்பித்தன. தெருக்களில் பேஸிஸ்டுகள், அபேதவாதிகளுடனும், பொதுவுடைமைவாதிகளுடனும் தீவிரமாகச் சண்டை போட்டார்கள். 1921-ம் வருஷம் வேனிற்காலத்தில் கியோலிட்டிக்குப் பதில் பொனுமி பிரதம மந்திரியானுன். இவன் அபேதவாதத்தில் மிதமான நம்பிக்கை கொண்டவன். நிர்வாக விஷயங்களில் நல்ல திறமை வாய்ந்தவன் என்றும் சொல்வார்கள். கியோலிட்டி, பேஸிஸ்டுகளை ஒரு சமயம் எதிர்த்து, மறுதடவை தழுவிக் கொள்வான். அதுதான் அவனது ராஜதந்திர முறை. ஆனுல் பொனுமி விஷயத்தில் அப்படியில்லை. வெட்டு ஒன்று, துண்டு இரண்டு. ஒன்று நண்பனுக இருப்பான். அல்லது எதிரியாக இருப்பான். பேஸிஸ்டுகளின் கும்மாளம் அதிகமாயிற்று. உக்ரமாயிற்று. ரோமாபுரியிலும் இத்தாலிய எல்லைப்புறமான டிரிஸ்டியிலும் ஒரே விதமான சண்டைதான். ராவன்னு என்ற இடத்தில் அபேதவாதிகளின் பலம் அதிகம். 6000 கறுப்புச் சட்டைத் தொண்டர்கள் அவர்களைத் தாக்கினுர்கள். ஸார்ஸானு என்ற இடத்தில் இதே மாதிரி அபேதவாதத் தாக்குதல் நடத்திச் சென்ற படையை சர்க்கார் துருப்புகள் வழிமறித்தன. கறுப்புச் சட்டைத் தொண்டர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. பலர் களத்தில் மடிந்தனர். அநேகருக்குக் காயம். இந்தச் சமயத்தில் பதுங்கிக் கிடந்த பொதுவுடைமைவாதிகள், சிதறி ஓடும் கறுப்புச் சட்டைத் தொண்டர்கள்மீது பாய்ந்து, சின்னுபின்னப்படுத்தினர். அன்று 18 பேஸிஸ்டுகள் கொல்லப்பட்டனர். 35பேருக்குப் படுகாயம். ஜுலை மாதத்தில் குரோஸெட்டோ என்ற இடத்தில் பதினுன்கு பொதுவுடைமைவாதிகள் கொல்லப்பட்டார்கள்.

போ நதிக்கரை. அமைதியான கிராமம். தூரத்தில் நாய் குலைக்கும் சப்தமும், கோழி கூவும் சப்தமும் தவிர வேறு ஒன்றும் கேட்காது. கிராமவாசிகளுக்கு நல்ல தூக்கம். இன்னும் நன்ருக விடியவில்லை.

பின்காரா என்ற இச்சிறு கிராமத்தில் ஒரு மாதா கோயிலும் அதைச் சுற்றியிருக்கும் நாலைந்து குடியானவர் குடிசைகளும்தான். மாதா கோவிலுக்கு எதிரிலுள்ள ஒரு சிறு குடிசையில்தான் விவசாயிகள் சங்கத்துத் தலைவனுன ஓர் ஏழைத் தொழிலாளி வசித்து வருகிருன். அவனுடைய வீட்டைச் சுற்றிச் சில கறுப்பு உருவங்கள் நெருங்கி வருகின்றன. அப்போதுதான் மணி நான்கு அடிக்கிறது. வந்தவர்களில் இரண்டு பேர் கதவைத் தட்டுகிருர்கள்.

'கிரார்டீனி?'

ஒரு ஸ்திரீயின் தலை, ஜன்னல் வழியாகத் தெரிகிறது.

'யார் அது?' என்று கேட்கிருள்.

'நண்பர்கள் தான். உன் புருஷனைக் கண்டு பேசவேண்டும்!'

'அவர் இரண்டு நிமிஷத்தில் வருவார். சிறிது காத்திருங்கள்!'

வேலி ஒரத்தில் குசுகுசுவென்ற சப்தம். தொழிலாளி, சட்டையைப் போட்டுக்கொண்டு, மெத்தைப் படியில் இறங்கி வரும் சப்தம் கேட்கிறது. கதவைத் திறக்கிருன்.

'என்னப்பா, என்ன வேண்டும்?'

'என்ன வேண்டுமா!'

முதலில் இரண்டுபேர் அவன் மீது பாய்கிருர்கள்; அப்புறம் ஐந்து, அப்புறம் பத்து, அப்புறம் இருபது பேர்! அவனும் தைரியசாலிதான். கதவண்டையிலிருந்து அவ்வளவு பேருக்கும் ஜவாப் சொல்லுகிருன். 'இங்கே வேண்டாம்; குழந்தைகள் இருக்கின்றன! என்றுமட்டும் சொல்கிருன். இந்தச் சத்தத்தைக் கேட்டு, மனைவியும் இறங்கி வந்து சண்டையில் கலந்துகொள்கிருள். இரண்டு குழந்தைகள் மாடிப்படியின் உயர இருந்துகொண்டு அழுதுகொண்டிருக்கின்றன.

'நீதானேடா விவசாயிகள் சங்கத் தலைவன்?' என்கிருன் ஒருவன்.

'போடுடா அவன் மண்டையில்!' என்கிருன் மற்ெருருவன்.

விவசாயத் தொழிலாளியின் மண்டையிலிருந்து ரத்தம் பிரவாகமாக ஓடி, முகத்தை நனைக்கிறது.

'குழந்தைகளை மட்டும் விட்டு விடுங்கள்!' என்று கெஞ்சுகிருன்

விவசாயி.

தடியர்கள் அவனையும் அவன் மனைவியையும் நையப் புடைக்கிருர்கள். விவசாயியின் மண்டை நொறுங்கி விடுகிறது. அவன் பிரேத மாகி விழுகிருன். தலை இருந்த இடம் தெரியாமல் ஆகிவிட்டது. எதிரிகள் ஓடிவிடுகிருர்கள். மனைவி பக்கத்தூருக்கு உதவி கோரி ஒடுகிருள். காரியம் மிஞ்சிய பிறகு, உதவி வந்து என்ன பயன்?

''நேற்றிரவு சான் ஜியார்ஜியோவில் விவசாயிகள் தலைவன் ஒருவனைக் கல்லால் அடித்துக் கொன்றுவிட்டார்கள். பிரேதத்தைக் கல்லைக் கட்டித் தண்ணீருக்குள் இறக்கி விட்டார்கள்!' என்று வதந்தி பரவுகிறது.

ரோஸ் கிராஸ்டாடா என்பது டஸ்கனியில் ஓர் ஊர். அவ்வூர் மேயருக்குப் பின்வரும் கடிதம் கிடைத்தது:

ஐயா, இத்தாலி, இத்தாலிய மக்களுக்குத்தான் சொந்தம். ஆகையால் உம்மைப் போன்ற நபர்களிடம் நிர்வாகம் இருக்கலாகாது. 1921-ம் வருஷம் ஏப்ரல் 17-தேதிக்கு முன், நீர் உமது மேயர் பதவியை ராஜிநாமா செய்து விடுவதால் உமக்குத்தான் நன்மை என்று சொல்லுகிறேன். நீர் இந்தப் புத்திமதியைக் கேட்காமல் இருந்துவிட்டால் விபரீதம் ஏதும் நடக்கலாம். அதற்கு நீர்தான் ஜவாப்தாரியாவீர். உமக்கு நான் கொடுத்திருக்கும் ஆலோசனையைப்பற்றிச் சர்க்காருக்குத் தெரிவித்தால் 13-ந் தேதி புதன் கிழமை நீர் சொர்க்கலோகம் செல்ல வேண்டியிருக்கும்.

(ஒப்பம்)

**டினே பெரோன் கம்பாக்னி,**

நெ. 1, பையாஜா அக்டேயானி,
பிளாரென்ஸ்.

கையெழுத்திட்ட இந்தப் பேர்வழியின் பெயரைக் கேட்டாலே டஸ்கனி முழுவதும் நடுங்கும். அவனது குடும்பமே புராதன காலத்திலிருந்து இன்று வரை கூலிக்காகக் கொலை பாதகம் செய்து வந்திருக்கிறது. இன்று அவன் பேஸிஸ்ட் கட்சிக்கு ஊழியம் பண்ணுகிருன்! பேஸிஸ்ட் சகாக்கள் வசம் மோட்டார் லாரிகள் உண்டு; ஆயுதங்கள் உண்டு. நிமிஷத்திற்குள் டஸ்கனி முழுவதையுமே சுட்டுப் பரப்பிவிடுவார்கள். இந்த உண்மையை அந்த ஊர் பரிபூரணமாக அறிந்து கொண்டது. தவணைக் காலம் முடியும் சமயத்தில் போஸ்டுகளுடைய மோட்டார் லாரிகள் நகரைச் சூழ்ந்து கொண்டன. முதலில் மேயர் வீடும் நகரப் பிரதிநிதி வீடும் தீக்கிரையாகின. விவசாயிகள் வயலில் போய் ஒளிந்து கொண்டார்கள். கொள்ளையிடப்பட்ட வீடுகளுக்கெல்லாம் கறுப்புச் சிலுவைக் குறியிடப்பட்டது. நடுத் தெருவில் மிஷின் கன் நிறுத்தப்பட்டது. கிராமத்து ஹோட்டலை இந்தக் காலிகள் சூறையாடும் போது, போலீஸ்காரர்கள் கையைக் கட்டிக் கொண்டு நின்றுர்கள். மணி ஒன்பது ஆகுமுன், காலிக் கூட்டம் லாரிகளில் ஏறிச் சிட்டாய்ப் பறந்து ஓடிவிட்டது. பத்து நிமிஷ வேலை தான். ஆனல் 10 பேர் கொல்லப்பட்டனர், 30 பேருக்குக் காயம், 15 வீடுகள் தீக்கிரையாயின! வெகு நேரம் கழித்து, பொலீஸ்படை தலையை நீட்டியது. ஒருவரையும் கைது செய்ய அதற்குத் தைரியமில்லை. மோட்டார் லாரி ஒன்றில் ஒருவன் செத்துக் கிடக்கிருன். இரண்டு கிழட்டுக் குடியானவர்கள் வீட்டு வாசலில் கொல்லப்பட்டுக் கிடக்கின்றனர். ஒரு தாயின் கையிலிருந்த குழந்தையைப் பிடுங்கிக் கொன்றுர்களாம். இத்தாலி முழுவதிலும் இதே நிலைதான்!

## 15. இல்தூஸே ஆகிருன்

முஸொலீனியும் பொனுமியும் சளைக்காமல் சண்டை போட்டார்கள். ஒருவன், 'பொதுவுடைமைக் காலித்தனத்திலிருந்து தேசத்தை விடுதலை செய்வதாக'ச் சொல்லிக் கொண்டு கொன்று குவித்தான். மற்றவன், 'அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக' சட்டத்தின் சார்பில் நின்றுகொண்டு, அதே சேவையைச் செய்து முடித்தான். எல்லையில்லாமல் எத்தனை நாள் தான் இந்தச் சேவையில் ஈடுபடுவது?

1921-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 3-ந்தேதி முஸொலீனியும் பொனுமியும் சமாதானமாகப் போவதென்று உடன்படிக்கை ஒன்று செய்து கொண்டார்கள். இத்தாலியப் பிரதிநிதித்துவ சபைத் தலைவர் முன்னிலையில், இந்த உடன்படிக்கையில், முஸொலீனி, பேஸிஸ்ட் கட்சியின் சார்பாகக் கையெழுத்திட்டான்.

தலைவர்கள் நினைத்த நேரத்தில் சமரசம் பேசி, சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டு விடலாம்; கட்சி அங்கத்தினர்கள் அந்த முடிவை ஏற்க வேண்டும் என்பது அவசியமன்று என்ற உண்மையை முஸொலீனி உடனே தெரிந்து கொண்டான். மற்றக் கட்சிகள் சிறிது ஒடுங்கினலும், பேஸிஸ்டுகள் குருவுக்கு மிஞ்சிய சீடர்களாகிவிட்டார்கள். எதற்கெடுத்தாலும் லாட்டியை விளையாட விட்ட கட்சி அங்கத்தினர்களுக்கு, அதைக் கீழே வைத்துவிடுவதற்குப் பிரியமில்லை. பல இடங்களில் மாகாணத் தலைவர்கள், முஸொலீனிகையெழுத்திட்ட சமாதான ஒப்பந்தத்தை ஏற்க மறுத்து விட்டார்கள்.

முஸொலீனியின் சொந்த மாகாணமான ரோமாக்னு, ரீஜியோ எமிலியோ, வினட்டோ முதவியவற்றிலும், ஒப்பந்தமாவது மண்ணுங்கட்டியாவது என்று தள்ளிவிட்டார்கள்.

கறுப்புச் சட்டைத் தொண்டர்கள், கிரேனர் கிராண்டி தலைமையில், இந்த ஒப்பந்தத்தை மீறுவதற்காகவே விசேஷ சிரத்தை எடுத்துக் கொண்டு, தொண்டாற்றினர்கள்.

வேறு வழியில்லை. அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொள்வதென்ருல், அவர்களே ஒப்புக்கொண்டு தலைவணங்கும்படி செய்ய வேண்டும்.

1921-ஆகஸ்ட் 19-ந் தேதி கட்சியின் நிர்வாகக் கமிட்டிக்கு முஸொலீனியின் ராஜிஞமாக் கடிதம் கிடைத்தது. 19-ந் தேதி நடந்த கமிட்டி கௌன்ஸிலில் கூட்டம், 'அது பெரிய விஷயம்; காங்கிரஸ்தான் முடிவுகட்ட வேண்டும்' என்று ராஜிஞமாவை ஏற்க மறுத்தது.

1921- நவம்பர் 6-ந் தேதி ரோமில் அகஸ்டியோ கான்ஸர்ட் ஹாலில் கறுப்புச் சட்டைத் தொண்டர்களின் மாபெருந் தேசிய காங்கிரஸ் கூடியது. முஸொலீனி கூட்டத்திற்கு வந்திருந்தான். ஆனல் அதன் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவில்லை.

ஆட்களை ஏவி வலையை விரித்தாய்விட்டதே! எல்லோரும் வந்து கண்ணியில் மாட்டிக் கொள்ளும் வரை பொறுமையை இழப்பது சாதுரியமல்ல, அல்லவா?

ஒரு பேஸிஸ்ட் பிரதிநிதி எழுந்தான். பேஸிஸ்டுகளின் சேவையைப் புகழ்ந்தான்; கட்சி ஒன்றிலிருந்து பத்தாகி, நூருகி, ஆயிரம் பதினயிரமாக வளர்ந்த கதையை விரித்தான். 'வளர்த்தவன் அதோ தனியாக உட்கார்ந்திருக்கிருனே!' என்று சுட்டிக்காட்டி ஏங்கினன்.

கறுப்புச் சட்டைத் தொண்டர்களும் மனிதர்கள் தானே! பிரசங்கத்தில் மயங்கினர்கள். முஸொலீனியைப் பேசும்படி கேட்டுக்கொண்டார்கள். கொன்கைக்கும் நடத்தைக்கும் வித்தியாசம் ஏற்பட்டு விட்டால், இனி தன்னல் நடத்தமுடியாது என்றும், 'ஆனல் நான் சொல்லுகிறபடி, நான் செல்லும் திசையில், என்னைப்

பின்பற்றி வருவதற்குத் தயாராக ஐக்கியப்பட்டால் தலைமைப் பதவி வகிக்க முடியும்!' என்று 'கண்டிஷன்' பேசினன் முஸொலீனி.

கிராண்டி எழுந்து நின்றான். 'இனிமேல், ஒற்றைப் பாறுங்கல் மாதிரியாகக் கட்சியின் ஐக்கியம் இருக்கும்', என்று உறுதி கூறினன்.

கிராண்டியும் முஸொலீனியும் இத்தாலிய சம்பிரதாயப்படி தழுவி முத்தமிட்டுக்கொண்டனர்.

முஸொலீனி 'இல் தூஸே' ஆனன்; அதாவது, அவன் விதித்த உத்தரவுக்கு அடிபணிவது தவிர, கறுப்புச் சட்டைத் தொண்டர்களுக்கு வேறு தர்மம் கிடையாது. இதற்கு முன்பு வெறும் கலகக்காரக் கும்பலாக - பேஸிஸ் டி' கம்பாட்டிமென்டோ என்று - இருந்தது, இப்போது ஒன்ருகப் பிணிக்கப்பட்டு, பேஸிஸ்ட் தேசீயக் கட்சியாயிற்று.

பெனிட்டோவின் கொள்கையில் - அதாவது, அவன் பட்டவர்த்தனமாகப் பேசிவந்த கொள்கையில் - ஒரு புது மாறுதல் ஏற்பட்டது. மாஜி - அபேதவாதியாக இருப்பதற்கும், மன்னராட்சியில் அசையாத நம்பிக்கை வைப்பதற்கும் நெடுந்தூரமிருந்தாலும், பெனிட்டோ அந்தரடிப்பதில் நிபுணன்; மேலும் அவன் ஆஸ்பத்திரியில் படுத்துக் கிடக்கும்பொழுது, ராஜாவே நேரில் வந்து, 'கார்ப்பொரல் பெனிட்டோ, உம்மைப் பாராட்டுகிறேன்!' என்று சொல்லவில்லையா?

மாஜினி போன்று மூன்ருவது மறுமலர்ச்சி உண்டு பண்ணப் போவதாகச் சொல்லிக்கொண்டான் முஸொலீனி. 1922 - ம் வருஷம் செப்டம்பர் 20 - ந் தேதி, உன்ஞதன் என்ற மாகாணத் தலைநகரில், தானும் மாஜினியின் வாரிசு என்பதை விளக்கி விரிவாகப் பிரசங்கம் செய்தான்.

அதற்கப்புறம் 'போபோலோடி' இத்தாலியா' இந்தக் கொள்கையைப் படிப்படியாக, பேஸிஸ்டுகளிடையே உருவேற்ற ஆரம்பித்தது.

இந்தச் சமயத்தில்தான் லிபரல் கட்சித் தலைவனும் 'கொரீயர் டெல்லா ஸெரா' என்ற பத்திரியின் சொந்தக்காரனும், செனட் (மேல் சபை) பிரதிநிதியுமான அல்பர்டினி கூட்டுக் கட்சி ஸ்தாபித்து, மந்திரிசபையைக் கைப்பற்ற முஸொலீனியுடன் பேச்சு ஆரம்பித்தான். எல்லாம் பேச்சோடு நின்றது.

கையில் ராணுவ வேலை செய்யக்கூடிய கட்சி இருக்கிறது; சர்க்காரின் ராணுவத்தையும், ராஜாவையும் பயப்படுத்தாத புதிய ராஜாங்கக் கொள்கையால் நம்பிக்கை அதிகரிக்கிறது. மிரட்டியே மந்திரிப் பதவியைக் கைப்பற்ற வசதியிருக்கும் பொழுது, சமரசம் என்ன வேண்டியிருக்கிறது?

அபேதவாத - பொதுவுடைமைக் கட்சிகள், சமரசம் என்பது நிராகரிப்பதற்காகவே செய்து கொள்ளப்படுகிற தென்பதைப் பின்னுல்தான் தெரிந்து கொண்டன. எப்பொழுதும் பின்னுல் வருகிறவர்கள் பாடு கொஞ்சம் இரண்டாம் பட்சம்தானே! 'தொழிலாளர் ஐக்கிய ஸ்தாபனம்' ஒரு பொது ஸ்டிரைக்கை ஆரம்பித்தது. வெட்டிச் சாய்க்கும் வேலையை ரொம்ப மும்முரமாகவே நடத்தியது. ஆனல் நான்கு லட்சம் கறுப்புச் சட்டைத் தொண்டர்கள் சேவை செய்து வரும்பொழுது, எதிராக என்ன செய்ய முடியும்? இருபத்து நான்கு மணி நேர நோட்டீஸ் கொடுத்து வேலை ஆரம்பித்தார்கள் பேஸிஸ்டுகள்.

மிலானிலும், ஜீனேவாவிலும் அபேதவாத முனிஸிபல் அங்கத்தினர்கள் உதைத்து விரட்டப்பட்டார்கள். முனிஸிபல் ஸ்தாபனங்கள் பலவற்றை பேஸிஸ்ட் தொண்டர் படை ஆக்கிரமித்துக் கொண்டது.

"பொது ஸ்டிரைக்கைத் தொலைத்ததுடன், பேஸிஸம், தனது சரித்திரத்தில் இரததம் தோய்ந்த மகத்தான பக்கத்தை எழுதியது. எதிரிகளை அவர்களது கடைசிக் குகையிலிருந்து விரட்டியதே அது. சர்க்கார் ஸ்தானத்தை வகித்து, அமைதியையும் நல் வாழ்வையும் நிலைநாட்டமுடியும் என்பதை அதன் மூலம் இத்தாலிய மக்களுக்கு பேஸிஸம் நிரூபித்திருக்கிறது. 1922 ஆகஸ்ட்டில் தொழிலாளர் ஐக்கிய ஸ்தாபனம் தோற்றுவிட்டது. இப்பொழுது அரசியல் அரங்கத்தில் ஜனநாயக-விபரம் அரசாங்கமும் ஆயுதம் தாங்கிய பேஸிஸமுமே நிற்கிறது?"

இவ்வாறு முஸொலீனி பத்திரிகையில் எழுதினன்.

1922-ம் வருஷம், சர்க்கார், நெருக்கடியிலிருந்து. நெருக்கடிக்குத் தாவிச் சென்றது. பொனுமி மந்திரி சபை மூன்று தடவை மாறி, அப்புறம் ஒட்டமெடுத்தது. அதற்கப்புறம் கியோலிட்டியின் சீடன் என்று சொல்லத்தக்க ஸினேர் பாக்டா பிரதம மந்திரியானன். 1922-ம் வருஷம் வேனிற் காலத்திற்குள், அவனும் இரண்டு மூன்று மந்திரி சபை கூட்டிவிட்டான்.

இந்தச் சமயத்தில்தான் பாங்காடி ஸ்கோன்டோ என்ற சர்க்கார் பாங்கி முறிந்து போயிற்று.

இத்தாலியின் அயல் நாட்டுக் கொள்கையோ, கையாலாகாதவன் கட்சி பேசுவது போல் இருந்தது. சமாதான மகாநாட்டில் இத்தாலியைச் சௌகரியமாக- மறந்துவிடாமல்-அசட்டை செய்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் மற்றொரு சம்பவம் நடந்தது.

1922, பிப்ரவரி 6-ந் தேதி, அச்சிலிராட்டி பதினேராவது போப் என்ற பெயரில் பேதுரு குருபீடத்தில் அமர்ந்தார். அவர் 1921-ம் வருஷத்தில் மிலான் ஆர்ச் பிஷப்பாக இருந்தவர். முஸொலீனி போல்ஷிவிஸத்தின் எதிரி என்று அப்பொழுதே அவருக்குத் தெரியும்.

பூஜ்யர் பதினேராவது பாப்பரசருக்கும் போல்ஷிவிஸம் தெரியும். அவரும் அதன் எதிரிதான்.

எனவே, அரசியல் காரணங்களுக்காக முஸொலீனியைப் பக்தனுக்கிய பெருமை அவருக்கே உரியது.

## 16. 'சிம்மாசனத்தை ஒதுக்கிப் போடு!'

மூன்ருவது விக்டர் இமானுவல் 1869 ம் வருஷம் பிறந்த ஐரோப்பிய மன்னர்களுள் ஒருவன். சதிகாரனின் கோபாவேசத்திற்குப் பலியான தன் தகப்பனுருக்குப் பின் சிம்மாசனம் ஏறினன். அன்று முதல் இன்றளவும் சௌகரியமாக வாழ்ந்து வருவதில் அவன் தனிச் சிறப்புப் பெற்றவன். வாலிபத்தில் அவனுக்கு ராணுவசேவையுமுண்டு. மாண்ட ஜெனெரியின் இளவரசியான எலிஞ அவன் மனைவி. இவன் தன் வாழ்க்கையிலேயே இரண்டு தடவைதான் மன்னனுக நடந்து கொண்டான்: அதாவது, மன்னனின் அதிகார ஆதிக்கத்தை வகித்தது இருமுறைதான். 1915-ம் ஞு பிரதம மந்திரி கியோலிட்டியை டிஸ்மிஸ் செய்தது முதல் முறையாகும்.

தடிக் கம்பு அமுல் மூலம் நாட்டைக் கலக்கிய கறுப்புச் சட்டைத் தலைவனுன பெனிட்டோ, முடியரசின் மீது புதிதாக அபார நம்பிக்கை கொண்ட மாஜி-அபேதவாதியானபெனிட்டோ, மன்னனின் பின்னணியில் நின்று அவனைச் சூத்திரப் பாவையாகப் பொம்மலாட்டங் காட்டி, நிர்வாகத்தை நடத்துவதற்கு வசதியுண்டு என்று கண்டு கொண்டான். அதிகாரக் கைலையங்கிரி கைக்கு வாக்காக இருந்தது. இலகுவில் தூக்கித் தோளில் வைத்துக்கொள்ளலாம் என்று நினைத்தான், நாட்டைக் கலக்கிய தடிக் கம்பு, சர்க்கார் நிர்வாகத்தையும் மண்டையிலடித்துக் காலின் கீழ்க் கொண்டுவந்து போடாதா என்று அவனுக்கு நம்பிக்கை, வடக்கு இத்தாலியில் கட்சியைப் பலப்படுத்திக் கொண்ட முஸொலீனி, தென்

திசை திரும்பினன், அக்டோபர் 24-ந் தேதி நேபிள்ஸ் நகரில் நடந்த பேஸிஸ்ட் காங்கிரஸுக்கு ஆயுத பாணிகளான தொண்டர்கள் 35,000-க்கு மேல் வந்திருந்தனர். கட்சி பலம் தகுதியாக இருக்கிற தென்பதை பேஸிஸ்ட் காங்கிரஸ் எடுத்துக் காட்டியது.

நேபிள்ஸ் திரும்பிய பெனிட்டோ, தனது புரட்சிகரமான திட்டத்தை நடத்த ஆரம்பித்தான். நேபிள்ஸ் மகாநாடு நடைபெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, ஒரு நடு நிசியில் இரகசியக் கூட்டத்தில் ரோமாபுரிப் படையெடுப்பு ஏற்கனவே வகுக்கப்பட்டு விட்டது. யுத்தரங்கத் தளகர்த்தர்களாகப் பின்வரும் நால்வர் தெரிந்தெடுக்கப்பட்டனர்:

1. பால்போ

2. டிவெச்சி

3. டிபோனே

4. மைக்கேல் பயாங்கி

இந்நால்வர்களும் நான்கு திசைகளிலிருந்து கறுப்புத் தொண்டர் படையை ரோமாபுரி நோக்கி நடத்திச் செல்வது என்று தீர்மானிக்கப்பட்டது. முற்றுகைத் திட்டம் வருமாறு:

1. முதலில் முக்கியத் தலை நகரங்களிலுள்ள சர்க்கார் காரியாலயங்களைக் கைப்பற்றிவிடுதல்.

2. பேஸிஸ்ட் துருப்புக்களைத் தலைநகருக்கு 50 மைல் வடமேற்கிலுள்ள ஸாந்தாமெரிநல்லாவிலும், கிழக்குத் திசையில் 26 மைல் தூரத்திலுள்ள டிவோலியிலும், டைபர் நதி தீரத்தில் ரோமாபுரிக்கு 19 மைல் தூரத்திலுள்ள மாண்டர் ரோடோண்டோ என்ற இடத்திலும் ஏராளமாகத் திரட்டுவது.

3. யுத்தத் தொண்டர் படைகளுக்குத் தலைமைஸ்தலம் பெருகியாவில் அமைப்பது.

4. போலிக்னேவில் மூல பலத்தை நிறுத்துவது.

5. மந்திரி சபையை டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்று சர்க்காருக்கு எச்சரிக்கை கொடுப்பது.

6. மூன்று தளங்களை ரோமாபுரிக்கு அனுப்பி எந்த விதத்திலும் சர்க்கார் காரியாலயங்களைக் கைப்பற்றுவது.

7. இம்மாதிரி முன்னேறிச் செல்லும் படைகளுக்குப் பாதுகாப்பிற்காகத் தென்பகுதிப் பேஸிஸ்டுகள் காவல் அமைப்பார்கள்.

தோற்றுப் போனல்......

அதற்குத் திட்டம் வருமாறு:—

1. கறுப்புச் சட்டைத் துருப்புக்கள் வடகிழக்காக அம்ரியாவுக்குப் பின்வாங்கிச் செல்லும். போலிக்னே மூலபலம் அதற்குப் பாதுகாப்பாகச் செல்லும்.

2. மத்திய இத்தாலியிலுள்ள ஏதாவது ஒரு நகரத்தில் பேஸிஸ்ட் ஆட்சியை ஏற்படுத்துதல்.

3. மான்ட்வா, பிரிமோனு, எமெலியா, ரோமாக்னு முதலிய இடங்களில் கறுப்புச் சட்டைத் தொண்டர்களை ஏராளமாகத் திரட்டி நிறுத்துதல்.

4. மீண்டும் ரோமாபுரியைத் தாக்க முயல்வது.

அக்டோபர் 27-ந் தேதி இரகசியமாகப் படை திரட்டுவது என்று யுத்த கௌன்ஸில் நால்வர் கமிட்டி (க்வாட்ரம் வெரேட்) நிர்ணயித்தது. 24-ந் தேதியே பெருகியாவில் ராணுவத் தலைமைக் காரியாலயம் அமைக்கப்பட்டு, நிர்வாகப் பொறுப்பு ஜெனரல் டிபோனே வசம் ஒப்புவிக்கப்பட்டது. பால்போ முன்னேறிச் செல்லும் படைகளுக்குத் தலைமை வகித்தான். பயாங்கி ஒற்றுவேலை இலாகாவை நிர்வகித்தான். டிவெச்சி கிராண்டியின் ஒத்தாசையால் மிகவும் நுட்பமான ராஜதந்திர வேலையை ஏற்றுக்கொண்டான். இவ்வாறு, முஸொலீனி மந்திரி சபை அமைப்பதற்கு, அரசனையும் சர்க்காரையும் இணங்கவைக்கும் நயமான சூழ்ச்சிகளுக்குள் இறங்கினுர்கள். பேஸிஸ்டுகளின் இந்த ரகசிய முயற்சி கத்தோலிக்க சர்ச்சுக்கு எப்படியோ தெரிந்து விட்டது. பாதிரிகள், முற்றும் துறந்தவர்களானுலும் முன் ஜாக்கிரதையுள்ளவர்களல்லவா? மத சம்பந்தமாக, முக்கியமாகக் கத்தோலிக்க சர்ச் சம்பந்தமாக, பேஸிஸ்டுகள் எவ்வித நோக்கம் கொண்டிருக்கிருர்கள் என்பதை அவசர அவசரமாகப் பெருகியாவிலிருக்கும் பேஸிஸ்ட் தலைமைக் காரியாலயத்திற்கு ஆள்விட்டுக் கேட்டார்கள். 'சர்ச்சுகள் பாதுகாக்கப்படும், கௌரவிக்கப்படும்' என்ற பதில் வந்தது.

## அட்டைப் படக் கதைப் போட்டி

**இம்மாத அமிர்த கங்கையின் அட்டைப் படத்தில் அழகுற அமைக்கப்பட்டிருக்கும் படத்தை பாருங்கள். இக்காட்சியை மையமாகக் கொண்டு ஒரு சிறுகதையை யாத்து எமக்கு அனுப்பி வையுங்கள். தெரிந்தெடுக்கப்டும் முதலாவது சிறுகதைக்கு ஒரு பரிசிலும் உண்டு.**

**சிறுகதை ஆக்கங்கள் புல்ஸ்காப் தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட்டு மொத்தமாக நான்கு பக்கங்கட்குள் அடங்க வேண்டியது அவசியம்.**

**140, நாவலர் வீதி**
**யாழ்ப்பாணம்.**

**ஆசிரியர்**
**அமிர்தகங்கை**


உங்கள் முதலீட்டுக்கு
மாதாந்தம்
30%
வட்டி
100%
பாதுகாப்பு
'LANKA'
யாழ். தமிழர் நிதியம்.
140, நாவலர் வீதி - யாழ்ப்பாணம்.
(மனோகரா தியேட்டர் அண்மையில்.)
22437